ഗ്രന്ഥ ശേഖരം
അലമാര 23 തട്ട് 6
15 Dec 1937

JL
[illegible] II, NISAD
M.37.23.6
182535

321
(௩௨௧)
Regd. No. M. 1190. 1937 December. ஈசுவர ஹு மார்கழி மீ

# ஆனந்தபோதினி




ANANDA BODHINI

Vol. 23. பொருளடக்கம். No. 6.

பக்கம்
1. கடவுள் வணக்கம் ... 401
2. சேவா லட்சியம் ... 403
3. ஸர். ஜகதீச சந்திர போஸ் ... 406
4. பாப்பா பாட்டு ... 41[illegible]
5. சாந்தமில்லையேல் ஸௌக்கிய-மில்லை, வீர ராமு ... 417, 422
6. தலைக் கொடையாளி ... 429
7. நுட்ப புத்தி ... 432
8. உதிர்ந்த மலர்! ... 435
9. வைத்தியம், ரோஜா வடு 441, 444
10. "மணிமேகலை" ஆராய்ச்சி ... 449
11. கிரெட்டுக் 'கொள்ளி' ... 458
12. அறப்பளீசுர சதகம் ... 462
13. ஹிந்துமத பாடசாலை ... 465
14. விசித்திர விநோதம் ... 468
15. ஆசிரியர் குறிப்புக்கள் ... 470
16. பாலர்கள் பக்கம் ... 474
17. மாயா விரோதி ... 477

8 JAN

# "ஆனந்தபோதினி"

## சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| வருடம் 1-க்கு தபாற்கூலி யுள்பட | இந்தியா, ஸிலோன் ... ... | 1—0—0 |
| | பர்மா, பினங், ஸிங்கப்பூர் தென் ஆப்ரிக்கா, பசரா, மெசபொடேமியா முதலிய வெளி நாடுகளுக்கு ... ... | 2—0—0 |
| நடந்துகொண்டிருக்கிற வருடத்திய தனிச் சஞ்சிகை விலை | | 0—2—0 |
| சென்ற வருடங்களின் தனிச் சஞ்சிகை விலை | | 0—3—0 |

**ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.**

(1) சந்தாதாரராய்ச் சேருகிறவர்கள் **பூரணமாகப் பெயரை** எழுதியனுப்பவேண்டும்.

(2) சந்தாத் தொகையை முன்னுடிச் செலுத்தியாவது அல்லது வி. பி. யில் பணம் கட்டியாவது பத்திரிகை பெற்றுக்கொள்ள வேண்டும். எப்போது சேர்ந்தாலும் அவ்வருட ஆடி மூ முதல்தான் கணக்கு வைக்கப்பட்டு ஆடிமாத சஞ்சிகை முதல், பத்திரிகை அனுப்பப்படும்.

☞ (3) சஞ்சிகையை வி. பி. யில் வரவழைப்போர் ரிஜிஸ்டர் சார்ஜ் 8-அணாவோடு (18-4-1921 முதல் மணியார்டர் கமிஷன் 10-ரூபா வரையில் 2-அணா வாகையால்) அந்தச் கமிஷன் 2-அணா, வி. பி. க்குத் தபால் சார்ஜ் 0-0-6. ஆக 0-5-6-அதாவது 6-அணா சேர்த்து ரூபா 1-6-0 கட்டி வி. பி. யைப் பெறவேண்டும். மணியார்டர் அனுப்பினுல் 1-2-0 மட்டுமே யாகும். ஆதலால் முன்னுடி மணியார்டர் அனுப்பிப் பத்திரிகை பெற்றுக்கொள்வதே நலம், இதைக் கவனிக்கவும்

(4) யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் அவர்கள் அம் மாதம் 15-ம் தேதி வரையில் பார்த்து அதற்குமேல் அதே தமிழ்மாத முடிவிற்குள் அவ்விவரத்தைத் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும். பிறகு தெரிவிப்போர் கிரைய மனுப்பிப் பெறவேண்டும்.

(5) இடம் மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் புது விலாசத்திற்கு வந்து சேரும் வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு **செய்துகொண்டு நமக்குப் புது விலாசத்தை யறிவிக்கவேண்டும். இன்றேல் அடுத்த சஞ்சிகை பெரும்பாலும் பழைய விலாசத்திற்கே போய்விடும். அதற்கு நாம் பொறுப்பாளியல்ல.**

(6) **சந்தா நம்பரைக்** குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா. அத்தகைய கடிதங்களால் நேரிடும் தவறுதல்களுக்கு நாம் **பொறுப்பாளி யல்ல.** பதிலை விரும்புவோர் **ரிப்ளை கார்டாவது தபாற் பில்லையாவது** அனுப்பினுலன்றி விடை யளிக்கப்பட மாட்டாது.

(7) வியாசங்களை எழுதுவோர் சுத்தமாக இலக்கணப் பிழையின்றித் தங்கள் உண்மைப் பெயருடன், மத தூஷணை, பிறர் தூஷணை, ராஜாங்க விரோதம் முதலியவையின்றியும், பொது ஜனங்கள் விரும்பக்கூடியனவாகவும் எழுதவேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| **Life Subscripion** | இந்தியா, சிலோன் | ரூபா | 15—0—0 |
| **ஜீவிய சந்தா** | பர்மா, முதலிய வெளிநாடுகளுக்கு | ,, | 25—0—0 |

---

*Telephone* No. 3005. *Telegram* :—"Ananda Bodhini", Madras.

விலாசம்:— நா. முனிசாமி முதலியார், "ஆனந்தபோதினி"

**6, லாயர் சின்னதம்பி முதலி தெரு, தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.**


ஸ்ரீமத்

# விவேகானந்த சுவாமிகள்

## விரிவான திவ்ய சரித்திரம்

**(2-ம் பதிப்பு) இதன் விலை ரூ. 4.**

**ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை ரூ. 3.**



OFFICE OF THE ...
8-JAN 1938

சுவாமிகளின் அதிஅற்புதமான சரித்திரமும், அரிய உபதேசங்களும் அனுபவசாரமான கடிதங்களும், மேலான பிரசங்கங்களும் இடையிடையே விளங்குகின்றன. சுவாமிகள் அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய பிரதேசங்களில் பிரசங்காரம் செய்து வேதாந்த விஷயங்களை விரிவாக உபன்யசித்து ஹிந்து மதத்தை நிலைநாட்டியது இதில் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது. இவ்வளவு விரிவான சரித்திரம் இதுவரை எவராலும் வெளியிடப்படவில்லை.

**ஆனந்தபோதினி ஆபீஸ்,**

**தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.**

ஓர் சிறந்த தமிழ் நூல் வெளியீடு

# நாலடியார் மூலமும்

## விரிவான உரையும்.

செம்பூர் வித்வான்-வீ. ஆறுமுகஞ் சேர்வை அவர்களைக்கொண்டு இந்நூல், மிகத் தெளிவாகவும், விரிவாகவும் பழைய உரைகளையும் தழுவிப் புதிதாக எழுதப்பட்ட சிறந்த உரையுடன் இப்போது வெளிவந்திருக்கிறது.

இந் நாலடியார் என்னும் நூலானது, ஏறக்குறைய இரண்டாயிரம் வருடங்களுக்குமுன் கடைச்சங்க காலத்தில், பாண்டியனிடம் வந்திருந்த ஜைன முனிவர் பலரால் தனித்தனி வெண்பாக்களாக இயற்றப்பட்டு பின்னர் அப்பாண்டியனால் தொகுக்கப்பட்டுப் பெயரிடப்பட்ட சிறந்த நீதி நூலாகும். உலகத்தில் பல தேசத்தாராலும், பல சமயத்தாராலும் கொண்டாடப்படும் திருக்குறளோடு ஒப்புமை யுடையது, உலகத்தார் பலருக்கும் பொதுவாகப் பற்பல நீதிகளை எடுத்துரைக்கக் கூடியது. உலகத்தில் மனிதர்க்குப் பயன்தரத் தக்க நூல்களில் இது சிறந்ததாகும். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் இது முதன்மை பெற்றதாகும். மனிதர் அடையவேண்டிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருடார்த்தங்கள் நான்கினையும் அடைதற்கு இந்நூல் நல்ல வழிகாட்டி யாகும். மாணவர்களும், மற்றவர்களும் அவசியம் படிக்கத் தக்க நூலாகும்.

இதற்குப் பிற்காலத்தில், 'பதுமனார்' என்னும் சிறந்த புலவரொருவர், பால், இயல், அதிகாரம் என்னும் பாகுபாடுகளைச் செய்து சிறந்த உரையொன்றும் இயற்றி யிருக்கின்றார். வேறு சில சிறந்த புலவர்களும் சில உரைகள் எழுதியிருக்கின்றார்கள்.

இது, அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பால்களையும், பதினொரு இயல்களையும், நாற்பது அதிகாரங்களையும், நானூறு செய்யுட்களையு முடையது.

இந்நூலுக்கு, முன் பதுமனார் முதலியவர்களால் இயற்றப்பட்ட சில உரைகள் இருப்பினும், அவை சிறந்த கல்வி யறிவுடையாரே படித்துணரத் தக்க பழந்தமிழ் நடையில் அமைந்திருப்பதாலும், ஆரம்பக் கல்வி யுடையாரும், சாமானியக் கல்வி யுடையாரும் தக்க ஆசிரியரிடம் பாடங்கேட்டுத் தெரிந்து கொள்ளக் கூடியனவா யிருப்பதாலும் எவரும் தாமே படித்துணரத் தக்க விதத்தில் இக்காலத்துக்கேற்ப எளிய தமிழில் தெளிவான உரையொன்று எழுதி வெளியிட வேண்டு[illegible]ம்மிடம் கேட்டுக்கொண்டதற் கிசைந்து, அவர்கள் விருப்[illegible] எழுதி வெளியிடப் பெற்றிருக்கிறது. இ[illegible]யும், [illegible] விசேடவுரையும் எவர்க்கும் சந்தேக முண்[illegible]ாதபடி பொருள்க[illegible] விளக்கிக் காட்டி மிகத் தெளிவாக எழுதப்பட்டிருக்கின்றன. ப[illegible]ரைப் பகுதிகள் மிகத் தெளிவாக விரித்தெழுதப்பட்டிருக்கின்றன. [illegible]மைப்பிற்கு விரோத மாகவும், முன்னுக்குப்பின் முரணாகவும் பொரு[illegible] சந்தேகங்களை விளைவித்துக் கொண்டிரு[illegible] உரைப்பகுதிகளில் ஐயம் நீங்குமாறு பொருத்தமான பொருள்கள் விளக்கப்பட்டிருக்கின்றன, புதிய உரைகளும் ஆங்காங்கே விரித்தெழுதப்பட்டிருக்கின்றன, சில செய்யுட்களின் சரியான பொருள் விளங்காமல் மயக்கத்தை உண்டாக்கிக் கொண்டிருந்த உரைகள், வேறு நூல்களின் ஆதாரங்களைக்கொண்டு சந்தேகம் நீங்கச் சரியான விதத்தில அமைக்கப்பட்டிருக்கின்றன. வேறு நூல்களில் விளங்காதிருந்த பொருள் இந்நூற் செய்யுளின் ஆதாரத்தைக்கொண்டு விளக்கப்பட்டிருக்கின்றன. இதுவரை இந்நூலுரைகளிற் காட்டப்படாத பற்பல சிறந்த கருத்துக்கள் இவ்வுரையில் நூதனமாக எழுதப்பட்டிருக்கின்றன. இந்நூற் முதற்செய்யுளுரையில் ஜைனமதக் கோட்பாடுகள் மிகத் தெளிவாக எடுத்தெழுதப் பட்டிருக்கின்றன. பல கல்விமான்களும், ஜைனர்களும் நாளடைவில் இப்பாடல்களுக்குத் தெரிவித்துவந்த அரிய உரைகளும் இப்புதிய வுரையில்காட்டப்பட்டிருக்கின்றன. இலக்கணக் குறிப்புக்களும், இலக்கியக் குறிப்புக்களும், தொல்காப்பியம், நன்னூல் முதலிய இலக்கண நூல் சூத்திரங்களின் உதாரணங்களாலும், சிந்தாமணி, சிலப்பதிகாரம், கலித்தொகை, நீலகேசி, சூடாமணி நிகண்டு, பழமொழி, அறநெறிச்சாரம், திருநூற்றந்தாதிமுதலிய இலக்கிய நூற் செய்யுட்களின் உதாரணங்களாலும் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. இன்னும் இவ்வுரையில் செய்யப்பட்டிருக்கும் திருத்தமான வேலைகள் பல.

இதுவரை, நாலடியாருக்கு இத்தகைய தெளிவான உரை வெளிவந்ததில்லை என்பது இதைப் படித்துப் பார்ப்பவர்க்கு நன்கு விளங்கும். இது டபுள்கிரௌன் 16-பேஜ் அளவில் 51-பாரங்களுக்கு மேற்பட்டும் 820-பக்கமுள்ளதாகவும் அச்சிடப்பட்டிருக்கிறது. தமிழர் ஒவ்வொருவரும் அவசியம் வாங்கிப் படிக்கத்தக்கது. இதன் விலை ரூபா 2—8—0.

சே. இராஜு செட்டியார், எம்.பி,. பி ஜு., அவர்கள் இயற்றியவை.

# சந்திரசேகரி.

(இரண்டாம் பதிப்பு)

எளிய இனிய நடையில் எழுதப்பட்டது. உலகானுபவமும் இலக்கண அறிவும் விசேஷமாகக் கொண்டது; அன்பின் மகிமை, பொறுமையின் பெருமை, கேடு நினைப்போர் கெடுவர், கடவுளை நம்பினோர் கைவிடப்படார் முதலிய பல அரிய விஷயங்கள் இதில் விளக்கமாகவும் படிப்போர் மனதைக் கவரக்கூடியதாகவும் எழுதப்பட்டிருக்கிறது. அறிவை விருத்தி செய்யக் கூடியதும் இதுவே. இதன் விலை ரூபா 1—4—0

# காதலி? ஒரு இனிய அருமையான தமிழ் நாவல்.

இதில் நவீன நாகரிகம், காதலின் வெற்றி, 'அவனன்றி ஓரணுவும் அசையாது', 'விதியின் வலி' என்னும் பல உயரிய நீதிகள் செல்வர்களின் ஆடம்பர வாழ்க்கை, சீர்திருத்தத்தின் சீர்கேடு ஆகிய பல அரிய அறிவைப் புகட்டும் அதியற்புத விஷயங்கள் அடங்கியிருக்கின்றன.

இதன் விலை ரு. 1.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி 167, மதராஸ்.

# தத்வசங்க்ரஹ ராமாயணம்

## இரண்டாம் பதிப்பு.

இது சமஸ்கிருதத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்ட அருமையான நூல். இதனை ஒரு முறை படிப்பவர்கள் இம்மை மறுமையென்னும் இருவகை வாழ்விற்குரிய சாதனங்களை யுணர்ந்து மக்களாய்ப் பிறந்த தாம் அனுஷ்டிக்க வேண்டிய ஒழுக்கங்களைக் கைக்கொண்டு பகவானுடைய திருவருட்குரியவராக விளங்குவர் என்பதில் ஐயமில்லை. இந்த கிரந்தம் துஷ்ட நிக்ரஹ சிஷ்டபரிபாலன நிமித்தம் உலகத்தில் ஸத்யவந்தனாக விளங்கிய தசரதச பூபதிக்கு ஸ்ரீ ராமனாக அவதரித்த ஜகத் பிரபுவின் குணாதிசயங்களைப் பற்றிப் பேசுவது.



ஸ்ரீ ராமாவதாரத்தின் உண்மை இதனைப் படிப்பவர்க்கு உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விளங்கும் இதனைப் படித்தால் அநேக ஞான நூற்களைப் படித்த பயனை ஒருங்கே யடைதல் கூடும். ஸ்ரீராம பூஜா விதிகளும் அர்ச்சனைகளும் இதன் கண் விரிக்கப்பட்டுள்ளன. இதுவரையில் வெளியான ராமாயணங்களை விட மும்மடங்கு மேலான தத்வ உபதேசங்கள் இதன் கண் காணலாம்.

உபந்யாசகர்களுக்கு வேண்டிய பல அரிய விஷயங்களுடன் கூடியது. ஸ்ரீ ராம சரிதையை வாசிப்பதே இகபர நன்மை யளிக்கு மென்பர் பெரியோர் இதில் எண்ணிறந்த மிக்க அருமையான விஷயங்கள் அடங்கியிருக்கின்றன.

**இதன் விலை ரூபா 4.**

# ஸ்ரீமத் கம்பராமாயண வசன சங்கிரகம்

## (சப்தகாண்டங்கள் அடங்கியது.)

**(நான்காம் பதிப்பு)** **இதன் விலை ரூபா 2.**

ஸ்ரீ இராமர் பட்டாபிஷேகம் ஆப்டோன் படம் சேர்க்கப்பட்டது. மிக்க திருத்தங்களோடு கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

சொற்ப காப்பிகளே அச்சிடப்பட் டிருக்கின்றன. ஆதலின் புஸ்தகம் வேண்டியவர்கள் முன்னரே எழுதிப் பெற்றுக் கொள்க.

ஸ்ரீ இராமபிரான் சரிதையை விரித்துக் கூறும் இந்த இராமாயணமானது மிக்க புண்ணிய கதை என்பது உலகறிந்த விஷயம். இதனைப் பாராயணஞ் செய்வதாலுண்டாகும் பயன்கள் அளவிடற் கரியனவாம். இதனைப் பக்தி சிரத்தையுடன் படிப்பவர்க்கு உலகத்தில் விரும்பக்கூடிய பொருள்களெல்லாம் கைகூடும்; உ[illegible]யுண்டாகும்; கீர்த்தி அதிகரிக்கும்; மோக்ஷத்தை அடை[illegible]; இலக்குமி கடாக்ஷமுண்டாகும்.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

சென்னை-600 00.

**நாவலுலகில் நவின ஜோதி!**

"ஜீவா"வின் எழுத்துச் சித்திரமான

# "இவ்வுலகைத் திரும்பிப்பாரேன"!

(புவனசுந்தரியின் சுய சரிதை.)

நாவலுலகிலேயே இதுவரையில்லா புதிய சோபையை உண்டுபண்ணத் தோன்றியிருக்கிறது.

விகடனில் தொடர்ந்து வெளியிடப்பட்டு வந்ததும், 'புத்தக வடிவில் எப்போது வரும்? எப்போது வரும்?' என்று நீங்கள் நெடுநாளாக எதிர்பார்த்திருந்ததுமான இவ்வபூர்வ கற்பனைக் கதை

## இப்போது வெளிவந்துவிட்டது!

பணக்காரர் குடும்பத்தில் நடக்கும் ஊழல்களும், வஞ்சகச் செயல்களும், பயனற்ற ஆங்கிலக் கல்வியைக் கற்றதன் பயனாய் மேனாட்டின் போலி நாகரிகத்தில் மூழ்கிய மங்கையரின் விபரீத செயலும், வாலிபர்களின் காமக் களியாட்டங்களும், இவற்றால் சமூகத்திற்கு ஏற்படும் தீமைகளும் நன்கு விவரிக்கப்பட்டிருக்கிறது. மனித வாழ்க்கையில் நடைபெறும் உண்மைச் சம்பவங்களைத் தழுவிய கதைப் போக்கின் சிறப்பும், கற்பனைத் திறனும், இனிய எளிய உரை நடையும் யாவர் மனதையும் கொள்ளை கொள்ளும் என்பது திண்ணம். கதைப் போக்கிற்கேற்ப ஆங்காங்கு சித்திரப் படங்கள் இப்புத்தகத்தை அலங்கரிக்கின்றன. இது சுமார் 260-பக்கங்களுக்கு மேற்கொண்டது.

**இதன் விலை அணா 14**

இன்றே ஆர்டர் செய்யுங்கள்!

# இதர ஆக்ட் புஸ்தகங்கள்

| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| இந்தியன் பினல் கோட் சட்டம் | 3 | 0 | பரம்பரை கிராம உத்தியோகஸ்தர்கள் சட்டம் | 1 | 0 |
| கிரிமினல் லா | 3 | 0 | இந்துதேச சாக்ஷி ஆக்ட் | 1 | 0 |
| ஸிவில் லா | 3 | 0 | தேவஸ்தான சட்டம் | 1 | 0 |
| புது விவகார சிந்தாமணி | 2 | 8 | இன்கம் டாக்ஸ் சட்டம் | 1 | 0 |
| புது பெரிய ஹிந்து லா | 2 | 0 | ஸ்டாமபு ஆக்ட் | 0 | 12 |
| முகம்மதியன் லா | 2 | 0 | ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட் | 0 | 10 |
| லோகல்போர்ட் ஆக்ட் | 2 | 0 | டிரஸ்டிகள் சட்டம் | 0 | 12 |
| கிராம முன்சிப் சட்டம் | 1 | 8 | கால நிர்ணயச் சட்டம் | 0 | 8 |
| பஞ்சாயத்துச் சட்டம் | 1 | 4 | நில ஆக்கிரமிப்பு என்குரோச்மென்ட் சட்டம் | 0 | 4 |
| எஸ்டேட் லாண்டு ஆக்ட் | 1 | 4 | கிராமச் சுகாதாரம் | 0 | 2 |
| கர்ணம் டெக்ஸ்ட் | 1 | 4 | | | |

ஆனந்தபோதினி ஆபீஸ்,
தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

# கைவல்ய நவநீத வசனம்

ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்கள் எழுதியது.

ஆன்மாக்கள், மாயையினின்றும் விடுபட்டு மோக்ஷசாதனத்தை அடையும்பொருட்டுக் கருணாநிதியாகிய கடவுள் அருளிய வேதத்தின் உட்பொருள்களைத் தழுவிப் பல மகான்கள் பல நூற்களை இயற்றியிருக்கின்றனர். அவற்றுள் தாண்டவராய சுவாமிகள் இயற்றிய கைவல்ய நவநீதமும் ஒன்று. இதன் நடை செய்யுளாகவும் மிகவும் கடினமாயிருப்பதால் எவரும் எளிதில் வாசித்துணரும்படி இதை வசனமாக எழுதி வெளியிடப்பட்டிருக்கிறது. இதனால் முத்தி மார்க்கத்தை எவரும் நன்குணரலாம். விலை ரூபா 1-8-0.

# ஞானகாந்தி

செ. இராஜு செட்டியார், எம்.பி. பிஐ., அவர்கள் இயற்றியவை.

கற்பின் ஜோதியாக விளங்கும் ஞானகாந்தி என்னும் இக்கதா நாயகியின் பதிபக்தி, அறிவு, ஆற்றல், பொறுமை, தன்னடக்கம், பிறர் நயாமகண்டிரங்கல், பரோபகாரம் முதலியவை பல அத்தாட்சிகளோடு அனைவரும் படித்து ஆனந்திக்குமாறு வரையப்பட்டிருக்கின்றன. இதற்கு எல்லாவிதத்திலும் நேர்மாறான நடத்தையுள்ள அம்புஜம் என்னும் ஸ்திரீயின் போக்கு மிகவும் கேவலமாயிருந்தும், கடைசியில் நல்லுணர்வுபெற்று சீர்திருந்தி சாந்தமடைவது எல்லோருக்கும் சிறந்த நீதியைப் போதிக்கும்.

இதன் விலை ரூ. 1-6-0. ஆனந்தபோதினி சந்தாதாரருக்கு விலை ரூ. 1.

## தபால் கொள்ளைக்காரர்கள் அல்லது அந்தரக் களவு. (2-ம் பதிப்பு)

### (மிக்க அபூர்வமான துப்பறியும் நாவல்.)

இதில் கல்வியும் புத்தி சாமர்த்தியமுமுடைய ஒருவன் இரயில்வே தபால் இலாகாவில் இருந்துகொண்டு ஒருவரும் கண்டறியாதபடி கொள்ளையடிப்பது மிக்க வியப்பாக விருக்கும். துப்பறிபவன் அக்கொள்ளைக் கூட்டத்தாரிடம் சிக்கிக்கொண்டு தப்புவதும், கடைசியில் அவன் இக்கள்ளரைப் பிடிக்கக் காட்டும் சாமர்த்தியமும் பின்னும் வியப்பை யளிக்கும். இது நாணயமான கடிதத்தில் அச்சிடப்பட்டது.



இதன் விலை அணா 14.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167 மதராஸ்.

# ஜீவப்பிரம்மைக்ய வேதாந்த ரகஸ்யம்.



கடப்பை ஸ்ரீ பரமஹம்ஸ சச்சிதானந்த யோகீஸ்வரர்

கடப்பை ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீஸ்வர ரவர்களால் எழுதப்பெற்ற 10-ம் பதிப்பு "ஜீவப்பிரமைக்ய வேதந்த ரஹஸ்யம்" என்னும் நூலில் வேதங்களினுடையவும், ருஷிகளினுடையவும், அரும் பெரும் ரகஸ்யங்களை யெல்லாம் திரட்டி, வேதங்கள், உபநிடதங்கள், ஸ்ரீ பகவத்கீதை இன்னும் அரிய பெரிய கோளாய் எடுத்துக் காட்டி யாவரும் உணருமாறு மிக எளிய நடையில் எழுதியுள்ளார்; இதன்றியும் கடவுள் எப்படிப்பட்டவர்; அவர் எங்கு என்ன ரூபத்துடன் இருக்கின்றார்; அவரை அறிவது எப்படி என்பதையும் தெரிவித்திருப்பதுமே யல்லாமல், கோவில்களிலுள்ள மூல விக்கிரகங்களாகிய சுவாமிகளுக்கு தேங்காய்களை உடைத்துக் கற்பூரமேற்றி ஏன் கும்பிடவேண்டுமோ அதன் ரகஸ்யமும் இன்னும் அநேக ரகசியங்களையும் சேர்க்கப்பட்டுள்ளன.

## ஷை யோகீஸ்வரர் அவர்களால் எழுதிய நூல்கள்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| அனேக தேவ ரகஸ்யங்களும், அநேக படங்களும் அடங்கிய பத்தாம் பதிப்பு "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்" உயர்ந்த காலிகோ பைண்டு ... ... ... | 4 | 0 |
| மேற்படி நூல் இங்கிலீஷ் முதற்பாகம்... ... ... | 2 | 8 |
| "ஜீவப் பிரம்மைக்ய ராஜயோக சாராம்ருதம்" தெலுங்கு 5-ம் பதிப்பு | 4 | 4 |
| ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன சம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை நான்காம் பதிப்பு ... ... ... | 2 | 4 |
| மேற்படி தெலுங்கு பகவத்கீதை ... ... ... | 2 | 4 |
| ஸ்ரீ கபீர்தாஸ் சரித்திரம் மூன்றாம் பதிப்பு ... ... | 2 | 4 |
| மேற்படி தெலுங்கு கபீர்தாஸ் சரித்திரம் ... ... | 2 | 4 |
| யோகாப்பியாசம் செய்ய வேண்டிய முறைகளை உபதேசிக்கும் நூல் | 1 | 8 |
| மாயையின் ரகஸ்யார்த்தம் வெளிப்படுத்தி மனதை நிறுத்தும் நூல்... | 0 | 8 |
| தத்துவ பரிசோதனை அன்னதான பலன் என்னும் நூல் 3-ம் பதிப்பு | 0 | 6 |
| சரீர தேவாலய ரஹஸ்யார்த்த பாரிஜாதம் இது மிகவும் சிரேஷ்டமான நூல் ... ... ... | 0 | 8 |
| மேற்படி தெலுங்கு சரீர தேவாலய பாரிஜாதம் ... ... | 0 | 6 |
| இந் நூலாசிரியரின் பூர்வ ஜன்ம இச் ஜன்ம சரித்திரம் 3-ம் பதிப்பு | 0 | 6 |
| மனோ ஓட்டத்தை நிறுத்திக் காட்டும் நூல் ... ... | 0 | 4 |
| மேற்படி மனோ ஓட்டத்தை நிறுத்திக் காட்டும் நூல் இங்கிலீஷ் ... | 0 | 4 |
| ஸ்ரீ சச்சிதானந்தர் தமிழ்ப் பாமாலை ... ... ... | 0 | 4 |

ஆனந்தபோதினி ஆபீஸ்,

தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

# மதிமோசு விளக்கம்.

(தூசி இராஜகோபால பூபதி அவர்கள் இயற்றியது)

**ஆன்றோர் மதிக்கும் நான்காம் பதிப்பு.**

223-பக்கங்கள் கொண்டது. 16-விநோதமான சித்திரப்படங்கள் சேர்க்கப்பட்டது. உயர்ந்த திக்கு கடிதத்தில் அச்சிடப்பட்டது.

தருமமே தழைத்தோங்கி வளர்ந்துவந்த மகா புண்ணிய பூமியாகிய நம் பாதகண்டத்தில், கலிகாலந் தொடங்கியதிலிருந்து, மனிதர், கால வயப்பட்டு, மனம் மாறுபட்டுத் தருமத்தில் செலுத்தும் சிந்தையை மிகுதியும் அதர்மத்தில் செலுத்தி வருவதால் அறநெறி குறைந்து மறநெறி வளர்ந்து வருகின்றது. அதற்கேற்ப வஞ்சமும், சூதும், பஞ்சமாபாதகமும் அவற்றிற் கஞ்சா நெஞ்சமும் படைத்த மனிதரே நாள்தோறும், நாடுகள்தோறும், ஊர்தோறும், வீடுகள்தோறும் மலிந்து, விநோதம் விநோதமான படுமோசம், மதிமோசம், நிதிமோசங்களையும், சூது வஞ்சனைகளையும் செய்து வருகின்றனர். காலம் செல்லச் செல்ல இதற்குமுன் கண்டும், கேட்டுமிராத எண்ணிறந்த மோசநாசச் செயல்கள் எங்கும், என்றும் நூதனம் நூதனமாகத் தோன்றி அதியற்புதத்துடன் வளர்ந்துகொண்டே வருகின்றன; அவற்றைச் செய்யும் மனிதர்களும் உற்பாத பிண்டங்களாய் ஒருவரை யொருவர் எடுத்து விழுங்குவோராய் அற்புதமாக உற்பவித்து மலையை விழுங்கிய மகாதேவன் போல வளர்ந்து சிறந்து ஜெகஜாலப்புரட்டராயும், அண்டப்புரட்டராயும், திடீர்ப் புளுகராயும் பரவி வருகின்றனர். இவர்களுடைய மகாமோசச் செயல்களால் சூதுவாதறியாத உலகத்தார் அடையும் கஷ்ட நஷ்டங்களுக்களவேயில்லை. வியாபாரத்தொழில் முழுவதிலும் மோசம்; விவசாயத்திலும் மோசம்; உத்தியோகத் துறைகளினும் ஒப்பில்லா மோசம்; வித்தையிலும் மோசம்; வேடிக்கையிலும் மோசம்; வைத்தியத்திலும் மோசம்; மாந்திரீகத்திலும் மோசம்; சோதிடத்திலும் மோசம்; சோற்றுக்கடையிலும் மோசம்; கப்பலிலும் மோசம்; ரெயிலிலும் மோசம்; நீதிச்சபைகளிலும் மோசம்; தேசச் சேவைகளிலும் மோசம்; கோவிலிலும் மோசம்; குளத்திலும், வீட்டிலும் மோசம்; காட்டிலும் மோசம்; நாட்டிலும் மோசம்; நகரத்திலும் மோசம் இப்படியே மனிதர் தலை நீட்டு மிடங்களெல்லாம் மோசமயமாகவே யிருக்கின்றனா. உலகமுழுவதும் இவ்வாறே மோசம் நிறைந்ததா யிருப்பதனாலே வஞ்சகமற்ற மனிதர் துன்பத்திற்குள்ளாகிச் சதா சர்வகாலமும் சஞ்சலப்படுகின்றனர்; இத்தகைய மோசநாச வலையினின்றும் தப்புதற்கு மார்க்கங் காணாதவர்களாய்த் தவிக்கின்றனர். ஆதலின், இந்தப் படுமோசப் பெரும் பாதாளத்தில் மனிதர் வீழ்ந்து மயங்காமல் தப்பித்துய்தற் கேதுவாயிருக்கும்படி, உலகத்தில் உலாவும் எண்ணிறந்த மோசச் செயல்களெல்லாம், இப்புத்தகத்தில் மிக்க விளக்கமாக எழுதப் பெற்றிருக்கின்றன.

இது இவ்வளவு பயன் சிறந்ததா யிருப்பதனாலேயே இதன் மூன்று பதிப்புக்களும் வெகு சீக்கிரம் செலவாகி இப்போது இந் நான்காம் பதிப்பு வெளிவந்திருக்கின்றது. இப்பதிப்பிலும் பெரும்பாகமான காப்பிகள் செலவாகிவிட்டன; சொற்பக் காப்பிகளே இருக்கின்றன.

**இதன் விலை ரூபா 1—0—0.**

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை அணா 12.

---

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ, 167, மதராஸ்.


உ

ஓம்

பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)


| | | |
|---|---|---|
| தொகுதி 23 | ஈசுவர௵ மார்கழி௴ ௧௨௳<br>1937௵ டிஸம்பர்௴ 15௳ | பகுதி 6 |


## கடவுள் வணக்கம்.

குழைத்தாற் பண்டைக் கொடுவினைநோய்
காவாய் உடையாய் கொடுவினையேன்
உழைத்தால் உறுதி யுண்டோதான்
உமையாள் கணவா எனையாள்வாய்
பிழைத்தாற் பொறுக்க வேண்டாவோ
பிறைசேர் சடையாய் முறையோ என்று
அழைத்தால் அருளாது ஒழிவதே
அம்மா னேஉன் அடியேற்கே. (1).

ஒன்றும் போதா நாயேனை
உய்யக் கொண்ட நின்கருணை
இன்றே இன்றிப் போய்த்தோதான்
ஏழை பங்கா எங்கோவே
குன்றே அனைய குற்றங்கள்
குணமா மென்றே நீ கொண்டால்
என்தான் கேட்டது இரங்கிடாய்
எண்தோள் முக்கண் எம்மானே. (2)

187535

நாயிற் கடையாம் நாயேனை
நயந்து நீயே ஆட்கொண்டாய்
மாயப் பிறவி உன்வசமே
வைத்திட்டு இருக்கும் அதுவன்றி
ஆயக் கடவேன் நானேதான்
என்ன தோஇங்கு அதிகாரம்
காயத் து இடுவாய் உன்னுடைய
கழற்கீழ் வைப்பாய் கண்ணுதலே. (3)

# அரும்பொருள் விளக்கம்

(இ-ள்.) சராசரங்களை யெல்லாம் தமக்கு உடைமைப் பொருளாக உடைய பெருமானே! மனங்குழைந்து உருகினால் கொடிய பழவினையால் வருந் துன்பத்தினின்றும் என்னைக் காப்பாயாக; தீவினையே மிகுதியாக வுடைய நான் அது நீங்கும் பொருட்டு உழைத்தால் நன்மை யேற்படுமோ! உமாதேவியின் நாயகனே! என்னை ஆட்கொண்டு அருள்வாய்; அறியாமையால் நான் பிழை செய்தால் பொறுத்தருள வேண்டியது உன் கடமை யல்லவா! சந்திர சடாதரனே! அம்மையும் அப்பனுமாயுள்ள பெருமானே! என்னை நிராதரவாகக் கைவிடுதல் முறையோ என்று கதறி யழைத்தால், உன் அடித்தொழும்பனாகிய எனக்கு அருள் புரியாது போகலாமா? (எ-று.)


"அழுதால் உன்னைப் பெறலாமே!" என்று உறுதி கூறிய மாணிக்க வாசகப் பெருந்தகையார், 'முறையோ என்று அழைத்தால் அருளா தொழிவதே அம்மானே உன்னடியேற்கே" என்று இப் பாட்டிலும் வற்புறுத்திக் கூறி யிருப்பதுடன் உழைத்தால் உறுதி யுண்டு என்றும் தெளிவுறுத்தி யிருப்பது குறிப்பிடத் தக்கது. (1)

(இ-ள்.) ஏழைகள் பங்காளா! எம் தலைவர்! ஒன்றுக்கும் பற்றாத நாயினுங் கடையான என்னை உய்யும்படியாக ஆட்கொண்ட உன்னுடைய திருவருள், இன்று இல்லாது போய்விட்டதா என்ன! எட்டு திரண்ட தோள்களையும், முக்கண்களையுமுடைய எம்பெருமானே! நான் செய்த குற்றங்கள் மலைபோன்று பெரியதாக இருப்பினும், அப் பிழைகளை யெல்லாம் குணங்களாகக் கருதித் தேவரீர் கொண்டருளினால் என்ன கெட்டுப் போய்விடும்? என்மீது மனமிரங்கி யருள் புரிவாயாக. (எ-று.)

இதனால், முன்னர் வலிய வந்து ஆட்கொண்டருளிய கருணாமூர்த்தி, அறியாமை காரணமாக மலையளவு பிழைகள் செய்திருப்பினும் குணமாகக் கொண்டு மன்னிக்கவேண்டியது கடமையாகும் என்று மனமுருகிப் பிரார்த்திருக்கிறார். (2)

(இ-ள்.) நெற்றியில் ஞானக்கண்ணுடைய சிவபெருமானே! கேவலம் நாயினும் கீழானவனாகிய அடியேனை விரும்பி தேவரீரே வலிய ஆட்கொண்டருளினீர்; மாயாமலத்தின் பரிணாமமாக ஏற்பட்டிருக்கும் இம் மனிதப்பிறவியை உனக்கே சொந்தமாக்கி வைத்திருப்பது என் கடமையே யன்றி, ஆராய்ந்து பார்க்கக்கூடியவன் நானோ? இங்கே அதிகாரம் என்னுடையதோ? நீ என்னை எந்த தேகத்திலாயினும் புகுத்தினாலும் புகுத்துவாய் அல்லது உன்னுடைய திருவடி நீழலில் அடைக்கலப் படுத்தினாலும் படுத்துவாய். எல்லாம் உன் திருவுள்ளச் சம்மதம். (எ-று.)

சர்வ சுதந்தரமுடையவன் இறைவனேயன்றி, உயிர்களாகிய நமக்கு எவ்வித சுதந்தரமுமில்லை. என்பார், "மாயப்பிறவி உன் வசமே வைத்திட்டிருக்கும் அதுவன்றி, ஆயக் கடவேன் நானோதான்; என்னதோ இங்கு அதிகாரம்; காயத்திடுவாய்; உடனுடைய கழற்கீழ் வைப்பாய்" என்று அருளினார். (3)



## சேவா லட்சியம்

இம்மாதத்தில் நம் சென்னை மாகாணத்திலுள்ள இரு சர்வ கலாசாலைகளில் பட்டமளிப்பு விழாக்கள் நடைபெற்றன. ஒன்று ஆந்திர சர்வகலாசாலை; மற்றொன்று சிதம்பரம் அண்ணாமலை சர்வகலாசாலை. ஆந்திர சர்வகலாசாலையில் நமது பிரதம மந்திரி கனம். ஸி. இராஜகோபாலாசாரியார் பிரசங்கம் செய்தார். அண்ணாமலை சர்வ கலாசாலையில் மகாகனம் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் சொற் பொழிவு நிகழ்த்தினார். இவ் விருவருடைய பிரசங்கங்களும் சம்பிரதாய முறையினின்றும் வேறுபட்டனவா யிருந்தும் விஷயத்தில் ஒற்றுமையா யிருக்கின்றன; ஆயினும் விஷயங்களை விவரிக்கும் விதத்தில் மிகுந்த வேற்றுமையைப் புலப்படுத்துகின்றன. இவ்விரு பெரியார்களுடைய தன்மை, தகுதிகளை யுணர்ந்தவர்களுக்கு இவ்வேற்றுமை ஆச்சரியத்தை விளைவிக்காது. இவ்விருவரும் பொதுவாகப் பேரறிஞர்களாயினும், தாய் நாட்டின் விமோசனத்துக்காகச் சேவை புரிவதில் கனம். இராஜகோபாலாசாரியாரைப்போல், மகாகனம் சாஸ்திரியாரைத் தன்னலத் தியாகியெனக் கூறமுடியாது. அரசியல் துறையில் அவர் மிதவாதியென்பது பெரும்பாலார் அறிவர். ஆகவே, அவர் பட்டம்பெற்ற மாணவர்களுக்கு உபயோகமான அரிய உபதேசங்களைக் கூறவேண்டிய இடத்தில் காங்கிரஸ் மகாசபையைத் தாக்கிப் பேசியதைக் கண்டு யாரும் அதிசயித்தற்கில்லை.

ஜனநாயக ஆட்சி முறையில் தமக்குள்ள பெரு நம்பிக்கையைத் தெரிவித்துக் கொள்ள விரும்பிய மகாகனம் சாஸ்திரியார் 'கட்சிக் கட்டுப்பாடு; கட்சிக் கட்டுப்பாடு' என்று சொல்லிக் காங்கிரஸ்காரர்கள் தனிப் பட்டவர்களுடைய பேச்சுரிமையைக் கட்டுப்படுத்துகிறார்கள் என்று குறை கூறியிருக்கிறார். சட்டசபைகள் மூலம் சர்க்கார் நடப்பதற்கு நல்ல கட்டுப்பாடுள்ள கட்சிகள் அவசியமென்றும், தேசத்துக்குத் தங்களால் இயன்ற நன்மையைச் செய்ய விரும்பும் அரசியல் வாதிகள் பிரச்சினைகளை முடிவு செய்யும் விஷயத்தில் தங்கள் யோசனைகளை இஷ்டப்படி விட்டுவிடாது கொஞ்சம் அடக்கிக்கொண்டு ஒரு கட்டுப்பாட்டுக் குள்ளாக வேண்டியது அவசிய

மென்றும் பிரசங்கத்தின் ஆரம்பத்தில் ஒப்புக் கொள்ளும் இவர், பிறகு காங்கிரஸ்காரர் அநுஷ்டிக்கும் கட்டுப்பாட்டைக் கண்டித் துரைப்பதன் அர்த்தம் நமக்குப் புலனாகவில்லை. இத்துடனில்லாது அவர், காங்கிரஸிலிருக்கும் மேற்குறித்த தர்மசங்கடமான நிலைமையை யுத்தேசித்து தான் மகாத்மா காந்தி அந்த ஸ்தாபனத்தினின்றும் விலகி நிற்கிறார் என்று கூறுவது விந்தையினும் விந்தையாக இருக்கிறது.

ஆனால் மகாத்மா காந்தி காங்கிரஸினின்றும் விலகி நிற்பதற்குத் தாம் கண்டுபிடித்த அபூர்வ காரணத்தை எடுத்துக்கூற வந்த இடத்தில் கனம் சாஸ்திரியார் பேசிய பேச்சு குறிப்பிடத் தக்கதாகும். "மனஸ்யேகம், வசஸ்யேகம் கர்மண் யேகம் மஹாத்மனாம்" என்று நமது சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கும் இலட்சியத்தைத் தான் பட்டதாரிகளாகிய நீங்கள் உங்களுடைய எதிர்கால வாழ்க்கையில் கடைப்பிடித்து நடக்கவேண்டும். 'ஸத்யே ஸர்வம் ப்ரதிஷ்டிதம்' என்று நமது சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கிறது. ஸத்தியத்துக்காக ஹரிச்சந்திரன் பட்ட கஷ்டங்களை நீங்கள் அறிவீர்கள். இக்காலத்தில் உண்மைக்கு விரோதமான சக்திகள் உலகத்திலுள்ள எல்லா காரியங்களிலும் வியாபித் திருக்கின்றன.

ஆனால், அதிர்ஷ்ட வசமாக நமக்கு வழி காட்டக்கூடிய மகான்கள் இக் காலத்திலும் இருக்கிறார்கள். அத்தகைய பெரியார் மகாத்மா காந்தி என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வார்கள். பேசுவதென்றால் உண்மைக்குச் சிறிது புறம்பான விஷயங்கள் அதில் கலக்கின்றன என்ற காரணத்தால் அவர் வாரத்திற் கொருநாள் மௌன விரதம் அநுஷ்டிக்கிறார். அவர் அதிகமாகப் பேசுவதில்லை. பேச்சில் கடினமான வார்த்தைகளை யுபயோகிப்பதில்லை. ஸத்தியத்திற்கு இடையூறு விளைவிக்கக் கூடிய வழிகளிலிருந்து அவரைப்போல் விலகிக் கொள்பவர்களை நான் பார்த்ததில்லை. ஸத்தியத்துக்கு விரோதமான வழிகளில் எந்த உயர்ந்த நன்மையையும் அவர் நாடமாட்டார்......... கண்ணை மூடிக்கொண்டு மக்கள் தம்மைப் பின்பற்றக் கூடாதென அவர் கூறுகிறார். ஸத்திய தேவதை யிடத்திலுள்ள திடமான பக்தியே மகாத்மாவின் உயர்ந்த குணமாகும்; நாம் அவரைத் தொழ வேண்டாம். அவருடன் கூடி சத்திய தேவதையைத் தொழுவோம்." இம்மொழிகளே அவரது பிரசங்கத்துக்கு ஜீவனை யளித்து நிற்கின்றன. பட்டதாரிகள் கனம் சாஸ்திரியாரது பிரசங்கத்தின் இப் பகுதியை மட்டும் கவனித்தால் போதும் என்பது நமது அபிப்பிராயம்.

இனி, ஆந்திரா சர்வ கலாசாலையில் பேசிய கனம். இராஜகோபாலாசாரியார் பிரசங்கத்தை ஆராய்வோம். அவர் இதுவரை பட்டமளிப்பு விழாக்களில் பிரசங்கஞ் செய்தவர்களைப் போல் தமது பிரசங்கத்தை எழுதி அச்சிட்டுப் படிக்கவில்லை. சாதாரண பொதுக் கூட்டங்களில் பேசுவதுபோலவே பிரசங்கம் செய்தார். எனினும் அப்பிர



சங்கம் பூரண ஜீவசக்திவாய்ந்ததா யிருந்தது. பட்டம்பெற்ற மாணவர்கள் மனங்களில் அவரது பொன் மொழிகள் பசுமரத்தாணிபோல் ஆழ்ந்து பதிந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. "நமது தேசம் எளிய தேசம். நமது மக்களின் அவசரமான மூலாதாரமான சரீரத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாம லிருக்கின்றன. இவ்வித நிலையில் சர்வ கலாசாலைகள் ஒரேவிதமான வேலையைச் செய்து கொண்டிராமல் வெவ்வேறு துறையில் விசேஷ விற்பத்தியடைய முயற்சி செய்ய வேண்டுமென்று கருதுகிறேன். இதுதான் உண்மையான சிக்கனமாக இருக்கும். இதே சமயத்தில் சர்வ கலாசாலைகள் தனித்து நிற்கவேண்டி யிரா...............

"விஞ்ஞான சாஸ்திரத் துறைகளில் தற்கால ஞானம் பெறுவதற்காக அதிகமான தொகை செலவிடவேண்டி யிருக்கிறது. இது மிக்க அவசியமான செலவாகும். ஆனால் ஆடம்பரங்களை அத்தியாவசியமான தேவைகள் என்று நாம் தவறாக நினைத்து ஏமாறக்கூடாது."

கடைசியாக, கனம் இராஜகோபாலாசாரியார் பட்டம் பெற்ற மாணவர்களுக்குச் செய்த உபதேசம் பொன்னெழுத்துக்களால் பொறித்து வைக்கத் தக்கனவாகும். பண்டைக் காலத்தில் குருகுலவாசத்தை முடித்துவிட்டுச் செல்லும் மாணவனுக்குக் குரு உபதேசிக்கும் உபநிஷத் ஸ்லோகத்தை எடுத்துக் கூறிய கனம் ஆச்சாரியார், "புதிய பட்டதாரிகள் சத்தியத்தைக் கடைப்பிடித்து, தர்ம நெறியில் நடக்கவேண்டும், நல்ல குடும்பஸ்தனாகவும், பிரஜையாகவும் இருக்க வேண்டும்; இகலோகக் கடமைகளை அலட்சியஞ் செய்யக்கூடாது. எப்போதும் ஆராய்ந்து போதித்து வரவேண்டும். ஒவ்வொரு பழத்திலும் அதேவிதமான பழங்களைத் திரும்ப உற்பத்தி செய்யும்படியான வித்து இருக்கிறது. அதுபோல, உங்கள் கல்வியானது அதனை மேற்கொண்டு பரப்புவதற்கான வித்தைக் கொண்டிருக்க வேண்டும் ஜனங்களிடை ஞானவெள்ளம் பரவும்படி செய்வது உங்கள் கடமையாகும். நீங்கள் அடையும் புதிய ஞானத்தை உங்கள் தாய்மொழியில் கொண்டுவர சதா முயற்சி செய்யவேண்டும். அப்போதுதான் புதிய ஞானவெள்ளம் தடையில்லாமல் தாராளமாகப் பாயும். வரண்டு கிடக்கும் நிலங்களில் நீர் பாய்வதுபோல, கல்விஞான மில்லாதவர்களிடையிலும் கல்வி யறிவைப் பரவச் செய்ய முடியும். நீங்கள் தனித்தொழில் புரிந்தாலும் அல்லது சர்க்கார் ஊழியரானாலும் நீங்கள் செய்யும் சேவையில் தேசாபிமானமும், உத்தியோகப் பற்றற்றவர்களது வாழ்க்கையிலேயே காணப்பட்ட சேவா லட்சியமும் பிரதிபிம்பிக்குமாறு செய்ய முயலவேண்டும்." மக்களின் சேவா லட்சியத்தை விளக்கும் கனம் ஆச்சாரியாரது அரிய பிரசங்கத்தைச் சென்னை கவர்னரே பாராட்டி யிருக்கிறாரென்றால், அதிகங் கூறவும் வேண்டுமோ! அவர் கூறிய சேவா லட்சியத்தை நாம் ஒவ்வொருவரும் நிறைவேற்ற முயல்வோமாக.

# ஸர். ஜகதீச சந்திர போஸ்.

இந்தியாவின் புராதனக் கலையும் சமூக முறையும் மேனாடுகளில் பலமாக அவதூறு செய்யப்பட்டு, இந்தியர்கள் நாகரீக வாசனையற்றவர்கள் என்று பலர் பிதற்றி வரும்போது, ஸர் ஜகதீசர் இத்தேசத்தில் தோன்றி, இத்தகைய தீங்கான மனப்பான்மையை நாசமாக்கி, விஞ்ஞான சாஸ்திர உலகிலும் இந்தியா எச்சமயத்திலும் தலைசிறந்து விளங்கும் என்பதை ருஜுப்படுத்தினார். உயிரற்றவை என இதுகாறும் கருதப்பட்டு வரும் வஸ்துக்களும் ஜீவனுள்ளவை என்பதையும், எல்லா உயிர்களும் ஒன்றே என்பதையும் சாஸ்திரம் மூலம் உலகிற்கு அவர் தெரிவித்ததே பிரதானமாகும். இந்தியாவில் புராதன காலத்திலிருந்தே வழங்கும் வேதாந்தம் குறைகாணத் தகாதது என்பதை ஸர் போஸ் பகிரங்கப்படுத்தியவராவார். மைசூர் சர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழாவின்போது ஸர் போஸ், இந்தியா பண்டையகால தத்துவங்களுக்கு மட்டுமே ஸ்தானமெனவும் அதன் புராதனப் பெருமை மீண்டும் திரும்பாத விதமாக மறைந்துவிட்டது எனப் பலர்கூறியதைப் பலமாகக் கண்டித்து, இந்திய புராதன நாகரீகம் மற்றவைகளை விடச் சிறப்புடன் இன்னும் இருப்பதாகத் தெரிவித்தார்.



1858-ம் வருஷம் நவம்பர் மாதம் முதலில் பிறந்த ஸர் ஜகதீச போஸ் முதலில் கிராமப் பாடசாலையிலும் பின்பு கல்கத்தாவிலும் படித்தார். அவருக்கு சிவில் சர்விஸ் பரீக்ஷையில் தேறவேண்டும் என்று இருந்த விருப்பத்தை அவரது பிதா அங்கீகரிக்கவில்லை; ஆனால் இவர் இங்கிலாந்திற்கு உயர்தர படிப்பிற்காக அனுப்பப்பட்டார்; அங்கு சிறப்புடன் தேறிய பின்பு அவர் இத்தேசத்திற்கு 1885-ல் வந்தார். ரிப்பன் பிரபுவிற்கு புரொபஸர் பாஸெட் இவரைப் பற்றித் தடபுடலாக எழுதியிருந்தார்.

அவருக்குக் கல்கத்தா பிரஸிடென்ஸி கலாசாலை பௌதீக சாஸ்திர ஆசிரியர் பதவி வழங்கப்பட்டது. ஆயினும் இவருக்கு எல்லா வசதிகளும் வழங்கப்படவில்லை. அவருக்கு ஐரோப்பியர்களைவிட மிகக் குறைவான சம்பளமும் வழங்கப்பட்டது. அவர் இதையெல்லாம் பலமாக ஆட்சேபித்தார்; கோபம்பூண்ட அவர் சம்பளம் வாங்கவும் மறுத்து மிகுந்த கஷ்டத்துடன் ஜீவனத்தை நடத்திவந்தார். 3 வருஷ காலத்திற்கெல்லாம் பிரின்ஸிபாலும் கல்வி இலாகா அதிபரும் இவருடைய திறமையை உணர்ந்துவிடவே இவருக்கு அதிகச் சம்பளமும் இவர் அதுவரை வாங்காத சம்பளம் பூராவும் இவருக்கு வழங்கப்படவேண்டும் என ஸர்க்காரால் உத்திரவு பிறப்பிக்கப்பட்டது.



### மின்சார ஆராய்ச்சி

1895-ம் ஆண்டிலேயே இவர் விஞ்ஞான சாஸ்திர விஷயமாக வியாஸங்கள் எழுதவாரம்பித்தார். முதலில் இவர் மின்சார விசையில் அதிகக் கவனம் செலுத்திவந்தார். மின்சார விசையை யுபயோகித்துக் கம்பியின்றி தந்திமூலம் சமாச்சாரங்களை நேராக ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு அனுப்புவது பற்றி டாக்டர் போஸ் மிகவும் ஈடுபட்டிருந்தார். இதே விஷயமாக மற்றொரு பிரபலஸ்தரான காலஞ்சென்ற மார்க்கோனியும் அப்போது ஈடுபட்டிருந்தார்.

இவ்வாறு தந்தியனுப்புவது இயலும் என்பதை டாக்டர் போஸ்தான் முதன் முதலில் நிதர்சனப்படுத்தியவர். 1895-ல் கவர்னர் முன்னிலையில் கல்கத்தா டவுன்ஹாலில் இவர் ஆகாய அலையை ஒரு சுவர், அணிவகுத்து நின்ற சிலர் மூலமாக அனுப்பி, அது ஒரு பெரிய எடையை அப்புறப்படுத்துமாறும், ஒரு மணியை அடிக்குமாறும், மூடப்பட்ட அறையொன்றிலிருந்த வெடி மருந்தை வெடிக்குமாறும் செய்து காண்பித்தார்.

ராயல் சங்கத்தின் முன்பு டாக்டர் போஸ் மும்முறை பிரசங்கங்கள் செய்வதற்காக அழைக்கப்பட்டார்; இது பெரிய கௌரவமாகும். முதல் அங்கு இவரது ஆராய்ச்சிகளைப் பற்றிப் பலர் பரிகசித்தனரேனும் அப்புறம் யாவரும் அவற்றை வரவேற்பது அவசியமாகியது. ஹக்ஸ்லி முதலிய பிரசித்தர்கள் இவரைக் கொண்டாடினர்.

1900-ல் பாரிஸில் நடந்த விஞ்ஞான சாஸ்திர மஹாநாட்டிற்கு டாக்டர் போஸ் இந்தியாவின் பிரதிநிதியாக அனுப்பப்பட்டார். இங்கிலாந்து மட்டுமல்லாமல் டாக்டர் போஸ் அமெரிக்கா முதலிய தேசங்களுக்கும் சென்று கீர்த்தியுடன் திரும்பினார். இந்தியாவிலும் அவர் எங்கும் மதிக்கப்பட்டார்; இத்தகைய புருஷரைக் கௌரவிப்பதில் ஸர்க்காரும் பின்வாங்கவில்லை. 1913-ல் இவர் விஷயத்தில் 55-வது வயது விதி விலக்கப்பட்டு, சர்வகலாசாலையில் இவரது காலம் இன்னும் 2 வருஷங்களாக நீடிக்கப்பட்டது. 1915-ல் இவரை ஸர்க்கார் எமரிடஸ் புரொபஸராக நியமித்து இவருக்கு வாழ்நாள் வரையிலும் பென்ஷனுக்குப் பதிலாக முழுச் சம்பளத்தையும் வழங்கினர்.

### "யுகப்ரவர்த்தகர்"

1916-ல் டாக்டர் போஸ் அமெரிக்காவிலிருந்து திரும்பியபோது அவரை வரவேற்க ஷெரிப் கூட்டம் கல்கத்தாவில் கூட்டப்பட்டது; அச்சமயம் ஆச்சார்ய பி. ஸி. ரே இவருக்கு "யுகப்ரவர்த்தகர்" என்ற பிருதத்தை வழங்கினார். 1917-ல் இவருக்கு "ஸர்" பட்டமும் வழங்கப்பட்டது. ஸர் போஸ் ராயல் சொஸைடி மெம்பராகவும் சேர்த்துக்கொள்ளப்பட்டார்.

1917-ல் ஸர். போஸ் "போஸ் ஆராய்ச்சி ஸ்தாபனத்தை" கல்கத்தாவில் ஏற்படுத்தினார். இதற்கு அவர் அதிக மூலதனம் வைத்து ஆராய்ச்சியின் அபிவிருத்தியை பிரதானமாகக் கருதிவந்தார். இந்த ஸ்தாபனம் பிரதி வருஷமும் வெளியிட்டுவரும் யாதாஸ்துகள் அதிமுக்கியமானவை; இதைத் திறந்துவைக்கும்போது ஸர் போஸ் பின்வருமாறு கூறினார்:—

"அநேக வருஷங்களாக இருந்துவரும் எனது ஜாக்ரதா வாழ்க்கையின் கனவாகும். இது நமது நோக்கத்திற்கு எல்லை கிடையாது. ஒருவர்

வாழ்க்கைமூலமாகவாவது ஒருவரது செல்வத்தின் மூலமாகவாவது இஷ்டசித்தி ஏற்படாது; இதற்குப் பலரும் ஒன்று சேரவேண்டும். நமது உள்ளம் பூரணமாக வெளியாவதற்கு அநேகரது மூலதனம் அவசியம். ஆனால் இவ்விஷயமாக ஆரம்பம் செய்யப்படவேண்டும்; இந்த ஸ்தாபனத்தின் ஆரம்பத்திற்கு இதுவே காரணமாகும். நான் ஒன்றுமில்லாமல் இப்புவிக்கு வந்தேன்; அவ்வாறே நான் இங்கிருந்து மறைவேன். இதற்கிடையில் ஏதாவது சாதிக்கப்பட்டால் அது என்னுடைய பாக்கியமாகும். என்னிடமிருப்பதை நான் கொடுப்பேன். தவிரவும் இதே விஷயமாக எது சுக துக்கங்களைப் பகிர்ந்திருப்பவரும் சம்மதிக்கிறார். எனது கஷ்டமயமான முயற்சிகளில் நான் தனிமையாக இருந்ததில்லை.''

இவ்வார்த்தைகள் டாக்டர் போஸின் அரிய குணாதிசயத்தையும் உயர்ந்த லக்ஷியத்தையும், தேச பக்தியையும், பரோபகாரப் போக்கையும் தெளிவாகக் கோஷிக்கிறது.

செடிகளுக்கும் ஹிருதயங்கள் உண்டு என்ற பிரமிப்பூட்டும் உண்மையைக் கண்டெடுத்த புகழ் ஸர் ஜகதீச சந்திரபோஸைச் சார்ந்தது. உலகெங்கும் கியாதிவாய்ந்த ஹிந்து சாஸ்திர நிபுணர் ஸர் ஜகதீசர்தான்; சாஸ்திர ஆராய்ச்சி சம்பந்தமாகவும் ''ஸர்'' பட்டம் அவர்தான் முதன் முதலில் இந்தியாவில் சம்பாதித்தவர்.

ஒரு சமயம் ஸர் ஜகதீச சந்திரரின் பிரசங்கத்தைக் கேட்டவர், ''அவர் பேசும்போது ஸௌந்தர்ய உணர்ச்சியே மிகவும் ஏற்படுவதாக'' வெளியிட்டார். 1900-ல் ஐரோப்பாவில் தமது சாஸ்திர ஆராய்ச்சிகளை வெளியிடவேண்டும் என அவர் இரண்டாவது முறை அழைக்கப்பட்டார். இவர் லண்டனில் இருந்தபோது ஸர் ஜேம்ஸ்டேவார், ராலே பிரபு முதலிய சாஸ்திர நிபுணர்களின் உதவியினால் ராயல் இன்ஸ்டிடியூஷனைச் சேர்ந்த டேவிபாரடே ஆராய்ச்சி சாலையில் ஆராய்ச்சியை நடத்தலானார். அங்கு இவர் சாதித்தவை சிறப்புற்று விளங்கியபடியால் அநேகம் பிரபல பத்திரிகைகள் அவைகளை உலகத்தோருக்குப் பிரசுரித்தன. பின்பு இவர் இந்தியாவிற்குத் திரும்பித் தமது ஆராய்ச்சிகளிலேயே கண்ணும் கருத்துமாக விருந்து வந்தார்.

1926-ல் ஸர் போஸ் இங்கிலாந்திற்குப் போய் ஆக்ஸ்போர்டு பிரிட்டிஷ் சங்கத்தின் முன்பு உபந்யாசம் செய்தார். அச்சமயம் பிரசித்தரான ஈன்ஸ்டீனும் வந்திருந்தார். சர்வதேச சங்கத்தின் தலை நகரில் ஸர் போஸிற்கு உருவச் சிலை அமைக்கப்படவேண்டும் என்று ஈன்ஸ்டீன் பிரசங்கத்தின் முடிவில் வெளியிட்டார்.

இவ்வாறு ஈன்ஸ்டீனாலும் பாராட்டப்பட்டு இவரது புகழ் உலகம் எங்கும் பரவியதற்குக் காரணம் யாது? எல்லா ஜீவன்களும் ஒன்றே என இவர் ருஜுப்படுத்தியதே இதற்குக் காரணமாகும். எஃகு முதலிய உலோகங்களுக்கும் உணர்ச்சி இருக்கிறதெனவும், செடிகளும் உணர்ச்சியுள்ளவை எனவும் உலகத்திலிருக்கும் யாவும் உயிருடனிருந்து மரிக்கின்றன எனவும், இவர் தமது அனுபவப் பரீக்ஷைகள் மூலம் வெளியிட்டார்.

### தாவரங்களின் உணர்ச்சி

ஒரு பூதக்கண்ணாடியினால் செடிகளைக் கவனித்து இவர் இவ்வளவையும் கண்டுபிடிக்கவில்லை. ஆனால் இவர் செடிகளின் நரம்புகளின் உணர்வு



களையும் அளவிடுவதற்காக பல நுண்ணிய கருவிகளை நிர்மாணித்தார். இவரிடம் கீழ்த்திசையினரின் கற்பனா சக்தியும், மேல் திசை சாஸ்திரிகளின் நிச்சய புத்தியும் இருந்தன. இவர் கண்டுபிடித்த ஆராய்ச்சிகள் பிரமிப்பூட்டுபவைகளாவன: அவற்றை நம்புவதும் சில சமயங்களில் கடினமாகவிருந்திருக்கிறது. சாஸ்திர உண்மைகளான அவை கட்டுக்கதைகள்போல் இருக்கின்றன. ஸர் போஸ் ஒரு சமயம் பின்வருமாறு தெரிவித்தார்.

''இதுவரை மரங்களும் செடிகளும் உலகில் ஜீவனற்றவைகளாகவிருப்பதுபற்றி நம்மைவிடத் தனியானவை என நாம் கருதிவந்தோம். இப்போது அவை உண்மையில் ஜீவித்து உணர்ச்சி ததும்பும் ஜந்துக்கள் என்பதையும் நமது கேள்விகளுக்கு அவை பதில் அளிக்கும் என்பதையும் காட்டுவேன். ஒரு அதிர்ச்சி ஏற்படும்போது மிமோஸா செடியின் இலை தொங்கி விடுகிறது. இப்பதில் நமக்குப் புலப்படும்விதமாக எழுதிவைக்கப்படுவதற்காக நான் ஒரு கருவியை சிருஷ்டித்திருக்கிறேன்......நாம் சிலவற்றைப் பார்ப்பதும் கேட்பதும் இயலாது. ஆனால், 'அல்ட்ராவயலட்ரே'யை செடி பார்க்கமுடியும். நமக்குத் தந்தியில்லா கம்பிமூலம் வரும் ஆகாய அலைகளையும் பார்க்கும் சக்தி செடிகளுக்கு உண்டு; செடிகளுக்கு ஆறுவது உணர்ச்சி இருக்கக்கூடும். செடிகளின் துடிப்புகளை அளவிடுவதற்காக சில பரீக்ஷைகளை நான் நடத்திவருகையில், சிலர் வந்தவுடன் நாடி பாதிக்கப்பட்டதையும், அவர்கள் வெளியே போனவுடன் அது மீண்டும் பழையமாதிரி ஆகியதையும் நான் கவனித்திருக்கிறேன். ஒரு அதிர்ச்சிக்குப் பின்பு செடி பழைய நிலைமையை யடைவதற்கு 12 நிமிஷகாலம் ஆகிறது''.

### அற்புதகருவி

செடிகளின் நாடிகளை அளவிடுவதற்காக ஸர் போஸ் சிருஷ்டித்திருக்கும் கருவிகள் மிகவும் ஆச்சரியகரமானவை; அவை அதிக நுட்பமானவை; செடிகளின் வளர்ச்சிக்கு அதிககாலம் ஏற்படுகிறது; இதைவிட ஒரு நத்தையின் வேகம் 6000 மடங்கு அதிகமாம். சாதாரணமாக ஒரு வினாடியில் ஒரு செடி 1-100000 அங்குலம் வளருகிறதாம். ஆனால் மூங்கில் முதலியவை வேகமாக வளருகின்றன. முதலில் ஸர் போஸ் ஒரு காம்பவுண்ட் லீவரைத் தயாரித்தார்; ஆனால் அது 10000 மடங்கு அதிகப்படுத்திக் காண்பித்தது தமக்கு அவசியமில்லையாதலால், அவர் ஒற்றையானதும் காந்தம் நிறைந்தது மான லீவரை, பூமி சுற்றுவதால் பாதிக்கப்படாத ஒரு ஊசியுடன் நிர்மாணித்தார்; அதி நுட்பமாக அமைக்கப்பட்ட இந்த ஊசி இந்த லீவரில் வட்டமாகச் சுழலும்; இந்த ஊசியுடன் சேர்க்கப்பட்ட ஒரு சிறிய கண்ணாடியிலிருந்து வெளிவரும் வெளிச்சம் ஒரு ஸ்கிரீனில் விழும்படிச் செய்யப்பட்டது; இது 100 லக்ஷ மடங்கு முதல் 10 கோடி மடங்கு வரை பெருக்கப்படலாம். இந்த யந்திரத்திற்கு அவர் ''கிரஸ்கோ கிராப்'' (வளர்ச்சியைக் குறிக்கும் யந்திரம்) என்ற பெயரைச் சூட்டினார். இந்த யந்திரம் ஒரு நத்தைமீது வைக்கப்பட்டால் ஜீவ ஜந்துக்களில் மிக மெதுவாகப்போகும் அதுவும் ஒரு மணிக்கு 2000 கோடி அடிகள் வேகத்தில் போவதாகத் தெரிவிக்கும். இதிலிருந்து இந்த யந்திரத்தின் பெருக்கும் சக்தி தெளிவாகும். 1920-ல் ராயல் சொஸைடி மெம்பர்கள் ராலே பிரபு, ஸர். வில்லியம் பிராக், ஸர். வில்லியம் போலீஸ் முதலியோர் இந்தக் கருவியைப் பரிசோதித்து அது சரியானது எனத் தெரிவித்தனர். ஸர் ஜகதீஸ்போஸ் கூறியதாவது :

"செடிகளுக்கும் ஹிருதயம் உண்டு. கிரஸ்கோகிராப் யந்திரத்தைக் கண்டு பிடிப்பதற்கு முன்பேயே செடிகளின் தண்டுகளிலிருந்து போகும் சத்தானது மானிட ஹிருதயத்திலிருந்து போகும் ரத்தம்போன்றது என நான் உறுதி கொண்டேன்; அதாவது அது நாடிக்கு சமமாகவிருந்தது. இந்த யந்திரம் நான் எண்ணிய யாவும் சரியானவை என்பதை நிரூபித்து விட்டது." இது தவிர இந்தப் பிரபல விஞ்ஞான சாஸ்திரி செடிகளின் ஹிருதய துடிப்பு ஒவ்வொன்றையும் குறிக்க மிகவும் முயற்சித்தார். அதற்குத்தகுந்த வழி பலகாலம் அகப்படவில்லையாதலால் முயற்சி கெட்டுவந்தது. ஒரு நாள் மிருகக் காக்ஷிசாலைக்கு ஸர் போஸ் சென்றபோது ஒரு முள்ளம் பன்றியின் முள் ஒன்று அகப்பட்டது. இதுவே அவர் எதிர்பார்த்தபடி இவருக்கு உதவியது. இதன் பின்பு இவர் வெளியே இருக்கும் அதிர்ச்சி முதலியவை தமது ஆராய்ச்சிகளைப் பாதிக்கக்கூடாதென்பதற்காக "ஷாக் அப்ஸார்"களை ஏற்பாடு செய்து வைத்தார். இவர் செடிகளுக்கு விஷத்தை யூட்டி அவைகளின் அவஸ்தைகளையும் வெளிக்காட்டினார்; மின்சார விசை மனிதனைவிட செடியை மிகவும் பாதிக்கிறது என்பதையும் இவர் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

### உலோகங்களும் உணர்ச்சியுள்ளவை

செடிகளின் இயற்கைகளையும் குணாதிசயங்களையும் கண்டுபிடித்தது தவிர ஸர் போஸ் உலோகங்களிலும் ஆராய்ச்சி செய்திருந்தார். உலோகங்கள் களைப்படைகின்றன வென்பதை இவர் தமது "கால்வனோமீடர்" மூலம் ரூபித்திருக்கிறார். சாதாரணமாக நமது க்ஷவரக்கத்தி உபயோகத்திற்குப் பின்பு மங்கிவிடுவது பலரும் அறிந்ததே. மின்சார விசைகள் இருப்பதைக் கண்டுபிடிப்பதற்கு உபயோகமாகும் நுட்பமான கருவிதான் "கால்வனோமீடர்" என்பது; இதில் ஒரு புள்ளிமீது ஒரு ஊசி வைக்கப்பட்டிருக்கிறது. விசை எவ்வளவு சொற்பமாக விருந்தாலும் ஊசி அசைகிறது. உலோகங்கள் நமது தசை நரம்புகள் போன்றவையாகும்; இது மட்டுமல்லாமல் இவர் உலோகங்களும் ஜீவப்பிராணிகள் மாதிரியாகவே சீதோஷ்ண நிலையால் பாதிக்கப்படுகின்றன வென்பதையும், மயக்க வஸ்துக்கள் முதலியவை அவற்றைப் பாதிக்கின்றன வென்பதையும் ஸ்பஷ்டமாக்கியிருக்கிறார். அதிக அபினி மானிட உணர்ச்சியை மிகவும் குறைத்துவிடுகிறது; ஆனால் சொற்ப வஸ்துவினால் அதிக ஊக்கம் ஏற்படுகிறது; இவ்வாறே அபினி உலோகங்களையும் பாதிக்கிறது என்பதை இவர் ருஜுப்படுத்தினார். உலோகங்களையும் விஷ வஸ்துமூலம் கொன்றுவிட முடியும் எனவும் இவர் ஆராய்ச்சியால் கண்டுபிடித்தார். உலோகங்களுக்குத் துருப்பிடிப்பதால் அதன் வெளிப்பாகங்கள் விஷத்தினால் பாதிக்கப்படுகிறதாம். மோட்டார், கத்தி, பேனா ஆகியவைகளுக்காக உபயோகமாகும் வஸ்துக்கள் ஒருவிதமான மயக்கத்தில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

ஸர் ஜகதீச போஸ் தமது ஆராய்ச்சிகள் மூலம் உலகத்தில் எல்லா வஸ்துக்களும் ஒரே மாதிரியானவை என்பதை நிரூபித்த பிரதம விஞ்ஞான சாஸ்திரியாவார். சுமார் 1901-ம் வருஷம் இவர் ராயல் சொஸைடி கூட்டத்தில் தமது ஆராய்ச்சிகளை வெளியிட்டார். இது பலரது அசூயையை எழுப்பியது. பின்பு கூட்ட முடிவில் போஸின் வியாஸம் நிராகரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. சிலகாலம் முன்பு இவரது பரீக்ஷைகளைப்



பார்த்த ஒருவர் வியாஸம் எழுதி அனுப்பிவிட்டாராம். ஆயினும் இவர் மனஞ் சலியாமல் தமது உரிமையை ஸ்தாபித்துக் கொண்டார்.

1928-ல் ஸர் போஸ் ஜினிவாவிற்குச் சென்று திரும்பினார். வெளிக்குப் புலப்படாத மின்சார அலைகள், தாவரங்களின் வளர்ச்சி முதலியவை, எல்லா ஜீவன்களிலும் ஒற்றுமை இருப்பது ஆகிய 3 விஷயங்களைப் பற்றிப் புதிதாக ஆராய்ச்சி செய்து அநேகம் உண்மைகளை வெளியிட்ட பெருமை இவரைச் சேர்ந்தது. ஸர். போஸ் இந்தியாவில் அநேகம் சர்வகலாசாலைகளுக்கு வரவழைக்கப்பட்டு பல பட்டமளிப்புவிழாப் பிரசங்கங்களைப் புரிந்தார்; அவை யாவராலும் படிக்கத்தக்கவை.

உலகத்திலுள்ள பல பெரியார்களும் இவரைப் புகழ்ந்து எழுதியுள்ளனர். ஸர். போஸ் சாதாரணமாகவே எளிய வாழ்க்கையை மேற்கொண்டு வித்தியார்த்திகளுக்குச் சலியாத உதவியை அளித்து வந்தார். தமது ஆராய்ச்சி ஸ்தாபனத்திற்கு இவர் ஏராளமாகப் பணங் கொடுத்தார்.

"இந்தியாவைத் தவிர வேறு ஒரு தேசத்திலும் அறிவு வளர்ச்சிக்கான ஆர்வம் அதிகமாகக் கிடையாது; நமது மூளைகள் வேலை செய்யாமற்போவதைவிட அதிகமான கெடுதல் வேறு ஒன்றும் கிடையாது. பண்டைக்காலத்தில் ஜனங்கள் ராஜ சபையில் மரியாதை செலுத்தி வந்ததற்கு அச்சபைகள் ஆத்மீக அறிவு வளர்ச்சிக்காக உதவியதே காரணமாகும். நமது தேசிய வேலைகளிலும் நாம் அதிக திறமையுடன் விளங்குவதற்கும் நாம் அவா கொள்ளவேண்டும். இந்திய மக்கள் ஒரு தனி ஜாதியைச் சேர்ந்தவர்களல்ல; சரித்திரத்தை சரியாகப் படிப்பவருக்கு இங்கு அநேகம் ஜாதியினரும் வகுப்பினரும் வந்து இதையே தாய் நாடாகக் கருதிவந்தது தெளிவாகும். இந்திய மக்களின் ஐக்கியமான முயற்சியினால்தான் சர்வதேச சமஷ்டியில் இந்தியாவிற்குத் தகுந்த ஸ்தானம் கிடைக்கும்."

"அமிருத பஜார் பத்திரிகை"க்குத் தமது அந்தியத்துக்குச் சற்று முன்பு அனுப்பிய இச்செய்தியே பாரதநாட்டு மக்களுக்கு ஸர். போஸ் விடுத்த கடைசி செய்தியாகும்.

### மரண சாஸனம்—தருமம்

ஸர். ஜகதீசசந்திர போஸ் தமது ஆயுட் காலத்தில் சம்பாதித்து மிச்சகுபடுத்திய தொகையான 4 லக்ஷ ரூபாயை பல பொது ஸ்தாபனங்களுக்க, எழுதிவைத்துப் போயிருக்கிறார். அவர் பெரிதும் கல்வி ஸ்தாபனங்களுக்கே பணம் எழுதிவைத்திருக்கிறார். போஸ் இன்ஸ்டிடியூட்டின் ஸூப்பிரிண்டான ஸ்ரீமான். எ. என். மித்திரை அஸோஸியேடட் பிரஸ் நிருபர் கண்டு பேசியபொழுது அவர் கூறியதாவது!—சட்ட சம்பிரதாயங்கள் தீர்ந்தவுடன் அவரது பண சகாயத்தைப் பெற்ற ஸ்தாபனங்களின் பெயர் தெரிவிக்கப்படும்.

ஸர். ஜகதீஸசந்திர போஸ் இதுவரை 17 லக்ஷ ரூபாய் தர்மம் செய்திருக்கிறார். இவற்றில் போஸ் ஆராய்ச்சி கூடத்தை 1917-ம் வருஷம் ஆரம்பிக்கும்போது அவர் $1\frac{1}{2}$ லக்ஷ ரூபாய் பெறுமான நிலத்தைக் கொடுத்தார். 50,000 ரூபாய் கட்டட நிதிக்குக் கொடுத்தார். இதன் நிரந்தர நிதிக்கு ஒருலக்ஷ ரூபாய் கவர்ன்மெண்ட் பிராமிசரி நோட்டுகளாகக் கொடுத்தார். அவர் அதனைத் தேசத்திற்கு அர்ப்பணம்செய்தார். போஸ் இன்ஸ்டி

# பாப்பா பாட்டு

(T. S. ராஜகோபாலன், B. A., L. T.)

கவிச் சக்ரவர்த்தி—திரு. சி. சுப்பிரமணிய பாரதியாரின் திருப் பாடல்களைப் பற்றி, தற்சமயம் எழுதுவது, "கொல்லத் தெருவில் ஊசி விற்பது" போலாகும். இப் பாடல்கள் இப்போது எங்கும் சங்கநாதம் போல் முழங்குகின்றன. பல தேசாபிமானிகளின் உள்ளங்கள் குளிருகின்றன. ஆனந்தம் பொங்குகிறது. யாவரும் பரவசமாகி, பாரதியாரின் பெருமையைப் பாவித் துதிக்கின்றதும் அனுபவம். பண்டிதர், பாமரர், அரசியல் வாதிகள், சமூக வாதிகள், ஆஸ்திகர், நாஸ்திகர், பொழுது விடிந்து பொழுது போனால், வசை புராணமே படிப்பவர்கள், சங்கீத வித்வான்கள் பலருக்கும் வற்றாத சமுத்திரமாகவும், காலியாகாத சுரங்கமாகவும் விளங்குகின்றன அப் பாடல்கள் என்பது மிகையாகாது. தவிரவும் படிப்பவர் எத்திறத்தவராயினும் அத் திறத்தாருக்குத் தகுந்தபடி பொருள் கொடுக்கும் சங்கப் பலகையின் தன்மை வாய்ந்தன என்பதும் மிகையாகாது.

பாரதியார் சிறந்த வேதாந்தி! பரந்த தீர்க்கதரிசி! உளங்கனிந்த தியாக மூர்த்தியான தேசாபிமானி! அனுபவ ஞானி! பிறரதென்றும், தனதென்றும் பாரபக்ஷம் பார்க்காதபடி குற்றங் கண்ட விடம் எதுவாயினும் கண்டா கோடறி போல் தாக்குபவர்! உயர்ந்த பொருள்களையும் எளிய நடையில் பாமரரும் அறிந்து கொள்ளச் செய்பவர்! கல் நெஞ்சையும் கரையச் செய்து, மண் மரமாயினும் தேசிய வெறியில் முழுகச் செய்யும் ஆற்றல் வாய்ந்தவர். அரசியல் மாத்திரமே யன்றி, இலக்கியம், பொருளாதார நிலை, சமூக சீர்திருத்தம், பெண்கள் விடுதலை, முன்னேற்றம், கல்வி முதலியவற்றில் தீவிர முற்போக்குக் கருத்துகள் கொண்டவர்! சுருங்கச் சொல்லுமிடத்து ஒரு உயரிய அவதார புருஷர்! ஏனைய அவதாரங்களைப் போன்று, சட்டெனத் தோன்றி, சொல்ல வேண்டிய விஷயங்களை வெடுக்கெனச் சொல்லி, மின்னல் வேகத்தில் பூத உடலை நீத்து, புகழுடம்பைப் பெற்ற பெரியார்!

---

டியூட் டிரஸ்டை 1931-ம் வருஷத்தில் ஏற்படுத்தி அதற்கு 697000 ரூபாய் பெறுமான கவர்ன்மெண்ட் பிராமிசரி நோட்டுகளையும் 3 லக்ஷ ரூபா பெறுமான வீட்டையும் கொடுத்தார். லேடி போஸுக்கு அவரது ஆயுட் காலத்தில் மாதம் 800 ரூபாய் பெறுவார். இதல்லாமல் அவருக்கு 20000 ரூபாய் படி கொடுக்கப்படும். லேடி போஸ் கல்கத்தாவில் ஸர். ஜகதீச சந்திர போஸ் வீட்டிலும் டார்ஜிலிங்கிலுள்ள மாயாபுர ஆராய்ச்சிக்கூட ஸ்தலத்திலும் தங்கியிருக்கலாம்.

ஸர். ஜே. ஸீ. போஸ் தமக்கு வருஷாவருஷம் [illegible]டைத்துவந்த 50000 ரூபாய் வருமானத்தில் 40000 ரூபாயை மிச்சப்படுத்திவந்[illegible]ர். அவர் இதனை இந்தியாவில் விஞ்ஞான சாஸ்திர ஞானப் பெருக்கிற்காகச் செலவிடுவதற்கு இவ்வாறு செய்து வந்தார்.



"புலவர் வறுமை" என்பதை ஔவையார், கம்பன், காளமேகம் முதலியவர்களின் கதைகளில் கேட்டது உண்மைதான் என்பதை உலகத்தாருக்குக் காட்ட வந்தவரே போன்று அவருடைய ஜீவிய திசையில் பல அல்லல்களுக்கும், கிலேசங்களுக்கும் இலக்கானவர்! அரசாங்கத்தின் மூலமும் வேண்டிய அளவுக்கு, தடையுத்தரவு, தேசப்ரஷ்டம் முதலிய அவதிகளுக்கும் ஆளானவர். "Few great men are honowred in their life times—சில மஹான்களே அவர்களுடைய ஜீவிய திசையில் சரியாக மதிக்கப்படுகின்றனர்" என்ற சொல்லுக்கு, இயேசு கிறிஸ்து, நபிகள் நாயகம் போன்று உதாரணமானவர்! மேனாட்டு மேதாவிகளில் ஒருவரின் பரிதாப வறுமை மரணத்தைக் குறித்து மற்றொரு கவி "He cried for a morsel of food while he lived; and he was given a stone when he died உயிருடனிருந்த வரையில் ஒரு கவளம் ஆகாரத்திற்கு பரந்தவருக்கு இறந்த பிறகு ஒரு கல் கொடுக்கப்பட்டது. (புகழை விவரிக்கும் கல்லறை மேல் பதிக்கும் சலவைக்கல்)" என்று எழுதியது நமது பெரியாருக்கும் பொருந்தும். அவருடைய புஸ்தகங்கள், அவர் இறந்த பிறகுங் கூட பறி முதல் செய்யப்பட்டன. பாடல்களைப் பள்ளிக்கூடங்களிலும், பொது விடங்களிலும் பாடக் கூடா தென பறையடிக்கப்பட்டது போன்றதும், மீறியவர்களுக்குத் தண்டனையும், தடியடியும் சிறைவாசமும் ஏற்பட்டதும் பலருக்கும் சமீப காலத்திலும் கூட நடந்த மறக்க முடியாத ஓர் அனுபவமாகும்.

ஆனால் பாரத மக்களின் க்ஷேம காலத்திற் கறிகுறியாக இப்போது அவ்விதம் ஒன்றும் இல்லாமலும் அவைகளில் உள்ள சொல் நயம், பொருள் நயம், கவி நயம், கானரஸம் முதலியன உணர்ந்து அனுபவிக்கப்படுவது பெரும் பாக்கியமும் ஆகும். பாரதியாரின் பாடல்களின் பெருமை தமிழ் நாட்டில் மட்டிலுமன்றி, வடநாட்டிலும், மேற்கு நாடுகளிலும் பரவத் தொடங்கி, அவரே சொன்ன, "திறமான புலமை யெனில் பிற நாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்" என்ற வாக்குகளுக்கு உதாரணங்களாக, ஏற்கனவே யுள்ள "நாலடியார், "குறள்," "திருவாசகம்" போன்ற புனித நூல்களுக்கு ஒப்பாக அப் பாடல்கள் ஆகி வருகின்றன!

அத்தகைய பெரியாரின் பாடல்களில் ஒன்றான பாப்பா பாட்டைப் பற்றி எழுதலா மென்பது இக் கட்டுரையின் நோக்கமாகும். நாலுணர்வோ, இலக்கிய உணர்வோ, இலக்கண அறிவோ இல்லாத எனது இம் முயற்சிக்கு ஆனந்தனும் ஆனந்தனுடையவும் அபிமானிகளினுடைய ஆசி கோரப்படுகிறது. ஆன்றோர் குற்றம் பொறுத்துக் குணம் கொள்க! தமிழர் உள்ள மூலை முடுக்கு, தெரு, சந்து, பொந்து, ஆண், பெண், மூத்தோர் இளையோர் சகலரும் பாடத் தொடங்கி "எழுந்து விளங்கிய தறிவெனும் இரவி—எங்கும் பொங்கிய தெங்கணும் சுதந்திர நாதம்" என்ற வாக்குப் பலித்து விழிப்படையும் நாள் அண்மைக்கு வரவேண்டும் என்பது ஒவ்வொரு தேசாபிமானியின் பேரவா! அது பூர்த்தியாக பாரத சக்தி இன்னருள் பாலிப்பாளாக!

(1) ஓடி விளையாடு பாப்பா நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா
கூடிவிளையாடு பாப்பா—ஒரு குழந்தையை வையாதே பாப்பா.

என்ற முதல் பாட்டிலேயே குழந்தைகளுக்கு ஓடி விளையாடி சந்தோஷமாக காலங் கழித்து தேகப்பயிற்சி நிறைந்து இருக்க வேண்டும் என்கிறார்.

பேச்சுப் பழக ஆரம்பிக்கும் போதே "சீ சொல்லு" "நாயே சொல்லு" "அம்மா கொரங்கு" என்று செல்லப் போக்கில் துரப்பியாசம் செய்யப் பட்ட குழந்தைகளையும், பெற்றோர்களையும் திருந்தச் சொல்லுகிறார். பெற்றோருக்கு நல்ல சூடு!

(2) சின்னஞ்சிறு குருவிபோலே நீதிரிந்து பரந்துவா பாப்பா
வண்ண பறவைகளைக்கண்டு நீ மனதில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா.

என்று மறுபடியும் தேகாப்பியாசத்தை வற்புறுத்தி ஜீவகாருண்யத்தைப் புகட்ட நினைத்து, கோழி, குருவி, காக்கை, பசு, நாய், மாடு, குதிரை, ஆடு முதலிய வீட்டு மிருகங்களிடம் காட்ட வேண்டிய கருணையை வெகு எளிதான முறையில் உளங்கொள அடுத்த மூன்று பாட்டுகளில் விளக்குகிறார் என்பது கவனிக்கத் தக்கதாகும்.

(3) கொத்தித்திரியும் அந்த கோழி அதை கூட்டி விளையாடு பாப்பா
எத்தித்திருடும் அந்த காக்கை அதற்கிரக்கப்பட வேண்டும் பாப்பா.

(4) பாலைப்பொழிந்து தரும்பாப்பா அந்தபசுமிக நல்லதடி பாப்பா
வாலைக்குழைத்துவரும் நாய்தான் அது மனிதர்க்குத் தோழனடிபாப்பா.

(5) வண்டியிழுக்கும் நல்லகுதிரை நெல்லுவயலில் உழுதுவரும் மாடு
அண்டிப்பிழைக்கும் நம்மை ஆடு அதை ஆதரிக்கவேணுமடி பாப்பா.

என்று இந்த மூன்று பாக்களில், இரண்டுங் கெட்டான் வினைத் தெரியாத இளம் பிள்ளைகள் செய்யும் சிறு விஷமங்களைக் களையச் சொல்லுவதன் அருமை சிந்திக்கச் சிந்திக்கத் தான் தெரியவரும். ஆழ்ந்து கவனிக்க அரும்பொருள்கள் தோன்றும். தெருக்களில் குழந்தைகளின் கொட்டங்களையும் குறும்புகளையும் கவனிக்கும் போது, இவ் வார்த்தைகள் பொன்னே போல் போற்றத்தகும் தன்மையன. அடுத்து பள்ளிக்குப் போகும் குழந்தைகளை நினைத்து, கல்வி, முறை, நற்போதனை சன்மார்க்கம் முதலிய நீதிகளை சுருங்கக் கூறுவதைக் கவனிக்க இப் பாக்கள் "அணுவைத் தொளைத்து எழு கடலடைத்த குறள்" தன்மையைப் பெறுகிறது விளங்கும்.

(6) காலை யெழுந்தவுடன்படிப்பு, பின்புகனிவு கொடுக்கும்நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு என்று வழக்கப்படுத்தி கொள்ளுபாப்பா.

இந்தப் போதனை முறை எவ்வளவு நவீனகாலப் போக்கை யுடையது என்பதை "புஸ்தகப்படிப்பு மட்டும் போதும்" என்று ஓலமிடும் பழங்காலப் பெரியார்கள் உணர வேண்டிய விஷயம்.

(7) சோம்பல் மிகக்கெடுதி பாப்பா தாய் சொன்னசொல்லைத் தட்டாதே [பாப்பா
தேம்பியழுங் குழந்தை நொண்டி, நீதிடங்கொண்டு போராடு பாப்பா

(8) பொய் சொல்லக்கூடாது பாப்பா என்றும் புறஞ்சொல்ல லாகாது [பாப்பா
தெய்வம் நமக்குத்துணை பாப்பா ஒருதீங்கும் வரமாட்டாது பாப்பா.

(9) பாதகம் செய்பவரைக் கண்டால் நீ பயங்கொள்ள லாகாது பாப்பா
மோதி மிதித்துவிடு பாப்பா அவர்கள் முகத்திலுமிழ்ந்துவிடு பாப்பா.

என்று எவ்வளவு நன்றாக பாடுகிறார். துஷ்ட தீயகாரியங்களை வெறுக்கச்



சொல்லுகிறார் என்பதைச் சிந்திக்கவேண்டும். அந்தக் காரியங்களினால் வருங் கஷ்டங்களைச் [illegible]கித்துக்கொள்ள,

(10) துன்பம் நெருங்கி வந்தபோதும்நீ சோர்ந்துவிட லாகாது பாப்பா
அன்பு நிறைந்த தெய்வமுண்டு, துன்பம் அத்தனையும் போக்கிவிடும் [பாப்பா.

இந்தப் பாட்டில் "Personal element" என்று சொல்லும் கவியுளம் தெளிவுறுத்துகிறார் என்றும், குழந்தைக்கும் அந்தத் திடமனதைப் போதிக்கிறதும் தெரியவரும். தாங்கொணாத கஷ்ட திசையிலும் இருந்ததாகச் சொல்லப்படுகிறது.

அடுத்து தாய்பாஷை தாய் நாடு முதலியவற்றில் அன்பு செலுத்த வேண்டும் என்று அறிவுறுத்தும் அழகு அளவி லடங்காததாகும். யான் கண்ட இன்பம் பிறரும் காண்க.

(11) சொல்லில் உயர்வுதமிழ்ச் சொல்லே அதை தொழுது படித்திடடி [பாப்பா
மல்லர்நிறைந்த ஹிந்துஸ்தானம் இதை தெய்வமென கும்பிடடிபாப்பா!

(12) தமிழ்திரு நாடுதனைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா!
அமிழ்தில் இனியதடி பாப்பா எங்கள் ஆன்றோர்கள் தேசமடி பாப்பா.

என்று அழகுறச்சொல்லி, அத் தேசாபிமானம் குறுகிய மனோபாவத்தைக் கொண்டதாகாது எனச்சொல்லி, நாட்டின் எல்லைகளைச் சொல்லும் போக்கில், பூகோள விஷயத்தையும் கொஞ்சம் சுருக்கமான சரித்திரத்தையும் புகுத்துகிறார் புனிதர்!

(13) வடக்கில் இமயமலை பாப்பா தெற்கில் வாழுங் குமரிமுனை பாப்பா
கிடக்கும் பெரியகடல் கண்டாய் இதன் கிழக்கிலும் மேற்கிலும் பாப்பா.

(14) வேதமுடைய திந்தநாடு நல்ல வீரர்பிறந்த திந்நாடு
சேதமில்லாத ஹிந்துஸ்தானம் இதைத் தினமும் புகழ்ந்திடடி பாப்பா.

இந்தப் பாட்டிலுள்ள ஆழ்ந்தபொருள் பரந்த தேசமாயினும், "சேதமில்லாதது" என்ற பதங்களால் அவ்வளவும் ஒரே தேசம். பல பிரிவுகள் அற்றது. உணர்ச்சி ஒன்று வெளிப்படை வேற்றுமைகள் வினாடிப்பொழுதில் மறைந்துவிடும் என்று அறிவுறுத்துவது எவ்வளவு கம்பீரமாக இருக்கிறது ஆக மத்திம வயதுவரையில் வந்த பாரதியார் வளர்ந்த நிலைமைக்கு உயர்ந்த வேதாந்தத்தைக் கடைசி இரண்டு பாக்களில் வைத்துமுடிப்பது மிக மிகப் பெருமையும் பொருத்தமுமுள்ளது சிந்திக்க சிந்திக்க தெளியும் என்பதை மீண்டும் மீண்டும் சொல்லத்தான் வேண்டி யிருக்கிறது.

(15) ஜாதிகள் இல்லையடி பாப்பா குல உயர்வுதாழ்ச்சி சொல்லல் பாவம்
நீதி உயர்ந்தமதி கல்வி அன்பு நிறைய உடையவர்கள் மேலோர்

என்றதில் மறுபடியும் கீழ்ஜாதி என்பதே இல்லை என்பதைக் குறிப்பாக சொல்லாமலே விட்டுவிட்டுக் குறிப்பிடுகிறார். இதை "ஏழை யென்றும் அடிமை யென்றும் எவனுமில்லை ஜாதியில் இழிவுகொண்ட மனிதரென்பதிந்தியாவில் இல்லையே" என்றதாலும் "தொண்டரென்றோர் வகுப்பில்லை தொழிற் சோம்பலைப்போ விழிவில்லை" என்றதாலும், "நாலு வகுப்பு மிங்


கொன்றே, இந்த நான்கிலொன்று குறைந்தால் செத்து வீழ்ந்திடும் மானிட ஜாதி!" என்றதாலும் இன்னும் பற்பல சந்தர்ப்பங்களில் அவர் சொற்களாலும் பரக்ககண்டு தெளியலாம், கடைசியாக,

(16) உயிர்களிடத்தி லன்புவேண்டும் தெய்வம் உண்மை யென்றுதா [னறிதல் வேண்டும்
வயிரமுடைய நெஞ்சுவேண்டும் இதுவாமும் முறைமையடி பாப்பா.

என்று முடித்திருப்பது மிகமிகப் பெரியாருக்குக்கூடப் பொருந்தும் என்பதோடு குறிப்புகளை முடிக்கும் முன்பு இப்பாடல்கள் எப்படித்தோன்றின; எந்த சந்தர்ப்பத்தில் தோன்றின என்பதையும் கேள்விப்பட்டவாறு எழுதி முடித்துவிடுவோம். கேள்விப்பட்டது நிச்சயமாக நல்ல ஞாபகத்திலிருப்பதானாலும், இதிற் சம்பந்தமானவர்கள் இன்னும் இருப்பதால் அவர்கள் இது விஷயத்தில் திருத்துவார்கள் என்று எழுதப்படுகிறது. திருத்த இடம் கண்டு, திருத்துபவர்களுக்கு, என் மனமார்ந்த வந்தனம் முன்னதாகவே சமர்ப்பிக்கப் படுகிறது.

வரகவியான நமது பாரதிப்பெரியார் எங்கிருந்தோ அலைந்துவிட்டு சுற்றித்திரிந்து வீட்டிற்குள் நுழைந்த சமயத்தில் அவருக்கு ஒரே குழந்தையான செல்வக்குமாரி "என்ன அப்பா எல்லாருக்கும் பாட்டு பாடறியே. நேக்கு ஒரு பாட்டு பாடமாட்டியா?" என்று கேட்டனளாம். அலுப்பென்பதே அறியாத பெரியார் உடனே, பெண்ணைக் குத்துவிளக்கு மாதிரி நடுவில் இருக்கும்படியாக விட்டு, சுற்றிச் சுற்றிவந்து கையைக் கொட்டிக்கொண்டு திடீரென "ஓடி விளையாடு பாப்பா..............." என்று ஆரம்பித்த அதேசமயத்தில் பாடி முடித்தாராம் இந்த பதினாறு அடிகளையும்! உட்கார்ந்து, யோஜித்து, எழுதி, திருத்தி, கூட்டி, குறைத்து, அடித்து புதுப்பித்து, மாற்றி எழுதியனவல்ல பல பாட்டுகளும் என்று அடிக்கடி அவருடன் நெருங்கிப் பழகினவர்கள் சொல்லக் கேட்டதுண்டு. உண்மைதான் என்பது அவருடைய திருவாக்குகளைப் படிப்பவர்களுக்கு ருஜுவும் ஆகும். ஆரம்பத்தில் பாலபருவம், அதனுடைய தப்புச்செயல்கள் வீட்டு மிருகங்களிடம் காட்டவேண்டிய ஜீவகாருண்யம், பிறகு படிப்பு அந்தப் படிப்பின் வெகு முற்போக்கான முறை, சோம்பலின்மை, உண்மை, தூய நடத்தை, தீயன வெறுத்தல், கடவுள் பக்தியில் உறுதி, பாஷாபிமானம், தேசாபிமானம், அதுவும் பரந்த தேசாபிமானம், பூகோளம், சரித்திரம், உயர்ந்த வேதாந்தங்கள், மனித வாழ்க்கையில் உள்ள லக்ஷியம் இவைகளை சொல்லிக் கோத்து வைத்தாற்போல் பாட்டுகள் ஒன்றன்பின் ஒன்றாய் அமைந்திருக்கும் அவருடைய அருள்வாக்கின் பெருமையை, பாலர்முதல் விருத்தர் வரையிலுள்ள எவர்க்கும் பொருந்தும்படியான வளர்ச்சிப் போக்கையும் எவ்வாறு புகழ்ந்து என்ன கைம்மாறு அவ்வவதார புருஷனுக்குச் செய்யப்போகிறது தமிழுலகம்? வரகவி, திருகவி என்று பலரும் நாமஞ் சூட்டுகிறார்களே அதையும் யோஜித்துணரற்பாலது. மேலே சொன்னபடி, சந்து, பொந்து, மூலைமுடுக்கு, பாலர், விருத்தர், நடுத்தர வயதினர், ஆண்பெண் அடங்கலும் தெருக்களிலும் வீடுகளிலும், சபைகளிலும், கூட்டங்களிலும் பாடிப்பாடி அவருடைய ஆத்ம திருப்திக்கும், ஆசிக்கும் பாத்திரமாவார்களாக!

---




# சாந்தமில்லையேல் சௌக்கியமில்லை

(பண்டித-பூ. ஸ்ரீநிவாசன்.)

"சாந்தமில்லையேல் சௌக்கிய மில்லையே" என்னும் இவ் வரிய வாக்கியம் ஸ்ரீ தியாகராஜய்யர் கீர்த்தனைகளு ளொன்றின் "பல்லவி"யாக அமைந்திருப்பது.

"சாந்தமுலேக சௌக்கியமுலேது"

என்று அவர் தெலுங்கில் கூறுகின்றார். இது என்ன அருமையான வாக்கியம்! சௌக்கிய மடையும் நெறி எதுவென ஆராய்ந்து ஆராய்ந்து கண்டு அனுபவித்த பின்னரே, எத்தகையோருக்கும்—எச் சமயத்தினர்க்கும்—சித்தாந்தியாயினும் சரி, வேதாந்தியாயினும் சரி, செல்வச் சீமானாயினும் சரி, போக்கியப் பொருள்களனைத்தையும் குறைவறப் பெற்றோனாயினும் சரி, ஜபதப சம்பத்துக்களை யடைந்தவனாயினும் சரி, சகல கலா வல்லபனாயினும் சரி, சாந்த மொன்று மாத்திரம் இல்லாவிட்டால் சௌக்கிய முண்டாகாது என்று துணிவுடன் கூறுகின்றார் ஐயரவர்கள்.

மறைகளின் முடிவான கருத்தைத் தனக்குளடக்கிக் காட்டும் இச் சிறு வாக்கியத்தைக் கடைப்பிடித் தொழுகி இவ்வுலகம் சுவர்க்கத்திலும் சிறப்புற்று விளங்காதோ! மறுமையில் மாத்திரமல்ல; இம்மையிலும் சுகவாழ்வைச் சுலபமாக எய்தச் செய்வதாகிய கற்பதருவன்றோ இச் சாந்தம்! இதனைப் புறக்கணித்து—மறந்து—வேறெவ்வெத் துறைகளிலோ சென்று உலகம் அல்லற் பட்டழிவதைக் காணுந்தோறும் காணுந்தோறும் இச் சாந்தத் துறையின் அருமைப்பாடு தெள்ளிதிற் புலனாதலைக் காண்போம். வீடு, கிராமம், நகரம், தேசம் அந்தோ! உலகமே எந் நிலையில் நின்று எவ்வித துன்பங்களனுக விளங்குகின்றது! ஒவ்வொரு குடும்பத்திலும், ஒவ்வொரு கிராமத்திலும், ஒவ்வொரு நகரத்திலும், ஒவ்வொரு தேசத்திலும், பொதுவாக உலக முழுவதிலும் கலகம், பயம், துக்கம், கோபம், பகை, வெறுப்பு, கொலை எவ்வளவு மலிந்து சூறையாடிக்கொண் டிருக்கின்றன! இவ்வளவும் சௌக்கியம், சந்தோஷம், சமாதானம் என்பவற்றின் பெயரால் நடைபெறுகின்றன. இது எவ்வளவு வியப்பு! உடம்பின் அழுக்கைப் போக்க அவாவுவோன் நன்னீரில் ஆடாமல் சேற்றில் குளிக்கும் கதை போன்றதன்றோ இச் செய்தி. வடதிசைக்கணுள்ளதாகிய காசிக்குச் செல்லப் புறப்பட்டவன் தென்றிசை நோக்கிச் செல்வதாற் பயன் யாது? சௌக்கியம் சந்தோஷம் சமாதானம் இவைகளைப் பெறக் கருதுவோர் அவற்றிற்குக்

காரணமான சாந்தத்தைக் கைக் கொள்ளாமல், அதற்கு நேர்மாறான முறைகளைக் கையாளுவது எத்தனை பேதைமை!

ஜெர்மனி, இதாலி, ஜப்பான், சீனா, ஸ்பெயின் முதலிய தேசங்களின் நிலைமைகளைக் கவனிப்போமாயின் அம்மம்ம! என்ன பயங்கரம்!! எமனுதரின் தொழிற்சாலைகளாக விளங்குகின்றனவே! சாந்தம் எந்தக் காலத்தில் ஆட்சி நடத்தத் தொடங்குமோ அதுவரையில் அந் நாடுகளுக்கு உய்வுண்டாதலில்லை.

"மனிதன் ஆகாயத்திற் பறக்கிறான்; கடலை நீந்திக் கடக்கிறான்; பல்லாயிரம் மைல்களுக் கப்பால் ஒருவன் பேசுவதைக் கேட்கும் வன்மை பெறுகிறான்; இன்னும் எத்தனையோ அற்புதங்களை யெல்லாம் செய்கிறான்; ஆனால் மனிதன் மனிதனாகவே இருக்கும் தன்மையைப் பெற இயலாதவனா யிருக்கிறான்; ஏன்? மனிதத்தன்மையை அடியோடு நசிக்கச் செய்கிறவனாகிறான்" என்றோர் அறிஞர் கூறுவதில் எவ்வளவு உண்மை பொதிந்து கிடக்கிறது!

இனி, சாந்தமென்பது யாது? அதன் தன்மை யென்ன? என்னும் விஷயங்களைக் குறித்துச் சிறிது ஆராய்வோம். சாந்தம் என்பது பலசமயங்களில் வழங்கப்படத்தக்க பதமாக விருப்பினும் 'அடக்கம், அமைதி' என்னும் பொருள்களில் வழங்கி வருவதாகும் என்று பொதுப்படக் கூறி விடலாம். அடக்கம்—அமைதி என்னும் இவ் விரு சொற்களும், அடங்குதல், அமைந்திருத்தல் என்னும் ஒரு பொருளையே குறிக்கும் சொற்களாகும். சாந்தம் என்னும் பதம் தரும் பொருள்களனைத்தையும் இச் சொற்களும் தரும். நிற்க.

அடக்கம் என்றால்; எதன் அடக்கம்? மனமொழி மெய்களின் அடக்கம் என்பதே இதற்கு விடை. குறளில் "அடக்க முடைமை" என்பதற்குப் பரிமேலழகரும் "மனம் வாக்கு காயம் என்னும் முக் கரணமும் பழி பாவங்களைத் தரும் கெட்ட வழியில் செல்லாமல் அடங்குதல்" எனப் பொருள் கூறி யிருத்தலுங் காண்க. எனவே, மனம் மொழி மெய்களின் அடங்கியிருக்குந் தன்மையே அடக்கம் அல்லது சாந்தம் என்பதன் பொருள் என்பது நன்கு விளங்குகின்றது.

இவ்வாறு மனம் மொழி மெய்களின் அடக்கமே சாந்தம் எனப் பொதுப் படக் கூறினும், இம் மூன்றனுள் மனமே ஏனைய விரண்டிற்கும் மூலமாக விருத்தலின், அதனடக்கமே ஈண்டு இன்றியமையாது வேண்டப்படுவதாகும். இதனையே-மனச்சாந்தியையே-சாந்தம் என்னும் சொல்லால் குறிக்கின்றார் ஐயரவர்கள். ஏனைய மொழியும் மெய்யும் மனம் கருதிய வழி தொழிலாற்றுவனவாதலின், வேரற்றவளவில் விருக்ஷத்தின் மற்றைய வுறுப்புகள் அழிந்துபடுதல்போல, மனம் அடங்கப்பெற்ற வளவில் அவையும் செயலறநிற்கும். இச்சாந்த நிலையைப் பெரு முயற்சியால் சாதிக்கப் பெற்றுவிடின் ஆ! ஒருவன் அடையும் சௌக்கியத்திற்கு எல்லையுமுண்டோ! சாந்தக் கதிரோன் முன் துன்ப விருளும் தலை தூக்குமோ! எத்தனை இன்பம்! எத்தனை ஆனந்தம்! எத்தனை சுகம்! பேரின்பப்



பெருவாழ்க்கை யன்றோ அவனது வாழ்க்கை! ஆனந்தக் கடலில் இடைவிடாது திளைக்கும் புருஷோத்தம னன்றோ அவன்!

எல்லாத் துன்பங்களுக்கும் மூலகாரணம் காமமும் கோபமுமே. இவ்விரண்டினின்றுமே பல துர்க்குணங்கள் தோன்றும். வெட்டு, குத்து, கொலை, களவு, கொள்ளை, வஞ்சனை முதலியவற்றை அடுக்கடுக்காக பெற்று வளர்க்கும் தாயும் தந்தையும் காமமும் கோபமுமே. மூங்கிலிற் பிறந்த தீ அம் மூங்கிலையும் பின் அதனைச் சுற்றிலுமுள்ள மரங்களையும் எரித்து வனத்தையே அழித்து விடுதல்போல, ஒருவன் கண் தோன்றிய காமகோபாக்கினிகள் அவனையும் பிறரையும் அழித்துவிடும். தீக்குணங்களாகிய கொடிய விலங்குகள் சதா உறுமி பிளிறி முழங்கிப் போரிட்டுக் கொண்டு கிடக்கும் மனமாகிய வனத்தில் சாந்தியேது? சமாதானமேது? சந்தோஷமேது? சௌக்கியமேது? சாந்தமெனும் வாளால் கொல்லப்பட்டு அவை தொலைந்தாலன்றி சௌக்கிய மென்பது குதிரைக் கொம்பேயாகும்.

செல்வத்தால் சௌக்கிய முண்டாகும் என்பது பலர் காணும் பகற்கனவு. இன்பவெழுச்சிக்குச் செல்வமும் பிற பொருள்களும் ஒருவாறு சாதன மாகுமேயன்றி இன்பத்தை அவை தருவனவல்ல. இன்பமோ சுகமோ வெளியிலிருந்து மனத்தினுள் நுழைத்துத் திணிக்கப்படுவனவல்ல. மாசற்ற மனத்தினின்றே எழுவதாகும் இன்பமென்பது. அவ் வின்பவூற்றுப் பாதையைக் காமக் குரோதாதிகளாகிய தடைகற்கள் தடுக்காவிடின் அது பெருகிக்கொண்டே யிருக்கும். இவ்வுண்மையை யறிந்து அவற்றை யகற்று முயற்சியில் வெற்றி பெற்றவனே, அச்சாந்த வூற்றினின்றெழும் சுகவாரிதியிற் றிளைத்துச் சுக வடிவினனாகத் துலங்குவான். இதனில் முயலாது "செல்வமில்லையேல் சுகமுமில்லையே" என மயங்கி அச்செல்வத்தைச் சேகரிப்போர் செல்வத்தையல்ல; துன்பத்தையே சேகரிப்போராவர்.

ஒரு தொழிலாளி; தன் தொழிலால் வரும் சொற்ப ஊதியத்தைக் கொண்டு காலங் கழிப்பவன். காலையிலெழுந்து பழையது சாப்பிட்டுவிட்டு வெற்றிலை பாக்கு மென்றுகொண்டு மிக்க குதூகலத்துடன் வேலையைத் தொடங்குவான். எப்போதும் உல்லாசப் பாட்டு. மனைவி மற்றோர் பக்கத்தில் வேலைசெய்ய உட்காருவாள். விநோதமான சம்பாஷணை. விசனமென்பதே கிடையாது. கவலை கடுகளவும் கிடையாது. வேண்டிய தெல்லாங்கூடி நாளொன்றுக்கு நாலணா எப்படியேனும் ஏறக்குறைய கிடைத்துவிடும். எதிரில் பெரும் பணக்காரர். பெரிய மாடிவீடு. மோட்டார் சவாரி. எடுபிடி ஆள்கள். வருவாரும், போவாரும், கொள்வாரும், கொடுப்பாரும் ஓய்வொழிச்சலில்லை. ஒரு நிமிஷம் சிரிப்பு சந்தோஷம். மறுவினாடி வருத்தம் கோபம். அடுத்த நொடியில் ஆத்திரம் வெறுப்பு. பிறகு கவலை சிந்தனை. பணக்காரரைக் காணும்போதெல்லாம் தொழிலாளி சுப்பன் எழுந்து நமஸ்கரிப்பான். 'அவனைப் பார்க்கும்போதெல்லாம் கனவானுக்குக் கனவருத்தம். தரித்திரப்பயல் எப்போதும் கும்மாளமடித்துக்கொண்டிருக்கிறானே. என்ன சந்தோஷம்! பத்தில் ஒரு பங்கேனும் பணக்காரனாகிய எனக்கில்லையே என்ற வயிற்றெறிச்சல். அதன் காரணத்தைக் கண்டறிந்தார். சுப்பனைக் கூப்பிட்டார் ஒருநாள். சுப்பா! நீ இப்படியே எப்

போதும் இருந்தால் எப்படி? இந்தா. நூறு ரூபாய் இதைக்கொண்டு ஒரு வியாபாரம் செய். மறுபடி இதைத் திருப்பிக் கொடுக்கவேண்டு மென்பதில்லை. என நீட்டினார். சுப்பனுக்குத் தலைகால் தெரியவில்லை. தன் சுக வாழ்க்கையின் வாயில் மண் விழுந்ததென்று அவன் அறியவில்லை. மறு நாளே வியாபாரம் தொடங்கியது. கணக்குப் புத்தகம் பெரிதாயிற்று. அவன் பாக்கி; இவன் பாக்கி; அவன் வாயில் போட்டுக்கொண்டான்; இவன் மோசம் செய்தான்; அதில் நஷ்டம்; இதில் லாபம். வேறு எந்தெந்தப் பொருளில் லாபம் வரும். வக்கீல், வக்காலத்து, கோர்ட்டு சாக்ஷிகள். கொண்டாட்டம் அடங்கி விட்டது. பார்த்தாயா! சரியான வழி செய்தேன் என்று பணக்காரருக்கு சந்தோஷம். நிம்மதியான வாழ்க்கை சுப்பனைவிட்டகன்றது. கவலை மிகுந்தது. இதுதான் செல்வவாழ்க்கையின் பெருமை.

இதனால் ஒருவரும் செல்வந்தேடலாகாது; 'வறிய வாழ்க்கையை மேற்கொள்ளவேண்டும் என்பதல்ல. செல்வ வாழ்க்கைதான் சுக வாழ்க்கை என்பது தவறு; எந்த நிலையிலிருப்பினும் சாந்தமில்லையேல் சௌக்கிய மில்லை என்பதைக் காட்டுவதே கருத்தாமெனக் கொள்க. மேலும்,

சாந்த வாழ்க்கை எவர்க்கும் கஷ்டமானதல்ல; ஒரு சாரார்க்கே அது சாத்திய மென்பதுமில்லை. அரசர், வணிகர் முதலிய அனைவர்க்கும்—போரிற் புகுந்து பகைவரை வதைக்கும் வீரனுக்கும்—இது இன்றியமையாதது மாத்திரமல்ல; சாத்தியமானது மாகும். ‘இது யாருக்கு? வேதாந்திகள்—பரதேசிகள்—சன்னியாசிகள்—பக்தர்கள் இவர்களுக்குத்தான் தகும். உரியது’ என்று ஒருவரும் எண்ண வேண்டியதில்லை. மேற்கூறிய சன்னியாசிகள் முதலியோரினும் புவியைப் புரப்போர், பெரும் பொருளீட்டுவோர் போர்வீரர் முதலியோர்க்கே பெரிதும் அவர்கள் தொழிலில்—முயற்சியில்—அவசியமும் உதவி புரிவதுமாகும். ஸ்ரீ ராமன் பெரும் வீரனல்லவோ? இருப்பினும் எப்போதும் சாந்தமே குடிகொண்ட உள்ளத்தனாக விருந்தானென்பதை அவன் சரித்திரத்தின் வாயிலாக அறிகிறோமே. அவன் அரசு புரிந்திலனோ? அக்காலத்தே அவன் மனத்தில் சாந்தம் குடிகொண்டிருந்த தில்லையோ? சனக சக்கிரவர்த்தி எத்துணைப் பெரிய ஞானி-சாந்த உள்ளத்தன்—விதேக முக்தன்—என்னும் உண்மையை உலகம் அறியுமே. இப்படி புராண இதிகாசங்களிலிருந்து திருஷ்டாந்தங்களை ஆகமப் பிரமாணமாகக் காட்ட வேண்டுமா? பிரத்யக்ஷப் பிரமாண மிருக்கிறதே! மகாத்மா காந்தியடிகளைப் பார்ப்போம். எவ்வளவு எளிய வாழ்க்கை! ராஜீய தேசீய வியவகாரங்களில் எவ்வளவு ஈடுபாடு! அவரைவிட சுக வாழ்க்கை வேறெவருக்கேனும் இருக்கின்றதா? காரணமென்ன? சாந்தம்! சாந்தம்!! சாந்தம்!!! அவரினும் சுக புருஷர் பிறரெவரேனு முளரோ! சாந்த சொரூபர். உற்று நோக்கின் காந்தியடிகளை மகாத்மாவாக்கியது இச் சாந்தமே என்பது தெரியவரும். அரும்பாடு பெரும்பாடுபட்டு, மனத்தைப் பாழாக்கும் பாழ்குணக்காட்டை யழித்து, பண்படுத்தி, சாந்தப் பயிரிட்டு, சௌக்கியமென்னும் தானியத்தை விளைவித்துக் கொண்டார். ‘யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்’ என்று பிறரையும் சாந்தப்பயிரிட இடைவிடாது தூண்டி வருகின்றார். அதில் ஓரளவு வெற்றியும் பெற்றார்; பெறுவார். உழைப்பின் வாரா உறுதிகளுளவோ?



சாந்தம் என்பதற்குச் சற்று விரிவான பொருள் கொள்ளுங்கால் அது சிறந்த ஞானநிலையைக் குறித்தலைக் காணலாம். மேலே காட்டியதற்கும் இதற்கும் பெரிதும் பேதமில்லையெனினும், அது சாதன நிலையினையும் இது சாத்திய நிலையினையும் குறிக்குமெனக் கொள்ளலாம். மன வடக்கத்தை—சாந்த நிலையை—பழகப் பழக, மனத்தின் கண்ணுள்ள மாசுகளனைத்தும் விலக விலக—ரஜோ தமோ குணங்களொழிந்து சத்துவ மாத்திரமாகிய நிலையை மனமெய்தும்.

“அலையிலாத சாகரம்போல், அனிலம் சேரா விளக்கதுபோல்,
அரும் பொனிருங்கல் சமமாக ஆனதாசி னுனியதுபோல்,
நிலை யொன்றிய நற்சமாதி’


என்னும் நிலை இந்நிலையேயாகும். இந்நிலையே மனத்தின் அருவநிலை—மனமற்ற நிலை—சாந்த நிலை—சலனமற்ற, சஞ்சலமற்ற நிலை. மேலே முதலிற்கூறிய மனத்தை யடக்குதல்வாயிலாக மிருக நிலையை யொழித்து மனித நிலையில் நிற்கும் மனிதன், அதன் முதிர்ச்சியாகிய இந்நிலையில் தெய்வத் தன்மையை யெய்துகின்றான். மனத்தை யடக்காமல் அது போன போக்கில் செல்வோன் மிருகமென்றும், அங்ஙனம் போகாமல் அதைத் தடுத்து நல்வழியிற் செலுத்த முயல்வோன் மனிதனென்றும், மனத்தை முழுதுமடக்கித் தன்னடிப்படுத்துவோன் தேவனென்றும் ஆன்றோர் கூறுவர். அத்தெய்வநிலை யுற்றோனடையும் சுகம் சொல்லற்ற சுகம், பிரம்மானந்தம் எனபபடுவதும் அதுவே.

இவ்வெல்லாப் பொருள்களையு மமைத்தே தியாகய்யர் “சாந்தமு லேக சௌக்கியமு லேது” என்று சுருங்கிய மொழியில் சொல்லிவைத்தார். தமிழ் மறையும்,

“அடக்க மமரரு ளுய்க்கும்; அடங்காமை
ஆரிரு ளுய்த்துவிடும்('

என்னும் செய்யுளால் இதனையே வற்புறுத்துகின்றது.

ஆகவே, தேகாரோக்கியம், மன நிம்மதி, சுக வாழ்க்கை இவைகளை யெய்துவதற்கு முதற் காரணமாயுள்ள சாந்தத்தை எக்காலத்தும் கைவிடாமல் அனுஷ்டித்துவர இறை திருவருள் புரிவதாக.



# வீர ராமு

—o—

(எஸ். நாராயணசாமி.)

"கிட்டு, பூனையோடு அங்கே என்ன விளையாடிக் கொண்டிருக்கிறாய்? ஏதாவது படிக்கக் கூடாதா?"

"ஒண்ணுமில்லே தாதா. போது போகணுமோன்னு. நீதான் கதை சொல்லுகிறேன், கதை சொல்லுகிறேன்னு என்னை ஏமாத்திண்டே வரே. பாரு இந்த பூனை எவ்வளவு பசியாய் இருக்கு. இதற்கு அந்த எலியை உணவாகக் கொடுக்கப் போகிறேன். எலியைக் கூண்டினின்று விடுவித்ததாகவும் இருக்கும்; பூனையின் பசியைத் தீர்த்ததாகவும் இருக்கும். ஏன் தாதா நான் செய்வது ஒரு பெரிய புண்ணியந்தானே?"

"குழந்தாய், அது ஒருக்காலும் புண்ணியமாகாது. உன்னை ஒரு கூண்டில் அடைத்து வைத்திருப்பதாகவும், வெளியே மிகப் பசியுள்ள ஒரு புலியானது உன்னைத் தின்பதற்குக் காத்துக்கொண்டிருப்பதாகவும் நினைத்துக்கொள். உன்னைப்போல தயாள குணமுள்ள ஒருவன் அப்புலியின் பசிக்கு இரங்கி கூண்டைத்திறந்து உன்னை வெளியேவிட்டால், உன் மனம் அச்சமயத்தில் என்ன பாடுபடும்? நீ பேசும் திறமை பெற்றிருப்பதனால் உனது மனப்பான்மையைக் கூற சக்தியுடையவனாய் இருக்கின்றாய். ஆனால் பேசும் திறமையற்ற எளிய ஜந்துவாகிய இந்த எலி தன்னைக் காப்பாற்றும் பொருட்டு உன்னை எவ்விதம் கெஞ்சிக் கேட்டுக்கொள்ள முடியும். இப்பூனையின் பசியைத் தீர்ப்பதற்கு உன்னிடத்தில் வேறு ஒரு பொருளும் இல்லையா? இந்த எளிய ஜந்துதானா அதற்கு இரையாகவேண்டும்?"

"தாதா என்னை மன்னித்துவிடுங்கள். இனிமேல் இவ்வாறான காரியம் செய்யமாட்டேன்."

"கிட்டு, இப்பொழுதுதான் நீ நல்ல பையன். பிற ஜந்துக்களிடத்தில் நீ எப்பொழுதும் அன்பாகவே இருந்து வரவேண்டும். அவைகளுக்கு ஒரு துன்பமும் செய்யக்கூடாது. கூடியமட்டில் அவைகளுக்கு நீ உதவியே புரிந்து வரவேண்டும். இதைத்தான் நாம் 'ஜீவகாருண்யம்' என்று சொல்லுகிறோம். "'கதை சொல்லு, கதை சொல்லு' என்று தினந்தோறும் என்னைத் தொந்தரவு செய்கிறாயே. பிராணிகளுக்காகத் தனது உயிரையும் தியாகம் செய்த உன்னை ஒத்த ஒரு உத்தம வீர சிறுவனது சரித்திரத்தைக் கூறுகிறேன். கவனமாய்க் கேட்டுக்கொண்டு வா."

"ஒரே ஒரு ஊரில் ஒரே ஒரு ராஜாவாம்" என்று தொடங்கும் கதைகளை நான் உங்களுக்குச் சொல்ல வரவில்லை. சுமார் 25 ஆண்டுகளுக்கு



முன்பு உண்மையாக நடந்த ஒரு சரித்திரத்தையே உனக்குக் கூறப்போகின்றேன்.

*　　*　　*　　*

சிதம்பரத்திற்கு ஐந்து மைலுக்கப்பால் தக்ஷகவனம் என்ற ஒரு சிறு கிராமம் உண்டு. அநேகமாய் அங்கு வசித்து வருபவர்கள் யாவரும் ஏழை மக்களே. உயர்ந்த மாடி வீடுகளும், கல் வீடுகளும் அங்கு காண்பது துர்லபம். சுமார் ஐம்பது வீடுகளும் ஒரு சிறு பள்ளிக்கூடமும் நிறைந்த அக்கிராமத்தில் ஏறக்குறைய 25 வருடங்கட்கு முன்பு கணபதி தீக்ஷதர் என்பவர் ஒருவர் வசித்துவந்தார். அவர் பெயருக்குத் தகுந்தபடி கருத்த மேனியும், பருத்த உடலும், பெருத்த தொந்தியும், நீண்ட மூக்கும் உடையவராய் இருந்தார். அக்கிராமத்தில் அவர் ஒருவரே பணக்காரராய் சிறந்து விளங்கினார். எனவே அவருக்குக் கொஞ்சம் செல்வாக்கும் இருந்து வந்தது. ஆனால் அவர் மிகவும் கருமி. தனது எச்சைக் கையினால் காக்காயை ஓட்டமாட்டார். பிறர் கண்டு தன்னை மெச்சவேண்டுமென்பதே அவரது விருப்பம். அதற்காகவே அவர் நாள்தோறும் இடைவிடாது சிவபூஜை புரிந்தும் யாகங்கள் பல இயற்றியும் வருவாராயினார்.

பெருமிதமான செல்வம் படைத்திருந்தும் புத்திரனில்லாத குறை அவருக்கு வெகுநாளாக இருந்துவந்தது. தீக்ஷதர் அக்குறையைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டு தானதருமங்கள் பல புரிந்துவந்தார். கடைசியில் அவரது அந்திகாலத்தில் கடவுளது கிருபையால்—இல்லை இல்லை. அவர் செய்த தானதருமத்தின் பலனால்—ஓர் ஆண்பிள்ளை பிறந்தது. குழந்தைக்குப் பெற்றோர்கள் 'ராமு' எனச் செல்லப்பெயரிட்டு அன்புடன் வளர்த்து வந்தார்கள்.

நற்குணங்கள் யாவும் ஒருங்கே அமையப்பெற்ற ராமு சிறு வயதிலிருந்தே எல்லாப் பிராணிகளிடத்தும் அன்பும், வாஞ்சையும் உடையவனாய் ஊரார் யாவரும் புகழும்படி நடந்துவந்தான். அவன் காட்டிய அன்பினால் நாளடைவில் அவ்வூரிலுள்ள நாய்களும், மாடுகளும், மற்ற பிராணிகளும் அவனுக்குச் சிநேகமாய்விட்டன. சுருங்கச் சொல்லின் கேவலம் பன்றி முதலிய அற்ப ஜந்துக்களும் ராமுவின் இடைவிடா அன்பிற்குப் பாத்திரங்களாயின.

ராமு பள்ளிக்குச் செல்லுமுன்பும், பள்ளியிலிருந்து திரும்பி வந்த பின்பும், தன் வீட்டிலுள்ள சுசீலா என்னும் மாடுடனும் மங்களம் என்ற அதன் கன்றுடனும் விளையாடிக்கொண்டே இருப்பான். இவ்வளவிலும் அவன் கல்வியை அலக்ஷியம் செய்யவில்லை. தன் வகுப்பில் அவன் எப்பொழுதும் முதல் பையனாகவே இருந்துவந்தான். உபாத்தியாயர்கள் யாவரும் அவனது கல்வித் திறமையையும், புத்திசாலித்தனத்தையும், நன்னடக்கையையும் மெச்சிக் கொண்டாடினார்கள். அவன் வாசித்துவந்த பள்ளிக்கூடத்தில்—ஏன்? அவன் வசித்துவந்த அவ்வூருக்கே—ராமு ஒரு திலகமெனச் சிறந்து விளங்கினான்.

ஒருநாள் கோடைக்காலம். வெயிலின் கொடுமை தாங்க முடியவில்லை. ராமு தன் பள்ளிக்கூடத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தான். வழியில் ஒரு நொண்டி நாய் போகிறவர்கள் எல்லாரிடத்தும் தனது வாலைச் சுழற்றியும், நாக்கை நீட்டியும், மிக்க இறைப்போடு தனது பசியையும், தாகத்தையும் உணர்த்திற்று. ஆனால் அதைக் கவனிப்பவர் ஒருவரும் இல்லை. பள்ளிக்குச் சென்றுகொண்டிருந்த சிறுவர்களெல்லாம் அதன் மேல் கல்லை வீசியெறிந்து அதை மேலும்மேலும் துன்புறுத்தினார்களே ஒழிய ஒருவராவது அதற்கு உதவிசெய்ய முன்வரவில்லை. இக்காக்ஷியைக் கண்டவுடன் ராமுவிற்குக் கண்களில் நீர் ஆறாய்பெருக ஆரம்பித்துவிட்டது. தான் பள்ளிக்கூடத்திற்குச் சென்றுகொண்டிருப்பதையும், நேரமாவதற்கு முன்பு அங்குபோய்ச் சேரவேண்டும் என்பதையும், அல்லாவிடில் உபாத்தியாயர் தண்டிப்பார் என்பதையும் அறவே மறந்தான். ஆதரவற்ற அந்த நொண்டி நாயைக் காப்பாற்ற வேண்டுமென்ற ஓர் எண்ணமே அவன் மனதில் அச்சமயத்தில் குடிகொண்டிருந்தது. தனது கையிலிருந்த புத்தகங்களைக் கீழே வைத்தான். நாயை மெதுவாகத் தூக்கித் தன் தோளின்மேல் சாய்த்துக் கொண்டான். கொஞ்ச தூரத்திற்கப்பால் உள்ள ஓடையை நோக்கிச் சென்றான். தான் கொண்டுவந்திருந்த உணவை அன்புடன் அந்நாய்க்கு ஊட்டினான். நாயும் வெகு ஆவலுடனும், நன்றியுடனும் அவ்வுணவை உட்கொண்டு ஓடையிலுள்ள நீரையும் பருகித் தனது பசியையும் தாகத்தையும் தீர்த்துக் கொண்டது.

ராமுவிற்கு பள்ளியின் ஞாபகம் வந்தது. சுற்றிப் பார்த்தான். புத்தகங்களைக் காணோம். நாயைப் பார்த்த விடத்திலேயே வைத்துவிட்டு வந்ததாக அவனுக்கு நினைப்பு வந்தது. ஓட்டோடியும் சென்றான். ஆனால் புத்தகங்கள் அங்கும் காணப்படவில்லை. உபாத்தியாயர் யாது செய்வாரோ என்ற கவலை ஒருபக்கமும், தன் அன்புள்ள நாய் என்ன கதியாயிற்றோ என்ற கவலை மற்றோர் பக்கமும் அவனை வாட்டிற்று.

மிக்க கவலையுடன் நேரே பள்ளிக்கூடத்திற்குச் சென்றான். வகுப்பில் பாடம் ஆரம்பிக்கப்பட்டு உபாத்தியாயர் ஏதோ சொல்லிக்கொண்டிருந்தார். ராமு பயத்துடன் வெளியே நின்றான். உபாத்தியாயர் அவனை உள்ளே கூப்பிட்டு நாழிகைகழித்து வந்ததின் காரணம் என்னவென்று கேட்டார். ராமு நடந்ததை விஸ்தாரமாக எடுத்துக்கூறித் தன்னை மன்னிக்கும்படி வேண்டினான். என்றும் ராமுவின்மேல் அன்புள்ள அந்த உபாத்தியாயர் அன்று ஏதோ காரணத்தினால் கோபங்கொண்டு அந்நாள் முழுவதும் பெஞ்சியின்மேல் நிற்கும்படி கட்டளையிட்டுவிட்டார்.

வருடங்கள் இரண்டு மூன்று கடந்தன. கணபதி தீக்ஷிதர் யாகம் ஒன்று செய்ய வேண்டுமென்று விருப்புற்றிருந்தார். தனது விருப்பத்தை சிநேகிதர்களாகிய மற்ற தீக்ஷிதர்களுக்கு தெரிவித்தார் அவர்களும் தங்களால் ஆன உதவியைச் செய்வதாக வாக்களித்தனர். யாகம் செய்வதற்குரிய நாளும் நியமிக்கப்பட்டது. தன் வீட்டிலேயேயுள்ள சுசீலா என்னும் பசுவை யாகத்தில் பலியிடுவதெனத் தீர்மானித்தார் தீக்ஷிதர். அதை மற்ற தீக்ஷிதர்களும் ஆமோதித்தனர்.



இவ்விஷயம் ராமுவிற்கு எவ்வாறோ எட்டியது. பிறர் ஒரு ஜீவனை ஹிம்சிப்பதையே காணச் சகியாதவனாகிய ராமு தன் அருமருந்தன்ன சுசீலாவைப் பலியிடப் போகிறார்கள் என்று கேட்டவுடன் எவ்வாறு மனம் பொறுப்பான்? நெருப்பில் விழுந்த ஈயைப்போல் துடிதுடித்தான். அப்பசுவை எவ்வாறு காப்பாற்றலாம் என்ற எண்ணத்திலேயே தன் முழு மனதையும் செலுத்தினான்.

வீடு முழுவதும் ஒரே கும்பல். எங்கு பார்த்தாலும் வேதகோஷங்கள் முழங்குகின்றன. ராமு தன் தகப்பனாரிடம் சென்றான். வீறிட்டு அலறினான். துக்கமோ நெஞ்சை அடைக்கின்றது. பேச நாவெழவில்லை, எவ்விதம் அவரிடம் பேசுவதென்றே அவனுக்குத் தெரியவில்லை. ஏழையின் சொல் அம்பலம் ஏற்காதே என்ற பயம் அவனை வாட்டிற்று. சிறிது தைரியத்துடன் வாயைத்திறந்து பேசலானான்.

“அப்பா, என்னை மன்னிக்கவேண்டும். நான் உங்களிடத்தில் ஒரு பிக்ஷை கேட்க வந்திருக்கிறேன். அதை இல்லை என்று சொல்லாமல் எனக்கு அளிப்பீர்களா?”

தீக்ஷிதர்:—“ராமு, என்ன இன்றைக்கு என்றுமில்லாமல் ஒருமாதிரியாகப் பேசுகிறாய்? உன் முகம் வாட்டமுற்றிருக்கிறதே. இன்னும் கொஞ்ச நாழிகைக்கெல்லாம் யாகம் ஆரம்பமாய்விடும். நடக்கப்போவதை வேடிக்கைப் பார்த்துக்கொண்டு சந்தோஷமாயிராமல் ஏன் துக்கமாய் இருக்கிறாய்? உனக்கு என்ன வேண்டுமோ? அதைக் கேளேன் தருகிறேன். அப்படிக் கேட்காமல் என்னமோ பிக்ஷை கிக்ஷை என்று உளறுகிறாயே. உனக்கு என்ன ஏதாவது பைத்தியம் பிடித்துவிட்டதா?”

ராமு:—“தந்தையே, எனக்கு அவ்வாறு ஒன்றும் பிடிக்கவில்லை. சுசீலாவின் மேலும் அதன் அருஞ் செல்வியாகிய மங்களத்தின் மேலும் நான் கொண்டுள்ள அன்பே என்னை இங்கு கொண்டுவந்தது: நீங்கள் செய்ய நினைத்திருக்கும் காரியம் எனக்குத் தெரியாது என்று எண்ண வேண்டாம். இவ்வளவு நாட்களாக நமக்குப் பாலைக் கொடுத்து உதவி வந்த சுசீலாவுககு இந்த கைம்மாறு செய்ய நினைக்கிறீர்கள்? நீங்கள் என்னை அருமையாக நேசிப்பது உண்மையானால் சுசீலாவைத் தயவு செய்து யாகத்தில் பலியிடாதீர்கள். கோஹத்தி, சிசுஹத்தி’ ஸ்திரீஹத்தி என்று சொல்லப்படும் கொலைகளிலெல்லாம் கோஹத்தி மிகவும் தோஷமல்லவா! நாம் நன்மை அடையவும், நற்கதி பெறவும் அவைகள் என்ன பாபம் செய்தன? நமக்கு ஒரு கெடுதலையும் புரியாத எளிய ஜந்துவைக் கொன்று அதன் மூலம் மோக்ஷத்தை அடைவதைவிட என்றும் நரகத்திலேயே வாழ்ந்து கஷ்டப்படலாம். நம்முடைய சுகத்தை நோக்கி மற்றொரு ஜீவனைப் போக்கும்படி எந்த வேதத்திலாவது கூறி இருக்கின்றதா? அப்படிக் கூறியிருந்தால் என் முழு மனதுடன் அவ்வேதத்தை நான் வெறுக்கின்றேன்.”

ராமு இவ்வாறாகத் தன் தந்தையிடம் முறையிட்டு அழுது கொண்டிருக்கும் சமயம் அங்கு இருந்த தீக்ஷிதர் ஒருவர் வெகு கோபத்துடன் அவனை

நோக்கி, "இந்த காலையாங் குட்டிகளுக்கெல்லாம் என்ன தெரியும். ஏதாவது இரண்டு கோணை எழுத்து படித்து விட்டால் எல்லாப் புராண இதிகாசங்களையும்; வேதங்களையும் கரைத்து குடித்து விட்டதாகத்தான் எண்ணம். இவர்கள் மேல் பிசகல்ல. இந்தகாலத்தின் படிப்பு இவர்களை இவ்வாறு தலை பிடித்து ஆட்டுகின்றது. ஒரு சுபகாரியத்திற்காக எந்த மனிதனாவது அல்லது பிராணியாவது தன்னுடைய உயிரைக் கொடுத்தால் அவன் அல்லது அந்த பிராணி மோக்ஷத்தை அடைவதாக வேதங்கள் கூறுகின்றன. சுசீலா பூர்வஜன்மத்தில் என்ன பாக்கியம் செய்ததோ தெரியவில்லை இன்று யாகத்தில் உயிரை இழப்பதற்கு!" என்று தான் படித்ததை எல்லாம் சரமாரியாகப் பொழிய ஆரம்பித்தான். ராமுவிற்கு துக்கமும் கோபமும் நெஞ்சை அடைக்கிறது. தைரியத்துடன் அந்த தீக்ஷதரைப் பார்த்து, "மாமா, என்னை மன்னிக்க வேண்டும். நான் கூறப் போவதைக் குறித்து என்மேல் கோபிக்கக் கூடாது. என் நீங்கள் இந்த யாகத்தில் உங்கள் உயிரைக் கொடுத்து பெறுவதற்கரிய அந்த ஒப்பற்ற மோக்ஷசுகத்தை அடையக்கூடாது?" என்று கூறவே கணபதி தீக்ஷதருக்குக் கோபம் வந்து விட்டது. தன் பிள்ளை என்பதையும் மறந்தார். "அடே துஷ்டப்பயலே. பெரியவாளிடத்தில் கொஞ்சம்கூட மரியாதை கிடையாது. போ. உன் பாடத்தை போய்க் கவனி. இன்னும் கொஞ்ச நாழிகைக் கெல்லாம் உன்னை கூப்பிடுகிறேன். அப்பொழுது வரலாம்" என்று சொல்லி அடித்துத் துரத்தினார். ஆனால் ராமு அந்த இடத்தினின்றும் அசையவில்லை. மறுபடியும் தன் தந்தையிடம் சென்று சுசீலாவிற்கு உயிர் பிக்ஷை அளிக்கும்படி வேண்டினான். ஆனால் தீக்ஷதர் அவன் வேண்டுகோளைக் காதில் போட்டுக் கொள்ளாமல் தன் காரியத்தைப் பார்க்கச் சென்று விட்டார்.

காலமும் கிட்டிவிட்டது, யாகம் வெகு ஆடம்பரமாய் நடந்து கொண்டிருக்கிறது. "தந்தையும் மறுத்துவிட்டார். என் சொல்லைக் கேட்பவர்கள் இங்கு ஒருவரும் இல்லையே! சுசீலாவை எவ்வாறு காப்பாற்றுவேன்" என்று அலறித் துடித்தான் ராமு. திடீரென அவனுக்கு ஓர் எண்ணம் உதித்தது. முகமலர்ச்சி கொண்டான். கடவுளைத் துதித்தான்; தன்னைச் சீக்கிரம் சேர்த்துக் கொள்ளும்படி வேண்டினான்.

தோட்டத்திற்குச் சென்றான். சுசீலாவையும் மங்களத்தையும் ஒருங்கே சேர்த்து அணைத்துக் கொண்டான். என் ஆருங் கண்மணிகளே, உங்களை விட்டு நான் எவ்வாறு பிரிந்திருப்பேன்? மாசற்ற உங்களுக்கும் உங்கள் இனத்தாருக்கும் என்று கதி மோக்ஷம் கிடைக்குமோ அறிகிலேன். கடைசி முறையாக உங்களை முத்தமிட்டுக் செல்லுகிறேன். நான் ஒரு மகா பாவி" என்று கதறியவாறு ராமு தனது அறையை நோக்கிச் சென்றான்.

யாகம் வெகு மும்மரமாய் நடந்துகொண்டிருக்கிறது. பலியிடுவதற்காக சுசீலாவும் கொண்டு வந்து நிறுத்தப்பட்டது. தீக்ஷதர் உடனே ராமுவை அழைத்து வரும்படி கட்டளையிட்டார். ஆனால் எங்கு தேடியும் ராமு அகப்படவில்லை. உடனே தீக்ஷதரே நேரில் சென்று தேட ஆரம்பித்தார். ராமு இருக்கும் அறையை வந்து பார்த்தார். உள்ளே



தாழ்ப்பாள் இடப்பட்டிருந்தது. 'ராமு' என்று பல தடவை கூப்பிட்டார். ஆனால் ஒரு பதிலும் இல்லை. ஏதோ மோசம் வந்து விட்டதென உணர்ந்தார். வேலையாட்களைக் கொண்டு கதவை உடைத்தார். உள்ளே பிரவேசித்தார். ராமு அயர்ந்து நித்திரை செய்வதுபோல் படுத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தார். அருகே சென்றார். உற்று கவனித்தார். ராமு பிணமாய்க் கிடந்தான். இக்கோர காட்சியைக் கண்டதும் தீக்ஷதர் மூர்ச்சித்துக் கீழே விழுந்தார். புத்திர சோகம் பெரிதல்லவா! வெகுகாலம் புத்திரனில்லாமல் கடைசியில் ஒரு பிள்ளையைப்பெற்று அவனையும் இழப்பதென்றால் எவ்வாறு மனம் சகிக்கமுடியும்? சிறிது மூர்ச்சை தெளிந்து எழுந்தார். ராமுவின் பக்கத்தில் ஒரு கடிதம் இருப்பதைப் பார்த்தார். வெகு பரபரப்புடன் அதை எடுத்துப் பார்க்கலானார். அதில் அடியில் வருமாறு எழுதி இருந்தது.

"என் அன்புமிக்க தந்தையே,

நான் போவதைக் குறித்து வருந்தவேண்டாம். இப்பூமியில் எவனொருவன் ஜனிக்கின்றானோ, அவனுக்கு இறப்பும் ஒன்று உண்டு. கடவுளது சிருஷ்டிக்குட்பட்ட நாம் அனைவரும் ஒருவரை ஒருவர் நேசித்து வாழவேண்டுமென்பதே அப்பிதாவினது கருத்து. சகல ஜீவராசிகளையும், மனிதர்களாகிய நம்மையும் படைத்த கடவுள் ஒருவரே. மனிதர்களுக்குள் மனிதர் காட்டிக் கொள்ளும் அன்புமட்டும் சகோதர வாஞ்சை என்று கூற முடியாது. 'நம்மைப் படைத்த கடவுளே புல், பூண்டு, செடி, கொடி, மரம் முதலிய தாவரவர்க்கங்களையும், ஆகாயத்தில் வசிக்கின்ற பறவைகளையும் நீரில் வாழும் மீன் முதலிய ஜந்துக்களையும், நிலத்தில் திரிந்து சஞ்சரிக்கும் பிராணிகளையும் படைத்துள்ளார். நம்முள் உயர்வு தாழ்வு என்பதே கிடையாது,' என்று கருதி எவனொருவன் வித்தியாசமில்லால் எல்லா ஜந்துக்களிடத்தும், எல்லா பிராணிகளிடத்தும் ஒரே விதமான அன்பைச் செலுத்துகிறானோ, அவனே கடவுளாகிய நமது பிதாவின் உண்மையான புத்திரனாவான். சாஸ்திரங்களைப் படிக்கவேண்டாம். வேதங்களை ஓத வேண்டாம். கடவுளின்மேல் அபாண்டமான பழியையும் பாரத்தையும் சுமத்தி அவர்பேரால் அவரால் படைக்கப்பட்ட ஜந்துக்களை பலியிட்டு பாபங்கள் புரிய வேண்டாம். அன்பு என்ற ஒரே வழிதான் பெறுவதற்கரிய மோக்ஷ சுகத்தையும் கடவுளினது அருளையும் அடைவதற்கு ஏற்ற சாதனமாகும். அதனை நாம் அறியாது போனால் கடவுளது வெம் கோபத்திற்கு ஆளாவோம்.

நான் என் உயிரை இழப்பதற்குக் கொஞ்சமும் வருந்தவில்லை. நீங்கள் சுசீலாவைக் கொல்வதற்கு முன்பு என்னைத் தேடிக்கொண்டு இங்குவருவீர்கள்; என்னை இக்கோலத்தில் கண்ட பிறகாவது நான் எழுதும் இக்கடிதத்தைப் படித்த பிறகாவது சுசீலாவை பலியிட மாட்டீர்கள் என்ற முழு நம்பிக்கை பிற ஜந்துவுக்காக (மனிதனாய் இருக்கவேண்டுமென்பது அவசியமில்லை) எவனொருவன் தனது உயிரைத் தியாகம் செய்கிறானோ, அவனே மனிதனாவான். தீக்ஷதர் மாமா கூறியபடி சுபதினமாகிய இன்று எனது உயிரைக் கொடுத்து பெறுவதற்கரிய அம்மோக்ஷத்தை அடைகிறேன். கடைசியாக நான் உங்களை கேட்டுக் கொள்வது ஒன்று உண்டு.

என் அருஞ் செல்விகளாகிய சுசீலாவையும், மங்களத்தையும் கண்ணை இமை காப்பது போல் காப்பாற்றி வந்தால் அதுவே தாங்கள் என்மேல் காட்டிய அன்பின் அறிகுறி யாகும். எல்லாம் படித்த உங்களுக்கு எளியேனாகிய நான் என்ன சொல்ல முடியும்? தயவு செய்து என்னை மன்னிப்பீராக.

இப்படிக்கு

உங்கள் துர்ப்பாக்கியப் புதல்வன்,

ராமு.


அலறித் துடித்தார் தீக்ஷிதர். ஆனால் மாண்டார் வருவரோ! "நீயே உண்மையான பக்தன். நீயே மிகப் படித்தவன். உன்னுடைய அன்பும், உன்னுடைய பக்தியும், உன்னைப் பெற்றெடுத்த எனக்குக் கொஞ்சம் கூட இல்லையே. உன்னையே மகனாக அடையும் பாக்கியம் பெற்றிருந்தும் உன்னுடன் வாழ்வதற்கு பாக்கியம் பெற வில்லையே! ஐயோ, இனிமேல் உன்னை விட்டு இவ்வுலகில் நான் எவ்வாறு வாழ்வேன்" என்று கதறினார்.


நாட்கள் சில சென்றன. தீக்ஷிதர் இவ்வுலக வாழ்க்கையை வெறுத்து தன் சொத்து முழுவதையும் ஜீவகாருண்ய சபைக்கு அளித்துவிட்டுத் தனது மனைவியுடன் யாத்திரை செய்ய கிளம்பிவிட்டார். இன்னும் அவ்வூரில் ராமுவைப் பற்றி புகழாதவர்கள் இல்லை.

*    *    *    *

கிட்டு:—தாதா, நம் இந்தியாவில் இப்பேர்ப்பட்ட வீர புதல்வன் ஒருவன் இருந்ததைக் குறித்து சந்தோஷப்படுகிறேன். இன்றே எனது சிநேகிதர்களுடன் கூடி, மனிதகர்ளுடைய இம் மூட நம்பிக்கையைப் போக்கி, ஜீவஹிம்சையைத் தடுத்து அன்புடன் வாழும்படி செய்வேன்.

தாதா:—குழந்தாய், அதுதான் எனது கோரிக்கை. உனது பாரதத் தாய் உன் போன்ற வீர சிறுவர்களிடமிருந்து தான் உதவியை எதிர் பார்க்கின்றாள். காடு வாவா வென்றும் வீடு போபோ வென்றும் சொல்லும் தன்மையில் இருக்கும் என் போன்ற கிழவர்கள் என்ன செய்ய முடியும்? கடவுளது பரிபூர்ண ஆசீர்வாதம் உனக்குக் கிடைக்கும். நீ உன் காரியத்தில் ஜெயமடைவாய். நாழி ஆய்விட்டது. வா சாப்பிடப் போவோம்.





# தலைக் கொடையாளி

(எஸ். கிருஷ்ணன்.)

உடன் பிறந்த அண்ணனென்று கூட உணர்ந்தானில்லை இளங்குமணன். 'தாயுரை கொண்டு தாதை யுதவிய தாரணி தன்னை தீவினை என்ன நீத்து சிந்தனை முகத்திற் றேக்கி' போன பரதன் தன்மையைக் கூட சிந்தித்தானில்லை அவன். அரச செல்வம் வேண்டி நஞ்சனைய வஞ்சனைகள் பல செய்து அண்ணனைக் கோல்வதற்கும் துணிந்தான்.

தரும சொரூபி குமணன் இல்லை யென வந்தார்க்கு இல்லை யென்னாத ஈகைக் குணமுடையவன். ஏழைகள் மாட்டு பேரன்புடையவன். அவன் தன் தம்பி செய்யத் துணிந்த தீச் செயலைக் கண்டு வெம்பி, எம்பியே ஆளட்டும் என அரசினை வெறுத்து காடு சேர்ந்து கரந்துறைந்தான்.

அரச செல்வம் கவர்ந்தான். அண்ணனை காட்டிற் கோட்டினான். எனினும் அப்பாவியின் மனம் சமாதானமடையவில்லை. "குமணன் தலை கொடு வந்தார்க்கு கோடிச் செம்பொன் கொடுப்பேன்" என பறை யறைந்தான். தம்பியின் தீச் செயலைக் கண்டு கோபப்பட்டானில்லை குமணன். மாறாக வருந்தினான். அவன் அறியாமைக்காக இரங்கினான்.

பெருந்தலைச் சாத்தனார் எனும் பெருங்கவி குமணனைக் கண்டு கொடிய வறுமையை நீக்கத் துணிந்து கொங்கு நாடு சென்றார். ஆண்டு, குமணன் இலாமையையும், அவன் காடு சேர்ந்து கரந்துறைவதையும், அவன் தலைக்கு செம்பொன் கோடி கொடுப்பதாக இளங்குமணன் அறிவித்ததையும் அறிந்து மனம் வருந்தினார். கொடிய அரக்கனாகிய இளங்குமணனைக் காணலும், அவன் பாற் பரிசில் பெறுதலும் பொறாத புலவர் அங்கிருந்து அகன்று வறிய குமணனைக் காணும் நோக்குடன் காடு சென்றார். "எட்டி அகத்தில் பழுத்திருப்பினும் அதனைக் கிட்டுவா ரெவர்? தேன் சேய்மைக் கண்ணுள்ள கானகத்தில் உயர்ந்தோங்கிய கொம்பிலிருப்பினும், அதனைத் தான் உலகோர் விரும்புவார்கள்.

ஆட்சி புரிந்து அருங்கலை விநோதனாக விளங்கிய குமணன் தாழ்ச்சியுற்று தனித்து வீற்றிருந்த பரிதாப நிலையைப் புலவர் கண்டார். விம்மி

ஞர். "வாழ்க" என்று, வாழ்த்தினர். பின் குமணன் நல் வரவேற்று "என்னை அடைந்த காரணம் எதுவோ?" என்று வினவினன்.

"ஆடுநனி மறந்த கோடுயர் அடுப்பின்
ஆம்பி பூப்பத் தேம்பசி யுழவப்
பாஅல் இன்மையின் தோலொடு திரங்கி
இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைத் தொ(று) அழூஉந்தன் மகத்து முக நோக்கி
நீரொடு நிறைந்த ஈரிதழ் மழைக்கண் என்
மனையாள் எவ்வம் நோக்கி நினைஇ
நிற்படர்ந்திசினே நற்போர்க் குமண!
என்னிலை யறிந்தனையாயின் இந்நிலைத்
தொடுத்துங் கொள்ளா தமையலெனடுக்கிய
பண்ணமை நரம்பின் பச்சை நல்யாழ்
மண்ணார் முழவின் வயிரியர்
இன்மை தீர்க்கும் குடிப்பிறந்தோயே"

"நல்ல யாழையும் மத்தளத்தையுமுடைய கூத்தாது தரித்திரத்தைக் கெடுக்கும் குடியில் பிறந்தவனே! நல்லபோர் செய்யுங் குமண! சமைத்த லெனும் தொழில் இல்லாமையால் தேய்தலின்றி இருபக்கமும் உயர்ந்து தோன்றும் அடுப்பில் காளான் பூத்துக் கிடத்தலால் உடம்பு மெலியும் படியாக பசியால் வருந்தி பாலில்லாத வறண்ட மார்பை சுவைத்து பால் வாராமையால் அழுகின்ற குழந்தையது முகத்தைப் பார்த்து கண்ணீர் ததும்பும் என் மனைவியது வருத்தம் தீர்ப்போன் நீ ஒருவனே என உணர்ந்து நின்பால் வந்தேன். ஆதலின் உன் வறிய இந்நிலையிலுங் கூட யான் கட்டாயப் படுத்தி யாவது பரிசில் வாங்காது விடேன்" என தம் வறுமைத் துன்பத்தைச் சித்திரித்துக் காட்டினர்.

நாடிழந்தேன் வீடிழந்தேன். எனினும் எனக்கு சிறிதும் வருத்தமில்லை. இப்புலவர் பெருந்தகையின் வறுமை நீக்க முடியாத நிலையில் இருப்பதே பெரும் துயர் உண்டாக்குகிறது. இவர் வறுமை தீர்க்காது என் உயிர் இருந்தென்ன பயன்? "ஈதல் இயையாக்கடை சாதலின் இன்னாததில்லை இனிததூஉம்" என சிந்தித்து,

"அந்த நாள் வந்திலிர் அருந்தமிழ்ப் புலவீர்
இந்த நாள் வந்துநீர் நொந்தின ரடைந்தீர்
தலைதனைக் கொடுபோய் தம்பிகைக் கொடுத்த தன்
விலைதனைப் பெற்றும் வறுமை நோய்க் களைமின்"

நான் அரசாட்சி செய்துவந்த காலத்தில் நீர் வந்திலீர். வந்திருந்தால் போதும், போதும் எனக் கூறும்படியாக பெருஞ் செல்வம் அளித்திருப்பேன். அது போழ்து வாராது வறுமையுற்று சிறுமைப்பட்டிருக்கும் இக்காலத்திலோ வந்தீர்? போகட்டும். என் தலையைக் கொய்து கொண்டு போய் என் தம்பி கையிற் கொடுத்து அவன் தருவதாகப் பறை யறை



வித்த கோடி செம்பொன்னையும் பெற்று வறுமை நீங்குவீர் என பலவாறு கூறிப் புலவரிடம் தன் கைவாளை நீட்டினன்.

மேற்படி சொற்களைக் கேட்டதும் புலவர் திடுக்கிட்டார். துடிதுடித்தார். "என்னே! என் வறுமை களைய தன் தலையை கொய்துபோ என்றான் இந்த வள்ளல். முக்காலத்திலும் எவரும் இவ்வார்த்தை கூறத் துணிகிலர். நாம் வாள்வாங்கத் தாழ்ப்பின் இவனே தன் தலையைக் கொய்தாலும் கொய்துவிடுவான்" என நினைந்து விரைவிற் வாளைக் கையிற் வாங்கிக் கொண்டு "அன்ப! நீ தலை கொடுத்தாயென்றால் உனக்குப் பேரும் புகழும் உண்டாகும். ஆயின் எனக்கோ என்று அழியாப் பழியன்றோ உண்டாய் விடும்? உன் தலை பெறுதல் அவசியமாயின் யான் அப்பொழுது தெரிவிப்பேன் அதுகாறும் அதனைக் காத்து வைத்திருப்பாயாக" என்று கூறிவிட்டு இவ்வாளொடு சென்று இளங்குமணனைக் கண்டு அவன் மனதை மாற்றி குமணனை மீண்டும் அரசுபுரியச் செய்வேன் என்று அறுதியிட்டு, இளங்குமணனை நாடிச் சென்றார்.

இளங்குமணன் செல்வச் செருக்கால் இறுமாந்து குமணன் தலை கொணர்வாரை எதிர்பார்த்திருந்தான். புலவர் அவனை யடைந்து கொடையின் சிறப்பையும், அதனால் என்றும் அழியாப் புகழ் உண்டாதலையும், கொடை கொடார் சிறுமையையும், அவர்கள் இறந்தவுடனே உலகோர் அவர்களை மறந்து விடும் தன்மையையும் எடுத்துக் காட்டி "சிறந்த யானைகளைப் பரிசிலாகப் பரிசிலர்க்குக் கொடுக்கும் அழிவில்லாதப் புகழுடைய நின் அண்ணல் குமணவள்ளலை அடைந்து பரிசு பெற பாடி நின்றேன். பரிசிலனுக்குப் பரிசில் கொடாது வறிதே விடுதல் தான் நாடிழந்ததினும் இன்னாது என அன்னான் நினைந்து அதுசமயம் தன்னைவிட, வேறு பொருள் இல்லாமையின் தன் தலையை அரிந்து நின்னிடம் கொடுத்து கோடிப் பொன் பெறுக என்றான். ஆதலின் அவன் வாளொடு வெற்றி கொண்ட உவகையுடன் வந்தேன்" என அவன் உள்ளம் இளகும் வகையில் கூறியருளினர்.

இளங் குமணன் அது கேட்டு பதறி, உள்ளம் நடுங்கி, தமையனுக்குச் செய்த தீங்கை யுன்னி பலவாறு புலம்பி, "போறிவுடையீர்! அண்ணலை யழைத்து அரியணையில் அமர்த்துதல் நம்கடன்" என்று இரந்து நின்றான்.

புலவரும் உளமகிழ்ந்து இளங்குமணனுடன் காடு சேர்ந்து குமணவள்ளலைக் கண்டார். இளங்குமணன் "அடியேன் செய்த பிழை பொறுத்து அரியணை வந்து அரசு புரிக" என்று வேண்டினன்.

குமணனோ "எம்பி! நீ இதுகாறும் எனக்கு ஒரு சிறிதும் தீங்கு செய்ததாக என் மனம் எண்ணிய தில்லை. ஆதலின் யான் மன்னித்தல் அவசியமன்று. நாடுறை வாழ்க்கையை விட காடுறை வாழ்க்கையையே நான் விரும்புகிறேன்" என மறுத்தான்.

ஏ! தலைக் கொடையாளியே! உன் தலையை எனக்கு அளித்ததனை மறந்து விட்டனையோ! உனக்கு அத்தலையில் யாதும் உரிமை யிலதே! யான் அதில் முடிசூட நினைந்தால் யார் தடை செய்ய முடியும்?" என புலவர் சாமார்த்தியமாக உரையாடி குமணவள்ளலுக்கு முடிசூட்டினர்.

# நுட்ப புத்தி

——:(o):——

(கூடல்-நாவுக்கரசன்)

புத்தி—அறிவு இது யாவருக்கும் உண்டு. நுட்பபுத்தி—தெளிந்த அறிவு—கூர்மையான புத்தி. இதனைப் பெற்றிருப்பவர் மிகச் சிலரே. கல்வி அறிவினை விட இவ்வித அறிவு இயற்கையில் மாந்தர்க்கு அமைவதே யாகும். அல்லது, ஒவ்வொருவருக்கும் இயற்கையில் உள்ள அறிவை, வளர்க்க உழைப்பவர்கள் இறுதியில் பெறும் பாக்கியமாகும், ஒரு கடின காரியத்தை செய்து முடிக்க வழி தெரியாத காலத்தில் அதனை செய்து முடிக்கும் சுலபமான வழியை அறிந்து கொள்வர் இத்தகையோர். இரண்டொரு உதாரணம் தருவாம்.

ஜான் மன்னனின் அவைக்களம். அரசருக்கு முன்னால் கான்டர்பெரி பாதிரி, பயத்தோடு நின்றுகொண் டிருக்கிறார். அரசன் கோபாக்ராந்தனாய் இருக்கிறான். காரணம்? பாதிரி ஜானைவிட மிக அதிக சௌகரியங்களையும் வேலைக்காரர்களையும் பெற்று அதிக ஆடம்பர வாழ்க்கை நடத்தி வந்த உண்மையை ஒற்றர் மூலம் தெரிந்ததேயாகும். மதகுருககள் ஆடம்பர வாழ்க்கை நடத்துவது அக்காலத்தில் அரச சட்டத்திற்கு விரோதமாகும்.

அரசன் கேலியிலும் சந்தோஷத்திலும் பெரிதும் விருப்பமுடையவன். சட்டப்படிக்குப் பாதிரியைக் கொன்றுவிட உத்தரவிட வேண்டும். இருந்தாலும் சில வேடிக்கை கேள்விகளைக் கேட்டு பாதிரியார் அதற்குத் தக்க பதில் கூறி, தன்னைச் சந்தோஷப்படுத்தக் கூடுமானால் மன்னித்து விடுவோம்; இல்லாவிடில் கொன்று விடுவோமென எண்ணினான். எனவே,

அரசன் "குருவே, நான் மூன்று கேள்விகள் கேட்பேன். முதலாவது சாவரெயினாகிய நான் எனது கிரவுனோடு (முடியோடு) எவ்வளவு மதிப்புடையேன். இரண்டாவது நான் இந்த உலகத்தை எத்தனை நாளில் சுற்றி வரலாம். ஒரு நிமிஷம் கூட தப்பிதமாக இருக்கக் கூடாது. மூன்றாவது நான் மனத்தில் என்ன நினைத்துக்கொண்டிருக்கிறேன்? இம்மூன்று கேள்விகளையும் 15 நாட்களுக்குள் பதில் சொல்லவேண்டும். இல்லாவிட்டால் உமது தலையை இழக்க வேண்டும்" என்று கூறி சபையைக் கலைத்தான்.

நாட்கள் சென்றன. கேள்விகளுக்கு விடை தெரியவில்லை. ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் முதலிய இடங்களுக்குச் சென்று மிகப் படித்த புலவர்களை யெல்லாம் கேள்விக்குப் பதில் கேட்டார். ஒருவருக்கும் விளங்கவில்லை. பாதிரி மிகுந்த மனவாட்டத்துடன் தன் வீடு நோக்கி வந்துகொண்டிருந்தார். அவரது மேய்ப்பன் வழியில் எஜமானனைச் சந்தித்தான். அவர் முகம் வெளுத்திருப்பதைக் கண்டான்.



'எஜமான், உங்கள் முகம் வாட்டமுற்றிருக்கிறதே! அரசன் எதாகிலும் கோபித்தாரோ' என்று வினயமாய் கேட்டான். பாதிரி அவனை நோக்கி 'மேய்ப்பனே, நாளைக் காலை என் தலை உருளும். அரசன் மூன்று கேள்விகளைக் கேட்டார். எனக்கும் மற்ற பெரியவர்களுக்கும் பதில் தெரியவில்லை. நாளைக்கே 'கடைசி நாள்' என்று மூன்று கேள்விகளையும் சொன்னார். மேய்ப்பன் 'எஜமான், நான் தங்களைப் போலவே இருப்பதாக ஜனங்கள் கூறக் கேட்டிருக்கிறேன். ஆகையால் நீங்கள் நாளைக்கு உங்கள் உடைகளையும் குதிரையையும் ஆட்களையும் எனக்கு கொடுத்தால் நான் சென்று விடை பகர்ந்து வருகிறேன் என்று கூறினான். அவன் வார்த்தைகள் அவரைத் தேற்றுவதற்காகவே என்று முதலில் மறுத்தார். அவன் வார்த்தைகளில் அவருக்கு நம்பிக்கையில்லை-யோசித்தார். எப்படியும் விடை சொல்லாவிட்டால் உயிர் போகும். 'இதையும் தான் செய்து பார்ப்போம்' என்ற முடிவுக்கு வந்தார்.

பதினைந்தாம் நாள் காலை ஜானும் சபையோரும் பாதிரிக்காக காத்துக் கொண்டிருந்தார்கள். கடைசியாகப் போலிப் பாதிரியும் வந்தார்.

அர.—எங்கே! என் முதல் கேள்வி, சாவரெயினாகிய நான் கிரவுனோடு (முடியோடு) எவ்வளவு மதிப்புடையேன்? பதில் சீக்கிரம்.

போ. பாதிரி:—அரசே! ஒரு சாவரானுக்கு 20 ஷிலிங் ஒரு கிரவுனுக்கு 5 ஷிலிங் நீர் சாவரெயினாக இருப்பதோடு கூட கிரவுனும் பெற்றிருப்பதால் 25 ஷிலிங் மதிப்புடையீர்.

அர:—என்ன! ஒரு அரசன் இவ்வளவு தானா மதிப்பு பெறுவான்? ஆயினும் சரி. என் கேள்வி அப்படி இருந்தது. இரண்டாவது கேள்வி 'இந்த உலகத்தை எத்தனை நாளில் சுற்றி வரலாம்? ஒரு நிமிஷமும் தப்பிதமாகக் கூடாது பதில் கூறும் விரைவில்.

போ. பா:—மன்ன! சூரியன் கிழக்கில் காலை 6 மணிக்கு உதிக்கையில் அவனோடு புறப்பட்டு, மறுநாட் காலை 6 மணி வரையில் அவனோடு கூடவே சுற்றிவந்தால் ஒரு நிமிஷங் கூட தாமதியாமல் 24 மணி நேரத்தில் இந்த உலகத்தை சுற்றிவந்து விடுவீர்; சந்தேகமே இல்லை.

அர:—சரி; இரண்டு கேள்வியிலும் என்னை தந்திரமாய் ஏமாற்றி விட்டீர். இந்தக் கேள்வியில் தான் விழிக்கப் போகிறீர். 'நான் இப்போது என்ன நினைத்துக்கொண் டிருக்கிறேன்' சொல்லும்.

போ. பா:—அது தான் எனக்கு மிகச் சுலபம். நீங்கள் 'நான் கேன்டர் பெரி பாதிரி' என நினைத்துக்கொண் டிருக்கிறீர்கள். ஆனால் நான் அவரது மேய்ப்பன் என்று கூறி உடைகளைக் களைந்தான்.

ஜானும் சபையோரும் ஆச்சரியப்பட்டு அவனது புத்தி நுட்பத்திற்கு மெச்சி அவனுக்காக அவனது எஜமானனுக்கு உயிர் கொடுத்தான். (Translation from John & the Abbot of Canterbary). மேற் கூறியது மேல் நாட்டு புத்தி நுட்பம். நம் நாட்டுப் புத்தி நுட்பத்திற்குச் சிறிது செவி சாயுங்கள்.

தென்னாலி ராமன் விகடகவி. அரசனிடத்திலேயே அகட விகடஞ் செய்து அவனையும் சில சந்தர்ப்பங்களில் அவமானப் படுத்திவிடுவான். ஒரு தடவை பொறுக்க முடியாத குற்றம் செய்து விட்டான். கொலைசெய்ய உத்தரவிட்டான் அரசன். கொலைக் களம் அவனைக் கொல்லப் போகும் சமயம் அரசனும் கூடவே இருந்தான். என்ன இருந்தாலும் ராஜ சபையின் விகடகவி யல்லவா? அரசன் 'தென்னாலி, எப்படியும் இறக்கத்தான் போகிறாய். எந்த மாதிரியான சாவை விரும்புகிறாயோ அந்த மாதிரி கொல்ல உத்தர விடுகிறேன்; சொல்'' என்றார். தென்னாலிக்கு உற்சாகம் உண்டாயிற்று. கண்கள் பிரகாசம் பெற்றன. 'உண்மையாகவா?' என்றான் தென்னாலி. இறக்கப் போகிறவனுக்கு இந்த உதவியாகிலும் செய்யக் கூடாதா? அரசனும் 'ஆம்' என்று வாக்குறுதி செய்தான். தென்னாலி சந்தோஷம் பொங்க 'அரசே! நீர் சொன்னசொல் தவறமாட்டீர். ஆகையால் நான் குடுகுடு கிழவனாகி இறக்கிற அந்த மாதிரி சாவை விரும்புகிறேன்' என்றான். அரசன் என்ன செய்வான்? அவ்வாறே அவனை விடுவித்தான். ஆபத்துக் காலத்திலும் உயிர் கொடுத்தது அவனது நுட்ப புத்தி அல்லவா?

---


## வியாபாரிகளே!

## சினிமா பட முதலாளிகளே!

நீங்கள்

## "ஆனந்தபோதினி"யில் விளம்பரஞ் செய்ததுண்டா?

இல்லையானால்,

## இன்றே ஒரு முறை முயற்சி செய்து பாருங்கள்.

தமிழ்நாடெங்கணும், தமிழர்கள் வசிக்கும் மலேயா, சிங்கப்பூர், கோலாலம்பூர், தென்னாப்பிரிக்கா, பர்மா முதலிய இடங்களிலும் பல்லாயிரக் கணக்காகப் பரவியிருக்கும் "ஆனந்தபோதினி"யில் விளம்பரஞ் செய்தால் உங்கள் வியாபாரங்களில் பெருத்த லாபங் கிடைக்கும். ஒரு முறை பரீக்ஷை செய்து பார்த்தால் உண்மை விளங்கும். விவரங்களுக்கு எழுதவும்.

**மானேஜர், ஆனந்தபோதினி ஆபிஸ்,**

:: :: சௌகார்பேட்டை, சென்னை. :: ::


# உதிர்ந்த மலர்!

(கோட்டாறு-தே. ப. பெருமாள்.)

காத லூட்டுங் கவின்மிகு காட்டில்
நீதிலா செடிபல தாம்வளர் இடத்து,
இன்ப ஒருசெடி இயற்கை வளமொடு
இன்னும் பலவும் மன்னிய வதனால்
தன்னிக ரில்லாத் தனிநிலை கொண்டு
பொன்னிகர் மஞ்சள் புகழ்மலர் பலவொடு
இன்னெழில் கொண்டு இலங்குங் காலை
சின்னக் கிளையில் சேர்ந்த இலைநடு
ஒருமல ரதனில் திருமுகந் திறந்து
பெருமணம் வீசி புதுவெழில் நீட்டி
தானுறை வதனால் தாய்ச்செடி தனக்கும்
வான்புகழ் ஈட்டி வனப்புட னாட,
கண்டதாயும் கவின்மிகு மகவின்
மண்டேய் மணமும் மற்றும் பலவும்
எண்ணி யறிந்து இதயம் மகிழ்ந்து
"பண்டு செய்த பழவினை யதனால்
இன்றிதைப் பெற்றேன், இனித்துயர் காணேன்!
ஏனோ வென்றால் இம்மலர் மணத்தால்
வானோர் விரும்பி வரவும் செய்வர்
கான்மதி யன்ன இக்கடி மலர்கண்டு
வான்றிரி பவர்கள் வணக்கங் காட்டி
தான்கொய் தகல்வர்; யான்மகிழ் வுண்ண
அவர்தாம் இம்மலர் அழகுடன் பிறந்த
புவியில் மணத்தை புகழ்ந்து ஏத்தி
தாமும் அணியார்; தன்தலை யிந்திரன்
காமுறக் கொடுப்பர்; கைபெற் றிந்திரன்
மலரிதின் இன்னியல் மாண்புற வறிந்து
உலைவை யகற்றும் உட்குணங் கண்டு
யானிதை அணியேன், என்தலை சிவனார்
மானோ டணியும் மதிப்பின தாகும்
ஆதலின் இதையே அவர்க்கு அளிப்பன்!
பேதை கொடுத்த பெருமல ரிதனை
பெற்ற தலைவர் பெருமகிழ் கொண்டு
முற்று மறிந்து முழுவாங் கொடுப்பர்
என்று எண்ணி இந்திர னீவன்.
ஒன்றிய அன்பால் உவந்து அளித்த
வன்றிறல் மலரை வியப்புடன் நோக்கி
வன்றிறல் மலரவன் நற்றிறல் கண்டு
இறையனார் சிவனும் இதமது மலர்ந்து,
முறையாய் அதையே மூவருள் முதல்வி;

வையத் தேவி; வானோ ரெல்லாம்
கையை உயர்த்தி கருதிய பெற்றிடும்
உண்மைக் காதலி; உமையவ ளவளும்
வண்மை புகழ்ந்து, வாங்கக் கொடுப்பர்
மலரைத் தேவி மாண்பொடு விழியில்
உலைவுரு வழியில் உவப்புடன் ஒற்றி,
'வண்டு காணா இம்மல ரதனை
பண்டு யானும் பார்த்தே யறியேன்!
எண்டிசைப் பாங்கரும் என்னெழில் இதனால்
அண்டிப் பெருகும்; ஆதலின் இதையே
எந்தன் கூந்தலில் இசைவுட னணிவன்!''
சிந்தை மகிழ்ந்து இச்செம்மொழி கூறி
அணிந்து கொள்வள் அணங்கின் தலைவி.
தணிவாய்ப் பின்னர் தவமலர் நோக்கி
'இன்ப மலரே! உன்னைப் பெற்ற
அன்புத் தாயும் அவனியில் பெரியவள்!
அவளின் பெற்றி அறைதற் கொன்றோ!
சிவனார் கைதொடச் செய்த மலரை
பெற்ற ஒருசெடி பெரியதே யன்றோ!
மற்றும் யானும் மாண்போ டணிய
செய்த தொண்டு அவளது வன்றோ!
எய்தா இன்பம் உலகில் எய்தி
பின்னை ஞான்று பெரியள் அவளும்
என்னை யடைக!' எனும்வர மீந்து
இன்ன லொழிக்க இன்ப மடைவேன்!''
என்னும் நினைவில் இருஞ்செடி பட்டு
தன்னை மறந்து மகிழ்ச்சி கொள்ள
அன்ன போழ்து அங்கே வந்த
இன்ப ஒருகுயில் இசைக்குஞ் செடியிடை
''அன்பே! கேட்பாய்! அகில மெங்கும்
சுற்றி யலைந்து திரிந்த யானும்
பற்றிய அயர்வு பிணித்த வேளை
களைப்பு தீர்க்க காவொன் றடைந்து
இளைப்பு தீர்ந்தேன், இவ்வமய மதில்
வானில் இருவர் பறப்பு கொண்டு
தேனின் மொழியால் சிலபல சொன்னார்.
உரைப்பேன் கேட்பாய்! உயர்ந்த செடியே!
'விரையது வீசி மயக்குவ தென்னோ?
ஆ! ஆ! மணத்தின் அருங்குண மென்னே!
பூ! பூ! இதுவே பொய்யில் உண்மை!
வையப் பரப்பில் இளைய வாடை
தையால்! இதுவரை நுகர்த்திலன் யானே!
சற்று தங்குவம் சார்ந்து இங்கே.
மற்றும் மலரின் பெற்றி யதனை



நன்கு அறிந்து நம்நாயகர் மகிழ
பொன்னுரை செய்வோம் போற்றுவர் நம்மை
என்றே ஒருவள் இயம்புதல் செய்தவை
நன்று கேட்ட நயந்தெரி ஒருவள்
'அறிகுவன் யானே அருமல ரொன்று
நிறமுடன் பூத்து நல்மணம் வீசி
பிறரும் விரும்பப் பெற்றிய தாகி
நிறஇருட் கானில் நிற்ப தறிவாய்!
இன்றதைக் காண அமையம் இலவால்
நன்றாய் ஒருநாள் நானதைக் காட்டுவன்'
என்று கூறி இன்னுயிர்த் தோழியை
தன்னுடன் கூட்டித் தானுஞ் சென்றாள்.
என்று மலரை ஏற்றிக் கூறிய
வன்றிறல் பெண்டிரை வான்குயி லுரைத்தலும்
கேட்ட செடியும் கொண்ட மகிழ்வின்
கூட்டம் பெருக, 'காணுவன் நன்மை'
என்றே யெண்ணி இருக்குங் காலை,
புனல்வள மதனொடு பல்வளம் பெருகிய
குபேர நாட்டின் காவை நீத்த
அபார அழகு அஞ்சுகம் செடியை
அடைந்து கூறும், 'ஆருயி ரனையாய்!
கடந்த தினங்கள் பலவரை யானும்
மாதவம் செய்யும் மாமுனி யருளால்
மாவரம் பெற்று மன்பதை விட்டு
பலஇடஞ் சென்றேன், பலவுங் கண்டேன்!
கலைஞர் போற்றும் காவொன் றகத்து
புவியில் கிடையா புதுமலர் கண்டேன்.
அவையெலாம் அழகில் மிக்கன வாயினும்,
உண்மை உரைப்பேன் உயர்மொழி அல்லை!
தண்மை மிக்க அம்மல ரெல்லாம்
உன்மல ரொன்றின் உயர்வினை யறிவாய்!'
என்று கூற இருந்து கேட்ட
எழில்செடி தானும் முழுமகிழ் கொண்டு
விழிநீர் பெருக வேட்கை மிகுந்து
உரைக்கு மிதனை, 'உயர்ந்த கிளிநீ
உரைத்த துண்மை! ஆயின் ஒன்று
அறைகுவன் கேளே! ஆருயிர் மலரும்
இறைவன் அருளால் இதனது நாள்வரை
வையந் தன்னில் வாழ வேண்டும்!
வையந் தன்னில் வாழு மாயின்
பெறுவ தெல்லாம் பெற்றுயான் விடுவன்!
இறுதியில் வேண்டுவ திதுவே யாகும்'
என்று கூறி இன்பக் கிளிக்கு
நன்மொழி யுரைத்து நற்செல வழித்து


கழிந்த தினங்கள் இருபது வாயின!
இழிந்த ஒருநாள் இருஞ்செடி தானும்
கொடிய கனவு கண்டு விழித்தது.
நெடிய காற்றால் நினைவுப் புதுமலர்
ஆக்கம் அழிந்து அழகு சிதைந்து
நீக்கங் கொண்டு நிலத்தில் உதிர
கண்டது செடியும் கலங்கிய துள்ளம்!
உண்ட கனவால் உறுவதும் யாதோ?
என்று எண்ணி ஏங்கி யிருப்ப
அன்று கழிந்தது; அடுத்த நாளில்
மலரின் ஒருஇதழ் மணியொளி இழந்து
உலைவு கொண்டு உதிர்ந்து விழுந்தது!
கண்ட தாய்ச்செடி கவலது கொண்டு
சுண்டிய முகமொடு சுழன்று நோக்க
தமக்குத் தோன்றிய தம்முயி ரிளமலர்
சுமக்கா ஒருநோய் கொண்டது கண்டது.
மயக்கம் பெருக மனமது குழம்ப
பயந்த நோய்க்கு பார்வை கொண்டு
செடியும் தம்மா லான மட்டும்
நெடிய முயற்சி பலவு மெடுத்தது
எடுத்தும் பயனென்? ஈசன் செயலை
தடுத்து நிறுத்துவர் யாவரும் உளரோ?
அடுத்த ஞான்று அருமல ரதுவும்
தொடுத்த அன்பு உடன்பிறப் பொழித்து.
மண்ணில் வீழ்ந்தது, மாண்புயி ரொழித்தது!
கண்ணனை மகவை இழந்தது செடியும்!
உண்ணா வயிறொடு உறங்கா விழியொடு
எண்ணா நினைவொடு ஏங்கி மயங்கி
தாய்ச்செடி யதுவும் தத்தளிப் புற்று
நோயது கொண்ட ஒருயி ரொப்ப
புலம்பிப் புலம்பி பொன்றி யழிந்தது!
கலக்க முறுத்திய கடுகன வெண்ணி
கண்ணீர் வடித்து கலங்கி யழுதது!
ஒண்ணாத் துயரால் ஒறுப்பு எய்தி
ஒசிந்த பிறமக மலரது கண்டு
நசிவு எய்திநல் வாழ்வும் வேண்டா
மனமது கொண்டு மயலிதில் மூழ்கி
இனையன வெல்லாம் இயம்புதல் செய்யும்!
"என்னே உலகம்! என்னே வாழ்க்கை!
என்னே மகிழ்வு! என்னே இன்பம்!
என்னே சுற்றம்! என்னே உற்றார்!
என்னே பிள்ளை! என்னே பிறபொருள்!
எல்லாம் நொடியில் எய்ப்பன வன்றோ?
அல்லால் ஒன்று ஆவது உண்டோ?



இன்னே பிறந்தது என்னிள மகவு
கொன்னே மடிந்தது! கொடுமை! கொடுமை!
ஈசன் எனக்கு இம்மக வீந்து
பாசங் கொள்ளப் பறித்தான் உயிரை!
ஏனோ தந்தான் இம்மக வெனக்கு?
வானோர் போற்றும் வள்ளல் நெஞ்சம்
கல்லோ? இரும்போ? கடுத்த பொருளோ?
வல்லாய்! பெரியாய்! வான்தலைச் செல்வமே!
என்மக வுயிரை இரங்கித் தாராய்!
உன்போல் வல்லார் ஒருவரு மிலரே!
இதுவுனக் கரிதோ? எளிய செய்கையே!
மதியுடைத் தேவே! மயக்க மறிவாய்!
ஐயோ எந்தன் இன்ப இளமலர்
பைய வாடி பாரினில் வீழ்ந்ததே!
முன்னர் அதனின் முழுமுக மென்னே!
இன்னர் அதனின் இழிநிலை யென்னே!
வற்றி வதங்கி வண்ண மழிந்து
அற்ற உயிரில் அழியுது காணாய்!
பெற்ற உள்ளம் பொறுக்குமோ இதையே!
அற்ற நிலையில் அரைஉயி ராகுது!
என்னில் இதுபோல் இதற்கு முன்னர்
சின்னஞ் சிறுவர் பிறந்தன ரிலரே!
என்ன எழில்முகம்! என்ன இளநகை!
என்றி வளஉடல்! என்ன வான்மதி!
என்ன ஆட்டம்! என்ன அசைவு!
என்ன பாட்டு! என்ன பயிற்சி!
என்ன நன்மணம்! என்ன தனிக்குணம்!
உன்னி யன்றோ உளமது மகிழ்ந்தேன்!
அதனது உயர்வால் அடியன் யானும்
கதிபெற லாமெனக் கடுநினைப் புற்றேன்!
எங்கள் உயிர்நிலை இருப தியாண்டு
திங்கள் எழுபதும் தங்குமே எம்மலர்!
இத்துணைக் கடிதில் செத்தது எம்மலர்!
பித்த னானேன் பேயு மானேன்.
அழிந்த அம்மலரின் அழகுச் சோதரர்
இழிந்த நிலையில் இளைப்புற் றனரே!
வானோர் கூட எம்மல ரதனை
கான.மொழியால் கொண்டா டினராயின்
அதனது பெற்றி அறையவும் உண்டோ?
இதுவென்! இதுவென்! என்மலர் வருகுது
புதுஉருக் கொண்டு பொலியுது நன்கு!
இதுவென் மாயை! இதுவென் சக்தி!
மேலே நிற்குது! மெல்ல அழைக்குது!
காலோ உயரம் போவது இலையே!

ஐயோ இதுவென் உள்ளத் தோற்றமோ ?
பேயாய் வந்த பிள்ளையின் செய்கையோ !
ஆ ! ஆ ! மறைந்தது மகவுப் பேயே !
கூவுங் குயிலே ! கூட்டை விட்டு
மேவிப் பிடிப்பாய் ! பிடியதை விடுகிலாய் !
ஆடும் மயிலே ! ஆர்ப்புடன் போந்து
நீடிய பிடியாய் பிடித்தல் செய்வாய் !
இன்னிசை வண்டே ! என்குல நட்பே !
உன்வலி யதனால் உயர விடாதே ?
இன்னே வந்தேன் ! இன்னே வந்தேன் !
என்னே கால்கள் எழும்புவ திலையே !
கொடிய காலே ! நடையதைக் கொள்வாய் !
நொடியில் பிடிபட வழிசெய் குவையே !
ஐயோ ஒன்றும் என்சொல் கேட்டில !
வேயெனத் தூங்கி நிற்கின் றனவே''
எனவே செடியும் இனையன புலம்பி
கனவே கண்டு கருத்து மழிந்து
பித்தே போல இன்னும் வாழுது !
மெத்த அன்பீர் ! செடியல இதுவும்.
பெரிய குலத்தில் பிறந்த ஒருதாய்
உரிய குழவி ஆறொடு வாழ்நாள்
ஒன்று பிறந்தது உயர்ந்த அழகில்.
நன்றாய் வளர்த்து வயது இரண்டில்
அதனது நடையும் அறிவுங் கண்டு
இதனால் நாமும் இன்பங் கொண்டு
பெரிய பதவி பெற்றிட வல்லோம் !
எரிக்கும் வறுமையும் இறக்க வல்லோம் !
என்ற நினைவில் இருக்குங் காலை
வன்திறல் காலன் கயிறது கொண்டு
உயிரை இழுத்து உயரச் சென்றான்.
உயிரில் குழவியை இழந்து புலம்பிய
உற்ற தாயின் ஒரு நிலை கண்டு
முற்றும் இதுவே எழுதியதாகும் !
செடியின் இயல்பும் செம்மல ரியல்பும்
நெடிதாய்ப் புகழ்ந்த சிறப்புள் ளியல்பும்
இன்னும் பலவும் இனையன வெல்லாம்
உன்னி நோக்கின் உயர்வு கொண்ட
தாயின் நிலையும் தம்மக வியல்பும்
நேயங் கொண்டு புகழ்ந்தோர் நிலையும்
பின்னும் பலதையும் பெட்புறக் காட்டும்.
இன்தமி ழன்பீர் ! ஏற்பீர் இதையே !.

---




(ஆசிரியர் - வி. சங்கரய்யர்)

## 54. குழந்தைகளுக்கு மாந்த எண்ணெய்

மணத்தக்காளி, அகத்தி, சோற்றுக்கத்தாழை, ஈருள்ளி இவைகளின் சாறு வகைக்கு $\frac{1}{4}$ படி விளக்கெண்ணெய் $\frac{1}{2}$ படி, பூலாங்கிழங்கு, வறுத்த வெந்தயம், சண்பகமொட்டு, விளாமிச்சவேர், வெட்டிவேர், கோஷ்டம், அதிமதுரம், ஏலம் வகைக்கு $\frac{1}{4}$ பலம் அரைத்து கலக்கி பதமாகக் காய்ச்சி வைத்துக் கொள்ளவும். இதில் தினம் கொஞ்சம் இரவு கொடுத்துவரவும், குழந்தைகள் மாந்தம், அஸ்திகாங்கை, குளிர் ஜுரம் முதலியவை குணப் படும்.

## 55. இரத்தக் கடுப்புக்கு

(*a*) விளாம்பிசினும் உள்ளியும் அரைத்து மோரில் கொடுக்கவும்.

(*b*) நாயுருவி இலை 1-பிடி, நல்லெண்ணெய் $\frac{1}{4}$ படி; சோற்றுக்கத் தாழைச்சாறு $\frac{1}{4}$ படி ஜீனி $\frac{1}{8}$ படி போட்டு காய்ச்சிக் கொடுக்கவும். அண்டி தள்ளுவதும் குணப்படும்.

## 56. இஞ்சி யெண்ணெய்

இஞ்சிச்சாறு, நல்லெண்ணெய், பசுவின்பால் சமம் விட்டு காய்ச்சி தேய்த்துக் குளித்தால் பித்தமயக்கம், கிறுகிறுப்பு, தலைவலி நீங்கும்.

## 57. இஞ்சி லேகியம்

பித்தவாயு, குன்மம், நெஞ்செரிவு, அரோசகம், அஸ்தி ஜுரம், அஜீ ரணம் முதலியவைகளுக்கு 10-பலம் இஞ்சி, இளம்பிரண்டை 5-பலம், கரிப்பான், பூவரசம்பட்டை வகைக்கு 1-பலம், தாளிசபத்திரி, மல்லி, கடுக் காய், மிளகு, ஜீரகம், ஏலம், திப்பிலி, அதிமதுரம், கோஷ்டம், வகைக்கு $\frac{1}{2}$ பலம் எல்லாவற்றையும் உலர்த்தி பொடிசெய்து, 1-படி பசுவின் பாலில் 10-பலம் சர்க்கரை $\frac{1}{4}$ படி நெய் $\frac{1}{8}$ படி தேன் சேர்த்து லேகியம் செய்து காலை மாலை $\frac{1}{2}$ ரூபாயிடை கொடுக்கவும்.

## 58 ரசோன லேகியம்

பூண்டு பலம் 10, பசுவின்பால் படி 1, வேகவைத்து $\frac{1}{4}$ படியாகச் சுண்டி கடைந்து 5 பலம் ஜீனி, $\frac{1}{8}$ படி நெய் சேர்த்து லேகிய பாகத்தில்

இறக்கவும். தினம் காலை மாலை சாப்பிட சகல மேகவியாதிகளும் குணப்படும். தேகபலம் வீரியவிருத்தி யுண்டாகும்.

## 59 திப்பிலி லேகியம்

சித்தப் பிரமைக்கும் புத்தி கூர்மைக்கும் கால் படி பசுவின்பாலில் 8 ரூபாயிடை சர்க்கரை, 4 ரூபாயிடை திப்பிலி சூரணம், $\frac{1}{8}$ படி பசுவின் நெய், $\frac{1}{8}$ படி தேன் சேர்த்து லேகியம் செய்யவும்.

## 60. பிப்பிலாதி லேகியம்

காசம், வயிற்றுவலி, இருமல் முதலியவைகளுக்கு திப்பிலி 7-ரூபாயிடை சுக்கு, அரத்தை, ஓமம், கடுக்காய், சீரகம், ஏலம், மல்லி வகைக்கு 1 ரூபாயிடை வெல்லம் 6 பலம், $\frac{1}{2}$ படி பால் $\frac{1}{4}$ படி தேன் $\frac{1}{4}$ படி நெய் லேகியம் செய்து காலை மாலை சாப்பிட்டு வரவும்.

## 61. அசுவகந்தி சூரணம்

அமுக்கிரா சூரணம், சீனி வகைக்கு 8 பலம், சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், ஜாதிக்காய், பத்திரி, ஏலம், கிராம்பு, கடுகுரோகிணி, கூவைக் கிழங்கு, சிறுநாகப்பூ வகைக்கு $\frac{1}{2}$ ரூபாயிடை சூரணம் செய்து காலை மாலை பசுவின் நெய்யில் சாப்பிடவும். தேகம் நிடப்படும், பசுவின் கோமயத்தில் கொடுக்க எலி விஷம் தீரும். பசுவின் பாலில் கொடுக்க பிள்ளை நோய் தீர்ந்து வளரும். எலுமிச்சம்பழச் சாற்றில் கொடுக்க காமாலை சோகை தீரும். வல்லாரைச்சாறு ஆழாக்கில் கொஞ்சம் மிளகு பொடியும் ஷை சூரணமும் சேர்த்து மாதவிடாயான 3 நாட்களும் கொடுக்க கர்ப்ப முண்டாகும். வேப்பெண்ணெயில் கொடுக்க குஷ்டம் வேரோடு அற்றுப்போம்.

## 62. அசுவகந்தி லேகியம்

அமுக்கிரா சூரணம் 5-பலம், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தாணிக்காய், ஓமம், ஜீரகம், கருஞ்சீரகம், ஏலம், கிராம்பு, பத்திரி, ஜாதிக்காய் அரத்தை, அதிமதுரம், வாயுவிளங்கம், வகைக்கு $\frac{1}{2}$ பலம், 12 பலம் சர்க்கரை $\frac{1}{4}$ படி நெய், $\frac{1}{8}$ படி தேன் சேர்த்து லேகியம் செய்து காலை மாலை சாப்பிட உடலின் சகலவித பிணிகளும் நீங்கும். சுக்கில சோணிதம் சுத்தப்படும், க்ஷயம், குஷ்டம் குணப்படும்.

## 63 சுக்கு

1. சுக்கை நன்றாக அரைத்து சாராயத்துடன் கலந்து பத்திட வாதம், வீக்கம் குணமாகும்.

2. சுக்கை அரைத்து நெற்றியில் பத்திட தலைவலி நீங்கும்.



3. இரவு மோரில் ஊறவைத்து காலையில் அரைத்து சாப்பிட கிராணி, அஜீரணம் நீங்கும்.

4. சுக்கை அரைத்து கொதிக்க வைத்து துணியில் கிழி கட்டி 2, 3 சொட்டு காதில் விட காதுவலி, சீவடிதல் குணப்படும்.

5. சுக்கை மணலில் மூடி ஒருமாதம் தண்ணீர் விட்டு பிறகு எடுத்து நன்றாக அலம்பி நறுக்கி தேனில் போட்டு ஒரு மாதம் வைத்திருந்து பிறகு தினம் காலை மாலை ஒரு ரூபாயிடை வீதம் சாப்பிட்டு வந்தால் பலஹீனம், நீர் எரிச்சல் மேஹரோகம், ஜுரம், அஜீரணம், வயிற்றுவலி முதலியவை குணப்படும்.

## 64. வல்லாரை

1. ரணம், குஷ்டம், சொறி, கண்டமாலை இவைகளுக்கு இலையை அரைத்து பத்துப் போடவும். உள்ளுக்குக் கொடுக்கவும்.

2. கல்லீரல் பெருக்கு, மண்ணீரல் பெருக்குக்கு அரைத்து மேலே வைத்துக் கட்டவும்.

3. வல்லாரை இலையை பாலில் புட்டவியல் செய்து நிழலில் உலர்த்தி சூர்ணித்து தினம் காலை சர்க்கரை அல்லது தேன் அல்லது நெய்யில் சாப்பிட ஞாபக சக்தி அதிகப்படும். சகல சர்ம வியாதியும் தீரும்.


### ஏஜண்டுகள் தேவை.

எல்லா ஊர்களிலும் நமது 'ஆனந்தபோதினி' மாத, வாரப் பத்திரிகைகளை விற்பதற்கும், சந்தா சேர்த்துக் கொடுப்பதற்கும், விளம்பரம் சேர்த்துக் கொடுப்பதற்கும் தக்க சாமர்த்தியமுள்ள ஏஜண்டுகள் தேவை. விவரம் அறிய விரும்புவோர் எமக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும். நமது புஸ்தகங்களும் பத்திரிகைகளும் எல்லா ஸ்டேஷன்களிலுமுள்ள ஹிக்கின்பாத்தம் புஸ்தக சாலைகளில் கிடைக்கும்.

மானேஜர்.

# ரோஜா வடு

—❀—

(திருவையாறு—கே. வைத்தியநாதன்.)

கி. பி. பதினேழாம் நூற்ருண்டில் சித்தூர் எல்லையைச் சார்ந்தாற்போல் ஒரு உன்னத மாளிகை கம்பீரமாக விளங்கிக்கொண்டிருந்தது. உயர்ந்து எழுந்த மதில்களும், மாடங்களும் மாளிகையின் உன்னத தோற்றத்தைப் பல மைல்கள்வரை எடுத்துரைத்துக் காட்டி நின்றன. ஆயுதசாலைகளும், வேவு மன்றங்களும், காவலர் விடுதிகளும் மதில்களின் உட்புறத்தில் அமைக்கப்பட்டிருந்தன.

அந்த அலங்கார மாளிகையில்தான் இராஜபுத்திர வேந்தனுன இராம்சிங் வசித்து வந்தான். வீரசூர பராக்கிரமங்களிற் சிறந்த அந்த ராணுவுக்கு மூன்று புதல்வர்களும் ஒரு புதல்வியு முண்டு. புதல்வர் மூவரும் தந்தையைப்போலவே போர்வலியில் திறமை மிக்கவர்களாய்த் திகழ்ந்தனர். இராஜ புத்திரர்களுக்கு உரியதாகிய யுத்த நெறியிலே நல்ல பயிற்சி பெற்றனர்.

புதல்வி சந்திரா பதினன்கு வயது பூர்த்தியான கன்னிகை. அழகின் செழுமை கொண்ட அவளது மேனியில் பருவகால ஒளி மிளிர்ந்துகொண்டிருந்தது. அவள் ஒரு சிறந்த ரூபவதி என்ற செய்தி டில்லிச் சக்கரவர்த்தியின் அரண்மனை வரை எட்டி யிருந்தது. வீரத்திலும் அழகிலும் பேர்போனவர்கள் இராஜபுத்திர மாதர்கள் என்பது சரித்திரங் கண்ட உண்மை யல்லவா ?

ராணு தன் புதல்வியின் பால் அளவற்ற வாஞ்சை கொண்டிருந்தான். அவள் ஒரே பெண் என்ற காரணத்தால் மட்டும் அவன் அவளை அவ்வாறு நேசிக்கவில்லை. அவளது முகச்சாயல், அவளது குழந்தைப் பேச்சு, அவளது கபடமற்ற வீரஞ் செறிந்த நோக்கு எல்லாம் அவனைப் பூரிக்கச் செய்தன. புத்திரர்களைக் காட்டிலும் அவளாலேயே தனக்கு அதிக பெருமையுண்டு என்று எண்ணினன். அவளைப் பார்க்குந்தோறும் அவன் உள்ளம் கர்வத்தாற் பொங்கி யெழுந்தது.

இளமை முதற்கொண்டே சந்திராவுக்குத் தன் மூதாதைகளின் கதைகள் கேட்பதில் பிரிய மதிகம். இராஜ வம்சத்துப் பெண்கள் எவ்வாறு தங்கள் கணவன்மார்களுக்கு யுத்த காலங்களில் உதவி புரிந்தார்கள்? எவ்வாறு தங்கள் பதிவிரதா தர்மத்திற்குப் பங்கம் வாராது நடந்து கொண்டார்கள்?......என்று வருஞ் சரித்திரக் கதைகளை ஆவலோடு படிப்பாள்.

அரச குடும்பத்திலே பிறந்த அவளுக்குப் பூர்ணகல்வி புகட்ட வேண்டுமென்று இராம்சிங் கருதினன். தனக்குப் பின் அவளே தன் பதவியை



வகிக்க வேண்டுமென்பது அவன் விருப்பம். எனவே அதற்கேற்ற வகையில் அவள் பயிற்றப்பட வேண்டும் என்று எண்ணினன்.

சித்தூர் நகரத்தில் ஒரு வாலிபன், மணிசிங் என்னும் பெயரினன். அறிவிலும், ஆற்றலிலும் மிக்கவன் என யாவராலும் புகழப்பட்டான். யுத்த முறைகளில் அவனுக்கு நல்ல பயிற்சி யுண்டு. அபாய காலங்களில் தற்காப்புக்கான சில உபாயங்களையும் அவன் தெரிந்து வைத்திருந்தான். இராஜபுத்திரச் சரித்திரத்திலே அவனுக்கு நல்ல பழக்கமுண்டு. தன் நண்பர்களுக்குச் சில வீரர்களது கதைகளை அடிக்கடிச் சொல்லி இன்புறுவான். மேலும் மேலும் சரித்திர ஆராய்ச்சி செய்வதிலும், போர் நுட்பங்களை அறிவதிலுமே அவன் கவனம் செல்லலாயிற்று.

மணிசிங்கின் திறமையையும், அவனது உயரிய குணங்களையும் கேட்டறிந்த இராம்சிங், அவனே தன் மகளுக்கு ஏற்ற ஆசிரியனுவான் எனத் தீர்மானித்தான். அவ்வாறே சில தினங்களில் மணிசிங் சந்திராவுக்கு ஆசிரியனுக அமர்த்தப்பட்டான்.

மாளிகையிலுள்ளவர்களிடம் மணிசிங் தாராளமாய்ப் பழகி வந்தான். அந்தப்புர மாதர்களும் அவனிடம் விசுவாசமாக நடந்து கொண்டனர். மாளிகையில் அவ்வப்போது நடந்து வந்த விருந்துகளுக்கெல்லாம் அவனும் அழைக்கப்பட்டான். நாளடைவில் எவ்வித தங்கு தடையுமின்றி அந்தப்புரத்திற்குள் செல்லவும் அவனுக்கு அனுமதி கிடைத்தது. இதனுல் அவன் அடிக்கடி சந்திராவைச் சந்திக்கவும் அவளுடன் அதிக நேரம் வார்த்தையாடவும் நேரிட்டது.

மணிசிங்கின் வீரஞ்செறிந்த பார்வையும், கம்பீரமான பேச்சும், நேரிய சுபாவமும் சந்திராவுக்குப் பிடித்திருந்தன. எப்போதும் அவன் தன் சமீபத்திலிருக்கவே அவள் விரும்பினுள். அவன் தன்னருகி லில்லாதபோது அவளுக்குப் பொழுது போக்குவது மிகக் கஷ்டமா யிருந்தது.

இருவரும் தனித்திருக்கும் வேளைகளில் தன் இனியகுரலாற் காதல் ரசந்ததும்பும் கீதங்களை இசைக்கலானுள். அக் கீதங்களின் இடையிடையே மணிசிங்கின் அருங்குணங்கள் பல அடுக்கடுக்காய்த் தொடுக்கப்பட்டிருந்தன. மணிசிங் உணர்ச்சி வயப்பட்டவன்தான். அவளுடைய கானத்திலும், கீதத்திலும் அவன் தன் உள்ளத்தைப் பறிகொடுத்ததுண்டு. அவளது இளமையும் வளஞ்செறிந்த வனப்பும் ஒவ்வோர் சமயங்களில் அவனை நிலைகுலையச் செய்ததுண்டு. ஆனுலும் அவன் அந்த அளவோடு—அவளைப் பெறுமளவோடு திருப்தி யடைவதாயில்லை. அவனுடைய லட்சியமே வேறு. ஒரு பெரும்பதவியிலிருக்க அவனுள்ளம் அவாவுற்று நிற்கிறது. இந்த உல்லாச வாழ்வோடு தன் எதிர்கால வாழ்க்கைத் திட்டத்தை முடித்துக்கொள்ள அவனிருதயம் ஒப்பவில்லை. அவளது ஆசைப் பேச்சுகள் அவனை வெகுவாக எதுவும் செய்துவிட முடியவில்லை.

## II

ஒருதினம் ராணு மணிசிங்குடன் தன் அந்தரங்க அறையிற் பேசிக்கொண்டிருந்தான். அப்போது அவர்கள் பேச்சு சந்திராவின் மண விஷயத்தில் திரும்பியது.

“மணி! சந்திரா விடத்தில் நான் கொண்டிருக்கும் வாஞ்சை அள

வற்றதென்று உமக்குத் தெரியுமல்லவா ? என் குமாரர்களிடத்தில் கூட எனக் கவ்வளவு பற்றுதலில்லை. சந்திராவை என்னுயிருக் குயிராகப் பாவித்து வருகிறேன். இதற்கென்ன காரணம் தெரியுமா ?"

ஆசிரியன் ராணாவை வியப்போடு நோக்கினான். மீண்டும் ராணா "எங்கள் குடும்பத்திலே பிறப்புரிமையாக ஒருவித அடையாள முண்டு. எங்கள் குடும்பத்தவர்களில் யாரேனு மொரு நபருக்குத்தான் அந்த தெய்வப் பிரசாதம் கிடைக்கும். நெற்றியின் நடுவே கடுங்கோபத்துட னிருக்கும்போது ரோஜாமலர் போன்ற ஒரு வடு காணப்படும். அது சாதாரண சமயங்களில் யாருக்கும் புலப்படாது. ஒரு கணப்போதில் அது தோன்றி மறைவதற்குள், அந்த முகத்தில் ஒரு தெய்வஒளி வீசக் காணலாம். இந்த வடு பெற்றவர்களுக்கு இறைவனது அருள் பரிபூர்ணமாகக் கிடைத்திருக்கிறது என்பது எனது அபிப்பிராயம். என் தந்தைக்குப் பிறகு எனக் கந்தப்பாக்கியம் கிடைத்தது. எனக்குப் பின் என் கண்மணி சந்திரா அதைப் பெற்றிருக்கிறாள். இந்தக் காரணத்தால்தான் எனக்கு அவளிடத்திலே அவ்வளவு பற்றுதல் எனக்குப் பிறகு அவளே இச் சிற்றரசுக் குரியவள்..."

"வேந்தே ! குமாரர்கள்..........."

"ஆம். அவர்கள் ஆண்பிள்ளைகளாயினும் அந்த வரப்பிரசாதத்தைப் பெறவில்லையே ! என் செய்வது ? அவளுக்குத்தான் எல்லா பாக்கியங்களு முண்டு. ஆகவே அவளுக்கு விரோதமாக நான் எதுவும் செய்யத் துணியேன். அவள் உம்மையே மனமார நேசிக்கிறாள். இந் நாட்டிற்கே அரசியாகப் போகும் அவளை மணக்க உமக்கு யாதொரு ஆட்சேபனையு மிராதென் றெண்ணுகிறேன்."

மணிசிங் மௌனமா யிருந்தான். அவன் மனம் குழம்பி யிருந்தது. மன்னனது வார்த்தைகளை மறுத்துரைக்க அஞ்சி வாளா இருந்தான்.

## III

அரண்மனையில் சந்திராவின் விவாகத்திற்குரிய ஏற்பாடுகளனைத்தும் நடந்து கொண்டிருந்தன. முகூர்த்த தினம் நெருங்க நெருங்க பணியாளர்கள் தமக்கிடப்பட்ட வேலைகளை மிகத் துரிதமாகச் செய்து வந்தனர். அரண்மனை முழுதும் ஒரு நூதன அலங்காரத்துடன் விளங்கியது.

ஒரு நாளிரவு எங்கும் அமைதி நிலவியது. வானத்தில் வட்டநிலா காய்ந்து கொண்டிருந்தது. குளிர்ந்த அச் சந்திரிகை அந்தப்புரத்தில் சயனித்திருந்த சந்திராவைத் தூங்க முடியாமற் செய்துவிட்டது. தன்னை மீறி யெழுந்த மனோவேகத்துடன் படுக்கையினின்று மெழுந்து மாளிகையின் முன் மாடத்திற்கு வந்தான். முன் கட்டில் இரண்டாவ தறையில் மணிசிங் படுத்திருந்தான். அவனும் அப்போது உறங்கவில்லை. நடக்கவிருக்கும் தன் திருமணத்தைக் குறித்து ஏதேதோ எண்ணமிட்டுக் கொண்டிருந்தான். திடீரென அறைக்கதவு திறக்கப்படவே திடுக்குற்று வாயிற்புறமாக நோக்கினான். சந்திரா உள்ளே நுழைந்தாள். சாளரத்தின் வழியே வந்து கொண்டிருந்த நிலவொளியில் அவளொரு தேவகன்னிகை போல் காணப்பட்டாள். மணிசிங் அவளைக் கூர்ந்து நோக்கினான். அவளும் அவனைக் கடைக்கணித்தாள். அப்பால் அவன் தன்னையே மறந்து அவள் வசமானான்.



மறுநாள் ஆதித்தன் உதித்த பின்பே அவன் படுக்கையினின்று எழுந்தான். முதல் நாளிரவு நடந்தவை யாவும் அவன் நினைவிற்கு வந்தன. அவனுக்கு எல்லாம் வெறுப்பாகவே யிருந்தன. அரண்மனை வாழ்வு அவனுக்கு அடியோடு கசந்து விட்டது: அன்றிரவே அதை விட்டு வெளியேறத் தீர்மானித்தான். ஆனால் இதை எப்படி அந்தச் சுந்தராங்கி யிடத்தில் தெரிவிப்பது ? எனவே நள்ளிரவில் யாருமறியா வண்ணம் மாளிகையினின்றும் வெளியேறினான்.

சந்திரா முதலில் இதை நம்பவில்லை. ஆம், அவளது குழந்தையுள்ளம் எவ்வாறிதை நம்பும் ? ஆனால் பிறகு அவன் தன்னைக் கைவிட்டுச் சென்றது கேவலம் உண்மைதான் என்று அவள் கண்டபோது, ஆ ! அவள் நெஞ்சம் பட்ட பாடு, யாரே காணவல்லார் ? தன்னிரு கரங்களாலும் முகத்தை மூடிக்கொண்டு குழந்தை போல் தேம்பித் தேம்பியழலானாள்.

## 4

மணிசிங் மராட்டியத் தலைவனாகிய சிவாஜியின் படையிற் சேர்ந்தான். படிப்படியாக உயர்ந்து முடிவில் சேனாதிபதி உத்தியோகத்தைப் பெற்றான். அனேக யுத்தங்களில் வெற்றி பெற்றதால் அவனுக்கு நல்ல பேரும், புகழு முண்டாயின.

டில்லி சக்கரவர்த்தியாகிய ஔரங்கசீப் மராட்டியத் தலைவனின் பலத்தை யொடுக்கப் பலவிதங்களிலும் முயன்று வந்தான். ஒரு சமயம் ஷெயிஸ்டகான் என்ற தலைவன் வசம் ஒரு பெரிய படையை அனுப்பியிருந்தான். அவன் தன் சேனையுடன் புனாவில் ஒரு சத்திரத்தில் தங்கியிருந்தான். ஏற்ற தருணம் பார்த்திருந்து சிவாஜியைச் சிறை செய்துவிட வேண்டும் என்பது ஷெயிஸ்டகானுடைய எண்ணம். இதையறிந்த சிவாஜி ஒரு நாளிரவு சில வீரர்களுடன் மாறுவேடம் புனைந்து ஷெயிஸ்டகான் தங்கியிருந்த விடுதிக்குள் நுழைந்தார். அப்போது தன் அறையில் ஏதோ குழப்ப முண்டானதைக் கண்டு தலைவன் ஷெயிஸ்டகான் ஒரு சாளரத்தின் வழியே வெளியில் குதித் தோடிவிட்டான். அவனது வீரர்களிற் சிலர் கொல்லப்பட்டனர். சிலர் சிறைசெய்யப் பட்டனர். அவ்வாறு சிறைசெய்யப் பட்டவர்களில் பத்து வயது இளைஞனொருவ னிருந்தான்.

பலராம் என்ற அச்சிறுவன்மீது மணிசிங்குக்கு எக்காரணத்தாலோ அபார வாஞ்சை யேற்பட்டது. அவனை எப்போதும் தன்னருகிலேயே வைத்துக் கொண்டான்.

ஒருதினம் பலராமனுக்கும் வேறொரு இளைஞனுக்கும் ஏதோவொரு காரணம்பற்றி சண்டை யுண்டாயிற்று. அப்போது பலராமனுக்குக் கண்கள் சிவந்தன. மிக்க ஆத்திரத்துடன் தன் பகைவனைத் தாக்க ஓடினான். அதுகண்ட மணிசிங் சட்டென்று பாய்ந்து பலராமனைக் கட்டிப் பிடித்துக் கொண்டான். அப்போது அவன் தேகம் தீயைப்போல் கனன்றது. உடனே அவனைத் தன் பிடியினின்றும் விட்டுவிட்டு அவன் முகத்தை நோக்கினான் என்ன விந்தை ! அந்த தெய்வீக ரோஜா வடு அவன் நெற்றியின் மத்தியிலே ஒரு கணப்போது ஒளியுடன் தோன்றி மறைந்தது.

மணிசிங் அப்படியே திகைத்து நின்றுவிட்டான். அப்பால் அவனுக்

குச் சுயவுணர்ச்சி வந்தபோது அவனது உள்ளத் திரையில் ஏறக்குறைய பத்து ஆண்டுகளுக்கு முன்னே நடந்த சம்பவம் முழுதும் காட்சியளித்தது.

கீழ் அடிவானத்தில் பௌர்ணமி நிலா உதயமாகிக்கொண் டிருந்தது. சித்தூர் அரண்மனையில் இராஜகுமாரி கடைசியாகத் தன்னறைக்கு வந்து சென்றதை நினைவு கூர்ந்தான். வரம்பு மீறிய தன் செய்கையைக் குறித்துத் தன்னையே நொந்து கொண்டான். பிறகு ஒரு நீண்ட நெட்டுயிர்ப்புடன் பலராமனைப் பார்த்தான். அச்சிறுவனோ தன் சீற்றமெல்லாம் ஒருவாறு தணியப் பெற்றவனாய்த் தன் தலைவனிருந்த நிலைமையைக் கண்டு வியப்புற்று நின்றான். மணிசிங் அந்த இரவை மிகச் சிரமத்தோடு போக்கினான்.

மறுநாள் அதிகாலையில் சிவாஜியிடஞ் சென்று, பலராமனுடன் தன் சொந்தவூர் போய்வர அனுமதி பெற்றான். பின்னர் இளைஞனுடன் சித்தூரை நோக்கிப் பிரயாணமானான்.

5

தலை நகரைக் குறுகியதே மணிசிங் தன்னுருவத்தை மாற்றிக் கொண்டான். தட்டுமுட்டு சாமான்களை விற்பவன் போல வேடம் பூண்டான். பிறகு சிறுவனுடன் மாளிகையை நோக்கி நடந்தான்.

எப்படியோ அரண்மனை காவற் கூடங்களையெல்லாங் கடந்து சந்திராவின் எதிரிற் போய் நின்றான். மெலிந்து சோர்ந்திருந்த அவ்வாரணங்கைக் கண்டபோது அவன் விழிகளில் நீர் துளித்தது. அவள் உடம்பு துரும்பென இளைத்திருந்தும் அழகின் ஜீவகளை இன்னும் மாறாமல் அப்படியே யிருந்தது.

பலராமனைப்பற்றி வரலாறுகளைத் தானறிந்த மட்டுங் கூறி "அம்மா! ஒரு தினம் மாலை நேரம் இச்சிறுவனுக்கும் வேறொரு இளைஞனுக்கும் ஏதோ காரணத்தால் சண்டை யுண்டாயிற்று. அப்போது இவனுக்கு ரௌத்திராகாரமான கோப முண்டாகவே இவனது நெற்றியின் நடுவில் ஒரு ஒளி தோன்றி...... ........" என்று சொல்லி வரும்போது சந்திரா எழுந்தோடி "ஆ! என் செல்வமே!" என்று கூறி இளைஞனைத் தன்னிரு கரங்களாலும் தழுவி அவனது வெளுத்துச் சிவந்த கன்னங்களில் முத்தமிட்டாள். அந்த இன்பக் காட்சியில் மணிசிங் தன்னை மறந்து ஆனந்தக் கண்ணீர் பெருக்கினான். உடனே தன் உள்ள நெகிழ்வை மறைக்க வெண்ணி அவன் மறுபக்கந் திரும்பியதைச் சந்திரா பார்த்துவிட்டாள். அவன் உருவத் தோற்றத்தில் சமுசயங் கொண்டாள்.

"அடே! நீ யார்? உண்மையைச் சொல்" என்றாள் அதிகார தோரணையில்.

"நான்?............சந்திரா!.........ஐயோ! நான் ஒரு பெரும் பாதகன்!"......என்றான் கண்களில் துளித்த நீரைத் துடைத்துக்கொண்டே. சந்திராவின் கூரிய விழிகளுக்கு அவன் யாரென்று தெரிந்துவிட்டது. அவளால் தன்னைச் சமாளித்துக் கொள்ள முடியவில்லை. "ஆ! என் அன்பே!" எனக் கூறியவண்ணம் அவன்மீது சாய்ந்தாள்.

# "மணிமேகலை" ஆராய்ச்சி

R. V. இராமஸ்வாமி, B. A., B. L.

(Rights Reserved.)

(தொகுதி 22. பகுதி 11. 858-ம் பக்கத் தொடர்ச்சி.)

## நிதானங்களின் தோற்ற ஒடுக்கம்

மேற்கூறிய பன்னிரு நிதானங்களுள், பேதைமையிலிருந்து செய்கையும், செய்கையிலிருந்து உணர்ச்சியும், உணர்ச்சியிலிருந்து அருவுருவும், அருவுருவிலிருந்து வாயிலும், வாயிலிலிருந்து ஊறும், ஊறிலிருந்து நுகர்ச்சியும், நுகர்ச்சியிலிருந்து வேட்கையும், வேட்கையிலிருந்து பற்றும், பற்றிலிருந்து கருமத் தொகுதியும், கருமத் தொகுதியிலிருந்து வினைப்பயனும், அவ் வினைப்பயனால் பிணி, மூப்பு, சாக்காடு முதலிய துன்பங்களும் பிறந்திடும். பௌத்தர்கள் கூறும் நான்கு வகை வாய்மைகளில் இவை முதலிரண்டினைக் குறிக்கும். இவற்றுள் முறையே, பேதைமை மீளச் செய்கையும், அது மீள வுணர்ச்சியும் அது மீள அருவுருவும், அது மீள வாயிலும், அது மீள ஊறும், அது மீள நுகர்ச்சியும், அது மீள வேட்கையும், அது மீளப் பற்றும், அது மீளக் கருமத் தொகுதியும், அது மீளத் தோற்றமும், அது மீளப் பிறப்பும், அது மீளப் பிணி, மூப்புச் சாக்காடு, துன்பம் முதலிய எல்லாம் மீளும். இம் மீட்சி மூன்றாவது வாய்மையைக் கூறும்.

## (நான்கு கண்டங்கள்)

அறவணர், பேதைமையும் செய்கையுமாகிய இரண்டும் காரணங்களாக உள்ளமையின் அவற்றை முதற்கண்ட மென்றனர். உணர்ச்சி, அருவுரு, வாயில், ஊறு, நுகர்ச்சி முதலிய ஐந்தும், முற்கூறிய பேதைமை செய்கையென்று மிரண்டி னியல்பாற் பிறந்தனவாதலின் இரண்டாம் கண்ட மென்பாராயினர். வேட்கை, பற்று கருமத் தொகுதியாகிய மூன்றும் மேற்கூறிய நுகர்ச்சி யொழுக்கத்தின்கணுண்டாகும் குற்றமும், அதனாலுளவாகும் வினையுமாக இருத்தலின் மூன்றாங் கண்டமாகு மென்றனர். பிறப்பு பிணி மூப்புச் சாவு என மொழிந்திடுந் துன்பங்களிவை மேற்கூறிய வினைப் பயனாதலின், நான்காம் கண்டமென்று கூறினர்.

## (மூன்றாகிய சந்தியும் பிறப்பும் காலமும்)

கண்டங்களைக் கூட்டும் சந்தி வகைகள் மூன்றெனப்பட்டது. அவற்றுள் செய்கையும் உணர்வும் சேர்தல் முதற் சந்தி. நுகர்ச்சியும் வேட்கையும் கூடுதல் இரண்டாவது சந்தி. கருமத் தொகுதியும் தோற்றமும் சேர்வது மூன்றாஞ் சந்தி. வினைப்பயனுக்கொப்ப, மக்கள், தெய்வம், விலங்காகத் தோன்றும் மூன்று வகைப் பிறப்பினியல்பும் கூறப்படுதல் நூலில் பாக்கக் காண்க. பௌத்த சமயத்தவர்கள் கூறுகின்ற மூன்று காலங்களில், பேதை

மையும் செய்கையும் இறந்த காலத்தன. உணர்வு, அருவுரு, வாயில், ஊறு, நுகர்வு, வேட்கை, பற்றுபவம், தேற்ற மென்னு மிவை நிகழ்காலத்தன. பிறப்பு பிணி மூப்புச்சாவு முதலியன எதிர் காலத்தன.

### (குற்றம், வினை, பயன், வீடு முதலியன)

அவா, பற்று, பேதைமையாகிய இவை மூன்றும் குற்றமெனப்படும். பவமும் செய்கையும் வினையாகும். உணர்ச்சி, அருவுரு, வாயில், ஊறு, நுகர்ச்சி, பிறப்பு, மூப்புப்பிணி சாக்காடாகிய (வினைப்பயனுளாகிய) எழும் பயனாகும். நிலையாவெப் பொருளுக்கும் ஆன்மா விலையென இப்படி உணரு மிவை வீட்டியல்பாம். உணர்வு, அருவுரு, ஊறு, நுகர்வு, பிறப்பு, பிணி, மூப்பு, சாவு முதலியன துக்கமெனப்படும். அந் நோயினுக்குப் பேதைமை, செய்கை, அவா, பற்று, கருமத் தொகுதி இவை ஐந்தும் காரணமாகும். ஆகலின் தோன்றுதல் துன்பம். அத் துன்பம் பிறத்தற்குப் பற்றே காரணம். நித்திய இன்பம் வீடெனப் படும். அதற்குக் காரணம் பற்றின்மையே. இந் நான்குமே பௌத்தர்கள் கூறும் துக்கம்: துக்க நிவாரணம்! துக்கோற்பத்தி: துக்க நிவாரண மார்க்கம் என்ற வாய்மைகள் நான்காகும். இவற்றுள் முதல் மூன்றின் இயல்பு மேலே கூறப்பட்டுள்ளது. நான்காவது வாய்மையாகிய துக்க நிவாரண மார்க்கங்கள், நற்காட்சி, நல்லூற்றம், வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கடைபிடி, நல்லுளமாகிய எட்டுமென்பர். அறவணர் மாதவியைத் தவவாழ்க்கையுட் படுத்திய விடத்து,

''பிறந்தோர்உறுவது பெருகிய துன்பம்
பிறவார்உறுவது பெரும் பேரின்பம்
பற்றின் வருவது முன்னது பின்னது
அற்றோர்உறுவதறி''

கென அந் நான்கு வாய்மைகளையே கூறின ரென்பர். (2: 59-62) பிறந்தவர்களெவரும், பிணி பசி மூப்புத் துன்பங்களால் பாதிக்கப்பட்டு வருந்துவ ரென்பது சாதம். அங்ஙன முறுதற்குப் பற்றே காரணம். பிறவாதவர்களோ உலக மாயையிற் சிக்குண்டு வருந்தி இறவாத நற்பதவியைப் பெற்றுள்ளது பற்றித் துன்ப மென்பதை அணுவளவும் காணாது அழியாத இன்பத்தையே நுகருவர். அது பற்றற்றவர்களுக்கே உரிய பெரும் பாக்கியம். எம் மதங்களும் இக் கருத்துக்களையே கொண்டுள்ளன.

### (வினைப்பயன்

பிறவியை எடுத்த எவரும் இறந்து பிறந்து இன்னற் பட்டிராது என்றும் பிறவாத நற்பதவியை எய்துதற்காகிய சன்மார்க்க வழிகளைக் கூறுவதே எம் மதங்களும் கொண்டுள்ள முக்கிய நோக்கம். பிறந்தவரெவரும் இறக்குந் தருணத்தில் உடன் கொண்டு செல்லுவன ஒன்றுமில்லை. ஆயின் ஒருவன் செய்திடும் நல்வினையும் தீவினையுமே புலனுக்குப் புலப்படாது கரந்து உடனிருந்து, அவனை விடாது நிழலைப் போன்று பற்றித் தொடர்ந்தும் வருமெனக் கற்றறிந்தோராது நூற்களும், வேதாகமங்களும் கூறுகின்றன. அவரவர் செய்த புண்ணிய பாவத்தின் பலாபலன்களை அவரவர்களே அனுபவித்தல் வேண்டுமென்பர். தமிழ் மொழியில் மிகுந்த தொன்



மையுற்றதும் சிறந்த பழந்தமிழ் நூலுமாகிய தொல்காப்பியத்திலும் "வினையின் நீங்கிய விளங்கிய அறிவின் முனைவன்........" என உயிர்கள் வினைப்படியே பிறவிகளை அடைந்திடு மெனக் கூறப்படுதல் காண்க.

வெகு காலத்திற்கு முன்னிருந்த தமிழ் மக்கள் வினைப்பயனுக்கும் உயிர்ப் பிறவிக்குமுள்ள ஒற்றுமையை அறிந்திருந்தன ரென்பதைப் புலப்படுமாறு சாத்தனார்,

"இளமையு நில்லா யாக்கையு நில்லா
வளவிய வான்பெருஞ் செல்வமு நில்லா
புத்தே ளுலகம் புதல்வருந் தாரார்
மிக்க வறமே விழுத்துணை யாவது" (22:135-8)

என்று, விசாகை தருமதத்தனுக்குக் கூறுமிடத்திலும்; மீட்டும் கச்சிமாநகர் புக்க காதையில் மாசாத்துவானின் வாயிலாகவும் கூறியுள்ளனர். (28:98-9) வினைப்பயன் பெருகாது. சிறுகாது, முறை பிறழாது, மந்தையுட்கிடத்திய கன்று தன் தாயைத்தானே நாடிச் சென்றடைதலைப் போல, தன்னைப் போற்றிச். செய்தவனைத் தானே சென்றடைந்து, பலன்களைக் கொடுக்குமென்பர். தீவினை நல்வினை யென்பவை யாவை யென்பதை, புத்த மதத்தவரின் கருத்துப்படி சாத்தனார் விளக்கியுள்ளனர்.

### (தீவினை)

தீவினை செய்தவனைத் தீமையிலாழ்த்தி வருத்தும். அப் பயனை அடைந்தே கழிக்கவேண்டும். அதனைத் தடுத்து நிற்க எவருக்கும் எளிதாகாது.'' 'செய் தீவினை யிருக்கத் தெய்வத்தை நோவதால்' ஆவது ஒன்றுமில்லை யென்னுங் கருத்து விளங்க சாத்தனார்,

''தலைவன் காக்குந் தன்பொருட்டாகிய
வவல வெவ்வினை யென்போ ரறியார்.'' (21-63-4)

என்றனர். பல முகாந்தரங்களாலும் இவற்றின் உண்மையை ஆசிரியர் விளக்கிக் காட்டியுள்ளனர்.

''ஆருயிருண்ட தணங்கோ பேயோ'' (6:135)

என்று வினவிய புத்திரனை இழந்து வருந்தும் கோதமைக்குச் சம்பாபதி தெய்வம்,

''அணங்கும் பேயுமாருயிருண்ணா
ஊழ்வினை வந்திவனுயிருண்டு கழிந்தது''

எனக் கூறு நின்றது. மற்றும் சம்பாபதி தெய்வம்,

''ஐயமுண்டோ வாருயிர் போனாற்
செய்வினை மருங்கிற் சென்று பிறப்பெய்துத
லாங்கது கொணர்ந்து நின்னுறிடர்நீக்குத
லீங்கெனக்காவ தொன்றன்று'' (6-158-61)

எனக் கூறுவதும் நோக்குக. தீவினை [illegible] அவ் வினைக்கு ஏற்றவாறு அவனை வருத்[illegible]பதை, தோளும் [illegible] துன்

187535
187535

டித்து வேருகும்படி மடயனை வெட்டியதால் கழிந்த பிறவியில் இராகுலனு யிருந்த உதயகுமரனைத் திட்டி விட மென்ற பாம்பு தீண்டி யிறந்ததும்; அடுத்த பிறவியில் காஞ்சனன் வாளுக்கு இரையாகித் தோளும் தலையும் வேருகி மாண்டதும் ஆசிரியர் வெகு தெளிவாகக் கூறியுள்ளனர். இங்ஙனமே ஒற்றனென்று தனது விரோதியான சங்கமனை அரசனுல் கொல்லுவித்த தீவினையின் பயனுக அடுத்த பிறவியில் கோவலன் பழிக்குப் பாத்திரனுகிக் கொல்லப்பட்டனனென்று மதுராபதி தெய்வம் கூறியதாகக் கண்ணகி தெய்வம் கூறுவதும் காண்க. (கா-26.)

## (விதியின் விவேகம்)

விதியின் வேகத்தை உதய குமரனின் செயலால் சாத்தனுர் விரிவாகக் காட்டியுள்ளனர். அம்பலத்தில் தனக்கு உதய குமரனுல் உண்டாகக் கூடிய துன்பத்திலிருந்து தடைத்துக் கொள்ள மணிமேகலை தனது மந்திர பலத்தால் காய சண்டிகையின் உருவத்தைக்கொண்டு வெளிப்போந்து இளவரசுக்குத் தருமோபதேசம் செய்வாளாயினள். உதய குமரன் மணிமேகலையின் மாயச் செயல்களை உணரானுய்க் காமத்தீயினின்றும் தாவி மேலெழத் தெரியாது திகைத்து, இரவில் வந்து எவற்றையும் அறிந்து கொள்ளுவதாக எண்ணிப் போவானுயினன். இவையனைத்தையும் கண்டு நின்ற காஞ்சனன், தன் மனைவி யென நினைத்து மாறுவேடம் பூண்டிருந்த மணிமேகலையின் செயல்களைக் கண்டு அஞ்சி, கோப நெஞ்சினனுய் புற்றில் கிடக்கும் நாகம் போன்று, தனது மனைவியைக் காதலித்த கள்வன் இரவில் அங்கு வருவானென்று எண்ணி, அங்கோரிடத்தில் பதுங்கிக் கிடந்தனன். விதி வசப்பட்ட உதயகுமரன் உண்மை யொன்று மறியாது, துணையுமின்றி 'ஊர் துஞ்சுசாமத் தொரு தனி யெழுந்து' நடந்து சென்று நள்ளிர வென்றும் பாராது அம்பலத்தை வந்தடைந்தனன். (29:91-99) தனது எண்ணப் படியே நிகழ்ந்தது கண்டு, சீறியெழுந்து விரைந்து எதிர்வந்து காஞ்சனன் அவனது மணித்தோள்களைத் துணிய வீசி மாய்ப்பானுயினன். சீற்றங் கொண்டு அங்கி பொங்கும் நயனத்தொடு வாளுட னெழுந்த காஞ்சனனுக்குக் கந்திற்பாவை, ஊழ்வினைப் பயத்தால் உதயகுமரன் இறந்தனனுயினும்,

> "வெவ்வினை செய்தாய் விஞ்சைக்காஞ்சன
> வல்வினை நின்னையுமகலா தங்குறும்" (26:135-6)

என, வினைப்பயனை அவரவரே யடைதல் வேண்டுமென்பது தோன்றக் கூறியது. மீட்டும், மைந்த னிறந்ததையும் விதியின் பயனையும் அரசனிடம் கூறுமிடத்தும், முக்கால நிகழ்ச்சிகளையும் முன்னதாக அறிந்திடுமாற்றல் பெற்ற முனிவரின் வாயிலாக ஆசிரியர் விதியின் செயலை வியக்கக் கூறியிருக்கின்றனர். (22:193-203.)

## (நல்வினைப் பயன்)

நலம் பல விழைக்கும் நல்லறத்தைச் செய்தோர் நல்வினையை அடைந்திடுவர். நல்வினைப் பயத்தால் மேன்மை யுண்டாகு மென்ற உண்மையையும் சாத்தனுர் இந் நூலகத்துப் பல விடங்களிலும் காட்டியுள்ளனர். (11:105-6; 28;138-140.) கண்ணகித் தெய்வம் தனது நல்வினைப் பயனுல் தானும் தனது கணவனும் தேவர்களாயின விதம் கூறி மதுரையை எரித்த பாவப்பயனை இறுதியில் நுகர்ந்திடுதல் வேண்டு மென்றும்; பல



பிறவிகளும் தங்களுக் குண்டென்றும் கூறுதல் நோக்குக. சென்ற பிறவியில் அருந்தவ முனிவனுக்கு அமுதளித்த அறமே உடன் வந்து மணிமேகலையை அடுத்த பிறவியில் மேன்மையுறச் செய்த தென்பர். அங்ஙனமே உடன் பிறந்தோராயிருந்த கச்சய நகரத்து அரசனது மனைவியராயிருந்த தாரையும், வீரையும், அறவணர் மொழிப்படி பாதபங்கய மலைக்குச் சென்று தரிசித்துவந்த நற்பயனே பின் பிறவியில் மாதவியும் சுதமதியுமாகச் சோழ நாட்டிலே பிறந்து நல்வழிப்படுத்திய தென்றனர். வினைக்கு ஏற்றவாறு உயிரானது பிறவிகளை எவ் விடத்தாகிலுஞ் சென்று எடுத்திடு மென்றதன் உண்மையை மேற் காட்டிய செய்திகள் விளக்கிடும். பொய்யா மொழிப் புலவரும்,

> "ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
> சூழினுந் தான் முந்துறும்"

என்ற மெய்மொழியையும் இவற்ருேடு ஒப்பிட்டு நோக்குக.

## (கந்தம், வழக்கு, நயங்கள்)

கந்தம் ஐந்தாகுமென்று மேலே கூறப்பட்டது. அவை உருவு, நுகர்ச்சி, குறிப்பு, பாவனை, உள்ள அறிவு என்ற ஐந்தாம். இவற்றினைப் பஞ்சஸ்கந்த மென்றும், இவற்றின் கூட்டமே உயிரென்றும் கூறுவர். இவற்றின் இலங்கணைகளை நூலில் கண்டுகொள்க. ஆறு வகைப்பட்ட வழக்கென்றது தொகை, தொடர்ச்சி, தன்மை மிகுத்துரை, இயைந்துரை யென்ற நான்கொடும் சேர்ந்த உண்மை வழக்கு, இன்மை வழக்கு முதலியன. அவற்றுள் தொகைத் திறமாவது உடம்பு நீர் நாடு என்பன. அதாவது பலவகைப்பட்ட அணுக்களின் கூட்டம் உடம்பென்றும், பல துளிகளின் திரட்சி நீரென்பதும், பல ஊர்களின் தொகுதி நாடென்பதும் போல, ஐந்து வகைப்பட்ட கந்தங்களின் கூட்டமே ஆத்துமாவாகு மென வழங்குவது.

தொடர்ச்சியாவது, வித்திலிருந்து முளையும் பின் நெல்லும் வந்த தென்பதைப் போல் ஒரு காரணத்தின் அடியாக வொரு காரியம் பிறந்திடு மென்ற சம்பந்தம் கூறுவது. தன்மை மிகுத்துரையாவது: இறப்பு பிறப்பு மூப்பு என்ற மூன்றினுள் ஒரு பொருளை மிகுத்து உரைப்பது. இயைந்துரை யென்பது எழுத்துப் பல கூடச் சொல்லெனத் தோற்றும். பல நாட் கூடிய எல்லையைத் திங்களென்று வழங்குதலுமாகும். இவை யாவையும் சிவஞான சித்தியார், சௌத்திராந்திகன் மதத்தில் விளக்கமாக உள்ளது காண்க. மற்றும் வழக்குகளைப் பற்றி யுள்ளனவற்றை விவரமாக நூலில் காண்க. (30:208-16.) நயங்கள் ஒற்றுமை, வேற்றுமை, புரிவின்மை, இயல்பு என்று நான்கு வகைப்படும். அவற்றினை ஆசிரியர் விளக்கிக் கூறுவது நூலில் கண்டிடுக. (30:217-34.)

## (விடைகள்)

விடைகள் நான்கு வகைப்படு மென்றனர். அவை துணிந்து சொல்லல், கூறிட்டு மொழிதல், வினுவின் விடுத்தல், வாய்வாளாமை யென்பன. தோன்றியது கெடுமோ கெடாதோ வென்ருல் கேடுண்டென்பது துணிந்து சொல்லல். செத்தான் பிறப்பனே பிறவானே என்று செப்பில், "பற்றிறந்

தானேவன் மகனே வெனல்" கூறிட்டு மொழிதல். முட்டை முந்திற்றோ பனை முந்திற்றோவெனக் கட்டுரை செய்யென்றால் எம் முட்டைக் கெப்பனை யென்றல் வினாவின் விடுத்தல். ஆகாயப்பூ பழயதோ புதிதோவென்று புகலுவானுரைக்கு மாற்ற முரையாதிருத்தல் வாய் வாளாமை. தொல்காப்பிய உரையிலும் இவ்விடை வகைகள் நான்கும் கூறப்படுதல் நோக்குக.

(இளவி. 13.)

## (பாவனைகள்)

அறவணவடிகள் பௌத்த மதத்தவரின் கொள்கைகள் யாவும் மணிமேகலைக்குக் கூறியபின்னர் முடிவாக, மேற்கூறி வந்த பொருள்கள் யாவற்றிற்கும், காமம், வெகுளி, மயக்கமென்னும் முக் குறும்புகளும் காரணமாகு மென்றனர். திருக்குறளும் இக் கருத்தையே கூறுதல் நோக்கற்பாலது. (360) இவற்றைக் கொண்டோர் துன்பத்திற்கே உரியவர்களாகிப் பிறந்து இறப்பரென்றார். இவை யெல்லாம் சிந்தித்து உணர்ந்து அறிந்து தெளிந்து பற்றறுத்திட்டு முன்னேறுதற்கு, சிநேக தருமத்தைப் போற்றி நிற்கும் மைத்திரீ பாவனையும், மன்னுயிருக்கிரங்கும் கருணைபாவனையும், உண்மையறிந்து கொள்ளும் சந்தோஷத்தால் உண்டாகும் களிப்புடைய முதிதபாவனையும், உடலின் அசுத்தங்களை உணர்ந்திடும் அசுபபாவனையும், சமபார்வையோடு இருந்திடும் உபேக்ஷா பாவனையும் உரியவைகளாகு மென்றார். அசுபபாவனையால் காமத்தையும், முதலுள்ள இரண்டு பாவனைகளால் செற்றத்தையும், எஞ்சியவற்றால் மயக்கத்தையும் தீர்த்திட்டு மனவிருள் நீக்கிடவேண்டு மென்றனர்.

## (பற்றை நீக்கல்)

நற்பதவியை அடைதற்குச் சாதகமாக உள்ள தொன்றாகிய அசுபபாவனையின்படி, இச்சதமற்ற உடலைத் துரும்பினும் எளிதாகக் கருதிட வேண்டுமாகலின் இவ்வுடலின் தன்மையை அடுத்தடுத்தும் இழிவுபடுத்தி ஆசிரியர் கூறா நிற்கின்றனர். இவ்வுலகில் உயிர்களுறும் வாழ்வு காட்டாற்றில் கிடத்திய மரக்கலத்தைப் போன்றது. அது நன்னிலை நாடி உற்ற வழிச்சென்று துறைமுகத்தைக் காணினும் காணும். அன்றி இடையிடையே கிடக்கும் துன்பமென்னும் பாறைகளில் மோதுண்டு நிலைகுலைந்து தவித்து நிற்பினும் நிற்கும். இவை யனைத்தும் ஊழின் பயனாகும். "திரைகடலோடி திரவியம் தேடி"னும், அது இவ்வெண்சாணுடம்பிற்கு உணவளிக்கவே யாகும். "யோசிக்கும் வேளையில் எல்லாம் பசிதீர உண்பதும் உறங்குவதுமாக" முடியும்; என்ற இக் கருத்துகளை விளக்கவே சாத்தனாரும் "மக்கள் யாக்கை யுணவின் பிண்டம்" என்றனர். (10: 90) காமப் பரவசனாகி, மணிமேகலையை நாடி, உவவனத்திற்கு ஓடிவந்த சிற்றரசனுக்குச் சுதமதி, இவ் வியாக்கையின் இழிவு தோன்றவும், உள்ள வரையில் உகந்த செய்கைகளைச் செய்திடுகவெனத் தூண்டுதற் கெனவும்;

"வினையின் வந்தது வினைக்கு விளைவாயது
புனைவன நீங்கிற் புலால் புறத்திடுவது
மூப்புவிளி வுடையது தீப்பிணி யிருக்கை
பற்றின் பற்றிடங் குற்றக் கொள்கலம்
புற்றடங் கரவிற் செற்றச் சேக்கை



யவலக்கவலை கையா றழுங்க
றவளா வுள்ளந்தன் பாலுடையது
மக்கள் யாக்கை யிது................" (4: 113-20)

எனக் கூறியதாகவும், மற்று மிக் கருத்தையே மணிமேகலை உதயகுமரன், தான் தவக்கோலம் கொண்டதற்குக் காரணம் வினவியதற்குப் பதிலாக "மக்கள் யாக்கை, பிறத்தலும் மூத்தலும் பிணிபட்டிரங்கலு மிறத்தலுமுடையது; இது இடும்பைக் கொள்கலம்" என உணர்ந்து, தான் மிக்க நல்லறம் செய்தலை விரும்பியதாகக் கூறியதாகவும் சாத்தனார் கூறி யுள்ளனர். (18. 136-9.)

இந்நாறுடலின் இயற்கைச் சுபாவம் தோன்ற,

"என்புந் தடியு முதிரமு யாக்கையென்
றன்புறுமாக் கட்கறியச் சாற்றி
வழுவொடு கிடந்த புழுவூண் பிண்டத்
தலத்தக மூட்டியவடி நரிவாய்க் கொண்
டுலப்பி லின்பமோ டுளைக்கும்." (6: 107-11);

கடகஞ் செறிந்த கைகளை நாய்களும்; பஞ்சணையிற் படுத்து அன்போடு 'என' தென்றும் 'தன'தென்றும் நினைந்திருந்த தலையைக் குடைந்து நிணவாய்க் கழுகுகளும் கவ்வித் தின்னு மென்பதைக் காட்டி யுள்ளனர். இது பற்றி யன்றோ 'எரியும், புழுவும், மண்ணும், பருந்தும், நரியும், புள்ளும், தனக்கென்று காத்திருக்கும் இந்த நாறுடலைப் பிரியமுடன் வளர்த்தியதை' நொந்து பெரியோர் நெஞ்சமொடு புலம்பா நிற்கின்றனர்.

இழிந்த இவ்வுடம்பின் இயல்பை உணர்ந்த பெரியோ ரெவரும் இதனைப் போஷியார். இவனைத் துரும்பெனத் துணிந்து, இது நீர்க்குமிழியின் தன்மையதெனத் தேர்ந்து நிற்பர். ஆயின் மற்றோர்களோ போஷிப்பர் என்பது தோன்றவோ; ஐயறிவினவான ஜீவன்களே உண்மை யறியாது 'என' தென்றும் 'தன'தென்றும் கூறாநிற்கு மென்பதைக் குறிக்கவோ அன்றி ஆறறிவு கொண்டோரும் ஐயறிவினவற்றின் குணங்களையே கொண்டு நடத்தலின் இழிவைக் காட்டவோ; யாது பற்றியோ, ஐம்புல வுணர்ச்சியேயன்றி மனவுணர்ச்சி யில்லாத, (தொல்-மரபு-32) "மாக்கள்" என யாக்கையின் இழிவு கூறும் மேலுள்ள அடியில் கூறி யுள்ளனர். அழியுந் தன்மையதாகிய இவ்வுடல் வினைப்பயனால், பவசாகரத் துட்பட்டு, பிறவிகளை அடுத்தடுத்தும் எடுத்தலை நாடகமொன்றில் நடிப்பவர்கள் மாறி மாறி வருதற்கு நிகராக்கிக் கூறி ஆசிரியர், அநித்தியத் தன்மையை விளக்கவேண்டி,

"பழவினைப் பயனீப ரியலென் றெழுந்தே
றாடுங் கூத்திய ரணியேபோல
வெற்றோ ரணியொடு வந்தீரோ." (12-50-2.)

என்றனர். இக் கருத்தே சிலப்பதிகாரத்தும் உள்ளது காண்பதற் குரியது. (28: 165) பிறத்தலும் இறத்தலும், பிணிபட்டுழலலும் தனது தொழிலாகக் கொண்ட இப் பொய்யுடலை மெய்யானதெனக் கொண்டுள்ள உதயகுமரனை

நல்வழிப்படுத்த வேண்டியே மணிமேகலை, அவனுக்கு நரை மூதாட்டியொருத்தியைக் காட்டி, முதுமையி னிழிவையும் இளமையின் நிலையில்லாமையையும் இடித்துக் கூறி (19: 40-49) "புனைவன நீங்கிற் புலால் புறத்திடு" மிவ்வுடலினை மதியாதிருந்து விதியை வெல்லுமாறு கூறுகின்றனர்.

## (பௌத்தரின் சில கோள்கைகள்)

காலத்தின் கோலத்தை நன்கு உணர்ந்தவராகலின் சாத்தனார், பௌத்த மதத்தவர்களிடத்துப் பொதுவாகவன்றிச் சிறப்பாகக் காணக்கூடிய சில பழக்கங்களையும் குறித்துள்ளனர். தவசிகளின் பாதத்தைப் பஞ்சசீலத்தையுடைய உபாசகர்கள் கழுவி உபசரிப்பரென்பது (28-11-12) மணிமேகலையில் பல விடங்களிலும் கூறப்பட்டுள்ளன. பௌத்தர் தமது எதிர்ப்பட்டோரை வாய் திறவாது கையசைத்து விலகச் செய்வரென்பது கூறப்பட்டுள்ளது (16-10). சமணர்களும் இவ்வாறே செய்வரென்பதும் குறிக்கப்பட்டுள்ளது (3: 101; 5. 55). பௌத்த சந்நியாசிகள் இல்லறத்தார்கள் யாவரும் உண்ட பின்னரே பகலில் உச்சிப்பொழுதில் வெளிப்போந்து பிச்சைக்குச் செல்ல வேண்டுமென்பது விதியாகலின் "கதிர்சுடு மமயத்து" (5: 60) "வெங்கதி ரமயத்து" (10: 27) "வெயில் விளங்க மயத்து" (11: 102) அங்கையிற் பாத்திரமேந்திப் பிச்சைக்குச் செல்லுவதாகவும் உள்ளது. பௌத்தரின் உடை, முனிவர்களின் உடைகளைப் போன்று மருதந்துவரில் தோய்க்கப்பட்டு மஞ்சள் நிறமுள்ளதாக இருந்தமையின் "பொன்னிற் றிகழும் பொல் பூவாடை" (5: 61) என்றனர். மக்களின் பிறப்பையும் இறப்பையும் பௌத்தர்கள் முறையே சூரியனுடைய உதயத்திற்கும் அஸ்தமனத்திற்கும் உவமையாகக் கூறுதல் மரபென்பது "காலை ஞாயிற்றுக் கதிர் போல் (9: 45) இராகுலன் தோன்றினன்" என்றும்; "இளைவள ஞாயிறு தோன்றிய" தென்ன புத்தன் தோன்றினன் என்றும் (10: 11) "குடதிசைச் சென்ற ஞாயிறு"போல (14: 100-1) ஆபுத்திரன் மணிபல்லவத்திடை மன்னுடம்பிட்டன னென்றும்; "தவயாக்கையோளுயினும் வீழ்கதிர் போன்றேன்" (24: 102) என அறவணர் கூறியதாலும்; "யாக்கை வீழ்கதிரென மறைந்திடுதல்" என (30: 103) கூறப்பட்டுள்ளதாலும் தெரிய வருகின்றது. தேவேந்திரன் தனது பாண்டுகம்பள நடுக்கத்தால் இவ்வுலகில் நிகழுவனவற்றை உணர்ந்து கொள்வன் நம்பி வந்தனர். ஆபுத்திரனின் தருமச் செயலை அமரர்கோன் தனது, "பாண்டு கம்பளந் துளக்கிய தாதலிற்" (14: 29) அறிந்தனன் என்பது இங்கு கூறப்பட்டுள்ளது. "இப்பூவுலகில் தானம் சீலம் முதலியவற்றிற் சிறந்த பௌத்தருளாரானல் அவர்களுக்கு ஏதேனும் துன்ப முளதானல் இந்திரனுடைய பாண்டுகம்பளம் நடுங்குமென்றும் அக் குறிப்பால் அவற்றை அறிந்து வந்து அவர்களுக்கு வேண்டிய வரங்களைக் கொடுத்தலும் தீங்குகளை ஒழித்தலும் இந்திரனுடைய கடப்பாடென்று தெரிகிறது. இவ் விஷயம் மணிமேகலையிலும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. (29: 13-26;.)

சாத்தனார் பௌத்தரானோர் அறத்தகை முதல்வனருளிய வாய்மைகளை யுணர்ந்து, அதன்படி ஒழுக முயலுவார்களாயின் அவர்கள் பற்றி நிற்க வேண்டிய நன்னெறி மார்க்கத்தை அங்கங்கே கூறுகின்றனர். (16: 115-8; 23: 131-9; 25: 40-50) அவர்கள் பற்றவேண்டிய அறமாவது.



"அறமெனப் படுவ தியாதெனக் கேட்பின்
மறவா திதுகேண் மன்னுயிர்க் கெல்லா
முண்டியு முடையு முறையுளு மல்லது
கண்டதில்.................." (25: 228.31)

எனச் சாத்தனார் கூறியுள்ளனர். நல்வினையாளர்கள் நித்யானந்தப் பதவியின் வழிகளைத் தேடிச் செல்லுகையில் ஒரோ விடத்து அறியாது வழுவுவார்களாயின், தெய்வம் அவர்களை முன்னேறச் செய்ய உற்ற மாசற்ற வழிகளைக் காட்டி கொடுத்தலோடு, தாமும் வந்து உதவுமென்பது ஆசிரியர் பல விடங்களிலும் மொழிந்துள்ளனர். மந்திரங் கொடுத்த காதையில் மணிபல்லவ தீவத்தில் மணிமேகலா தெய்வம், "உதயகுமரன் உன்னை விரும்பியவாறே உன் மனமும் அவனை நாடியதால், அப்பற்றை விலக்கி நல்லவழிப் படுத்தவே அறத்தின் வித்தாகிய உன்னை இங்கு கொணர்ந்தேன்" என்று கூறுவதாலும்; உதயகுமரன் வெட்டுண்டு இறந்தது கண்டு மனம் வருந்தி அழுது அவனை அண்டியவளை கந்திற்பாவை தெய்வம் தடுத்துப் "பிறவிப் பிணியை நீத்திட முயன்றுவரும் நீ உதயகுமரன் இறந்ததற்கு வருந்தற்க" எனக் கூறுவதாலும் இது விளங்கும். மணிமேகலையைப் போன்று பழம் பிறப்பை அறிதல் போன்ற அதிசயச் செயல்களை, பக்குவநிலை யடைந்த எவரும் பெற்றிடுவரென்பது பௌத்தர்களின் கருத்து. இயற்கை வனப்புகளை சிந்தித்தும், பலகாலம் பழகி வந்தும், வருந்தியும், அறிந்தும், கேட்டும், தெளிந்தும் உணர்ந்தவருக்கே தத்துவ விசாரணைகளை உள்ளவாறு அறிந்திடும் ஆற்றல் பிறந்திடு மென்பதை ஆசிரியர், அறவணர், மணிமேகலையால் சில நிகழ்ச்சிகள் நடக்குமென்றும் அவை நிகழ்ந்த பின்னரே தாம் கூறும் தத்துவத்தை மனதில் தரித்திடும் வன்மை பிறந்திடுமென்றும் கூறியதாலும். (11-கா) கந்திற்பாவை தெய்வம், பல பிறவிகளையும் எடுத்து ஆணாகப் பிறந்து தத்துவ ஆராய்ச்சி செய்திட்டு, மணிமேகலை புத்தனது முதல் மாணவனாகி இறுதியில் நிருவாண மடைவளெனக் கூறியதாலும் (21); கண்ணகி தெய்வம் "நிருவாணம் பலகாலத்திற்குப் பின்னர் அடைவோமாயினும் அதுகாறும் பல வகைப்பட்ட சித்திகளைச் செய்து கொண்டிருப்போ"மெனக் கூறியதாலும் விளக்குதல் காண்க.

மனமொழி மெய்களால் பரிசுத்தரா யிருந்து, தூய வழிகளை நாடி நின்று, பாசபந்தங்கள் பற்றுதொழிய பிறவிக்கடலில் மீண்டும் விழுந்து உழலாமலிருந்து கிடைத்தற்கரிய முத்தியங்கரை கிட்டுமாறு வீட்டின்பத்தைப் பெறவும், உலகுறு நாட்களில் பிணி மூப்போடு துன்பவலையுட் சிக்குண்டு மதிமயங்கி விதியை நொந்து விழியாதிருந்து இன்பமெய்தவும், பௌத்தர்கள் பற்றவேண்டிய சன்மார்க்கங்களைத் தெளிவுபட, இவண், கூறியுள்ள சாத்தனாரின் அறிவையும், மதப்பற்றையும், ஆற்றலையும் வியந்து கூறுதல் எங்ஙனம்! புத்தன் புகட்டிய தருமமாகிய அறநெறியின் பலதுறைகள் இன்னவையென விரித்துக் கூறியும்; நன்மை தீமைகள் இவை யென்பதைப் பிரித்துக் காட்டியும்; அவற்றினைச் செய்தலாற் பெறலாகும் பயன்கள் இவையென பரக்கக் கூறியும்; அளவில்லா ஆசைக்கு உறைவிடமாகிய மனதை நல்வழிப் படுத்தும் நூல் இம் "மணிமேகலை" என்பதில் தவறென்ன?

# சிகரெட்டுக் ‘கொள்ளி’

N. K. வெங்கடராமன்.

தென்னிந்தியாவின் நெற்களஞ்சியம் என்று அழியாப் புகழ் பெற்று விளங்கா நின்ற தஞ்சை ஜில்லாவிலே மகாதேவபுரம் என்னும் கிராமத்தில் வைதீகமே ஓர் அவதாரம் எடுத்தாற்போல் ஓர் கனபாடிகள் வசித்து வந்தார். அவர் வேத சாஸ்திரங்களை நன்றாக ஆராய்ந்தவர். ‘ஹரியும் சிவனும் ஒன்று அறியாதவன் வாயில் மண்ணு’ என்று அடிக்கடி அவ்வூர் மகாஜனங்களுக்கு அவர், உபதேசம் செய்து வந்தார். ஆகையால் அவரை நாம் ஏன் சிவ ராமகிருஷ்ண கனபாடிகள் என்று அழைக்கலாகாது? வைதீகத்தில் தனக்கு நிகரானவர் இவ் உலகத்தில் எவருமே இல்லையென்றும், லோக குரு சங்கராச்சாரியாரும் அஹோபில மட ஸ்வாமிகளும் தன்னிடத்தில் அந்த விஷயத்தில் பிச்சை எடுக்க வேண்டுமென்றும் நமது கனபாடிகள் பன்முறை அரிய பிரசங்கங்கள் செய்திருக்கிறார். இவரது தொழில் வைதீகத் தொழில்தான், அவர் எப்போதும் அஜீரணத்தினால் அவஸ்தைப் பட்டுக்கொண்டிருந்ததாக அறிந்தேன். அவ்வூர் எச்சிப்பாட்டி என்கிற லெக்ஷியம்மாள் சொல்லித்தான் எனக்குக் காரணம் தெரிந்தது. அவர் ஒவ்வொரு நாளும் பல விசேஷங்களில் ஈடுபடுவாராம்! பாவம் இவ்விதமாகக் கஷ்டப்பட்டு திரண்ட செல்வம் சேமித்தார்.

‘காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு’ என்பதற்கேற்ப, தனது ஒரே மைந்தனை மிகவும் செல்வமாகவும் அன்பாகவும் வளர்த்து வந்தார். கனபாடிகளின் மைந்தனின் பெயரை அறிய நீங்கள் ஆவலுடன் புத்தகத்தைக் கவனிக்கலாம். சிவ ராமகிருஷ்ண கனபாடிகளா ஏமாந்து போகிறவர்? ஹரிஹரன் என்ற நாமத்தை அக்குழந்தைக்கு, ஜனித்த க்ஷணமே தனது கொள்கைப்படி சூட்டினார். ஹரிஹரனுக்கு தக்க வயது வந்ததும் அக்கிராமத்திலுள்ள ஓர் ஆரம்ப பாடசாலையில் அவனைப் படிக்க வைத்தார். அப்பள்ளிக்கூடம் நடத்தப்பட்ட முறையைப்பற்றி நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. ஜியார்ஜ் பெர்னார்ட்ஷா என்னும் ஆங்கிலப் பெரியார் இப் பள்ளிக்கூடத்தைப் பார்த்த பிறகுதான், ஆரம்ப பள்ளிக்கூடங்களைப் பற்றி உயர்வாக அவரது புத்தகங்களில் எழுதியிருக்க வேண்டும். அப்பள்ளியிலேயே ஐந்தாவது வகுப்புவரை படித்த பிறகு ஹரிஹரனுக்கு தனது தொழிலையே கற்பிக்காமல் மேல் நாட்டுக் கல்வியைக் கற்பிக்க கனபாடிகள் ஆவல் கொண்டார்.

தஞ்சையில் S. S. L. C. வரையில் ஹரிஹரனைப் படிக்க வைத்தார். அவன் நாம் நமது தேச சரித்திரத்தில் வாசித்த கஜினி முகமதைப் போல் எவ்வளவோ முறை, மனத்தளர்ச்சி இல்லாமலும், விடா முயற்சியுடனும், எஸ். எஸ். எல். ஸி. பரீக்ஷையைப் படையெடுத்து அதில் வேறு படையெடுப்பில் தட்டுத் தடுமாறி, மிகவும் கஷ்டத்துடன் அதை வென்றான்.



கனபாடிகளின் ஆனந்தத்திற்கு கங்கு கரையில்லை. இன்னும், தான் அரும் பாடுபட்டு ஈட்டிய பொருளை தனது குமாரன் கலாசாலைப் படிப்பிற்கும் செலவழிக்க ஆசையுற்றார். எப்படியாவது அவனை M. A. வரையில் படிக்க வைத்தால், பெரிய உத்தியோகம் கிடைக்கும் என்றும் அதனால் அவன் படிப்பிற்கு செலவழித்த பொருளை வெகு சீக்கிரத்தில் வட்டியும் முதலுடன் சேர்த்து சம்பாதிக்கலாம் என்றும் மனக்கோட்டை கட்டுவது எல்லாருக்கும் சகஜமே. முடிவில் ஹரிஹரனை திருச்சியில் நேஷனல் கலாசாலையில் சேர்த்தார். அவன் அங்கு இருந்து வாசிக்கத் தகுந்த ஏற்பாடுகள் செய்துவிட்டு அநேக புத்திமதிகளையும் கூறிவிட்டு செலவான தொகையை எண்ணி எண்ணி வருந்திக் கொண்டே கிராமத்தை அடைந்தார்.

நமது ஹரிஹரனுக்கு அனேக சிநேகிதர்கள் ஏற்பட்டார்கள். அவன் அவர்களுக்கும் தனக்கும் நடை உடை பாவனைகளில் அதிக தாரதம்மியம் இருப்பதைக் கண்டான். கோவணம் கட்டாத ஊரில் கோவணம் கட்டினவன் பைத்தியக்காரன் என்பது போல், ஹரிஹரனை, அவனது சிநேகிதர்கள், ‘கண்டிரி புரூட்’ என்றும் ‘ஸொஸைட்டிக்கு லாயக் கற்றவன்’ என்றும் ‘நாட்டான்’ என்றும் அடிக்கடி ஏளனம் செய்வார்கள். வெகு நாளாக அவர்களது ஸொஸைட்டிக்கு லாயக் கற்றவனாக இருந்த நமது இளம் கனபாடிகள், முடிவில் அவர்களுடைய வலையில் சிக்குண்டான். அவர்களுடைய பழக்க வழக்கங்களை, சிறு அணுவேனும் விடாமல் அப்படியே அவர்கள் உத்தரவின்னியில் காப்பி அடித்து விட்டான்.

சுருங்கச் சொல்லில் அவனது புதிய நண்பர்கள் நால்வர் (அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகரைப் போல). அவர்கள் தான்,

1. கோல்டு பிலேக் சிகரெட் துரையார்.
2. பட்டிணம் ஷண்முகம் பொடியார்.
3. பிரம்ம பத்திரமான சிவபுரி புகையிலை.
4. குட்டை ராமாயண இதிகாசத்தார்.

இவர்களை நண்பர்களாகக் கொண்ட ஹரிஹரனின் பாக்கியமே பாக்கியம்— என்ன அதிர்ஷ்டம்! இது தான் உண்மையான கலாசாலைப் படிப்பு; இதில் இவன் 3 மாதங்களுக்குள்ளே M. A. பாஸ் செய்துவிட்டான். அவன் கலாசாலையில் எவ்விதம் படிப்பிற் தேர்ச்சியடைந்து வந்தான் என்று என்னை ஒன்றும் கேட்காதீர்கள். அவன் கலாசாலை விலாசமும் எந்த வருஷத்தில் வாசித்தான் என்பதற்கும் நான் குறிப்புகள் எழுதினால் கலாசாலைப் பிரின்சிபாலைக் கேட்டு தெரிந்து கொள்ளுங்கள்—அவனது செலவிற்குப் பணம் இல்லாத போது, தன் தகப்பனாருக்கு முக்கியமான புத்தகம் வாங்க வேண்டும்; உடனே மறு தபாலில் 5 ரூபாய் கட்டாயம் மணியார்டர் செய் என்று எழுதிவிடுவான். நானும் இந்த விஷயத்தில் மிகவும் ஈடுபட்டு எனது பெற்றோர்களை ஏமாற்றி காசு கறந்தவன்.

கிறிஸ்துமஸ் விடுமுறை நாட்களுக்கு ஊருக்கு வரும்படி கனபாடிகள் ஹரிஹரனுக்கு எழுதினர். கடிதத்தைக் கண்ட நமது ஹரிஹரன் முகம் எப்படி இருந்தது என்று எனக்கும் தெரியும். ஆனால் ஓவிய மெழுதுவோருக்கு என்னை விட அதிகமாகத் தெரியும். என்ன செய்வது என்று திகைத்

தேன். எப்படியாவது போய்த்தான் ஆக வேண்டுமென்று ஒரு சிமிட்டா பொடியைப் போட்டுக் கொண்டு சிகரெட்டை வாயிற் பிடித்துக் கொண்டு யோசித்தேன். கிராமத்திற்கு போகாவிட்டால், பணக் கஷ்டம் உண்டாவது நிச்சயம் என்பதை உணர்ந்த ஹரிஹரன் தன் தந்தையான வைதீகப் பிச்சு, இவற்றையெல்லாம் கண்டால் ஜாதிப் பிரஷ்டம் செய்தாலும் செய்து விடுவார் என்று அச்சங் கொண்டான். ஆனாலோ, சிகரெட் இல்லாமல் ஒரு மணி நேரமாவது இருக்க முடியாதே என்று வருந்தி 'எதுவரினும் வருக' என்பதை நினைந்து அவருக்குத் தெரியாமல் எப்படியாவது உபயோகித்துக் கொள்ளலாமென்று தைரியம் கொண்டான். தன் கிராமத்தில் குதிரைக் கொம்பாகிய கோல்டு பிலேக் சிகரெடு டின் ஒன்றும், ஷண்முகம் பட்டணம் பொடி 1 சேரும் வாங்கி தன் சூட் கேஸில் பத்திரம் செய்து விடுமுறை நாட்களில் படிக்கும் நாவல் புத்தகங்களை சுமப்பது போல் அப்பெட்டியை கூலியினிடம் கூட கொடுக்காமல் தானே ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து $\frac{1}{2}$ மையில் தூரத்திலுள்ள தன் வீட்டிற்குச் சுமந்தான்.

கனபாடிகளோ ஹரிஹரன் வந்தவுடன் 'இங்கிலீஷ் ஸப்ஜெட்டில், இந்தப் பரீக்ஷையில் நன்றாக எழுதியிருக்கிறாயா? என்ன மார்க்குகள் கிடைக்கும்? என்று சாமாரியாக மேலும் மேலும் அநேக கேள்விகளைக் கேட்டார். இந்த சாப்பாட்டு கனபாடிகளுக்கா சமாதானமும் சந்தோஷமும் உண்டாகும்படி நம் ஹரிஹரன் பதில் சொல்லத் தெரியாமல் திகைப்பான்?

சிவ ராமகிருஷ்ண கனபாடிகள், ஹரிஹரன் ஊருக்கு வந்த மூன்றாவது நாள் காலை ஹரிஹரனைக் கூப்பிட்டு 'ஏண்டா நீ திருச்சியில் தினம் இரண்டு வேளைகளிலும் சந்தியாவந்தனம் செய்து வந்தாயா?' என்றார். சந்தியாவந்தனம் பலம் என்ன விலை என்று கேட்கும் நம் ஹரிஹரன் தந்தையின் வினாவிற்கு தக்ஷணமே 'என்ன காரியமிருந்தாலும், அதைச் செவ்வனே செய்துவிட்டுத் தான் மறுவேலை' என்று விடையளித்தான்.

கனபாடிகள் தன் குமாரனைப் பற்றி வெகுவாக அக்கிரகாரத்தில் பேசி ஆனந்த மடைந்தார் என்பதை பத்திரிக்கை நிருபரான எச்சுப்பாட்டி வேம்பு சாஸ்திரிகளிடம் சொல்லிக்கொண் டிருந்தாளாம். அதைப்பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது.

ஒரு நாள் சாயங்காலத்தில் சிவ ராமகிருஷ்ண கனபாடிகள் ருத்திராக்ஷப் பூனையைப் போல், விபூதியை பட்டை பட்டையாகத் தரித்தும் ருத்திராக்ஷ மாலை ஒன்று அணிந்தும் தன் சிநேகிதர்களான வேம்பு சாஸ்திரிகள், கிருஷ்ண ஜோஸ்யர் இவர்களுடன் அவ்வூர் ஆற்றங்கரையில் வந்து கொண்டிருந்தார். சிறிது தூரத்தில் நாலைந்து பேர்வழிகள் உட்கார்ந்திருப்பதையும் அங்கே புகை கிளம்பிக்கொண்டிருப்பதையுங் கண்ட நம் கனபாடிகள் கூட்டமா அங்கு ஏதோ விசேஷம் நடக்கிறது, ஹோமம் வளர்க்கிறார்களென்று தக்ஷிணை பெற அவ்விடத்தை நோக்கி ஓட்டம் பிடிக்காமலிருக்கும்?

முதன் முதலில் தக்ஷிணை அடைய குடல் தெறிக்க ஓடிவந்த நமது கனபாடிகள், அதில் யாரையோ உற்று நோக்கினார். அவரது முகம் கோபக் குறி யடைந்தது. அப்பொழுது தான் அவ்விடத்தை அடைந்த மற்ற சாஸ்திரியும் ஜோஸ்யரும் ஐயனார் கோவில் சிலைகளைப் போல் நின்றுவிட்டார்கள்.



அதுவரையில இவாகளைக் கவனிக்காத புகைக் கூட்டத்தார் அவர்களை, புகையால் இன்னார் என்று தெரிந்துகொள்ள முடியாமல் தங்கள் தங்கள் வாயிலிருந்த சிகரெட்டை எடுத்து கைகளில் மறைத்துக் கொண்டார்கள்.

கனபாடிகள் முன்னிலும் கோபமடைந்து 'டேய் எழுந்திருடா' என்று அதில் ஒருவனைச் சுட்டிக் காட்டினார்.

நம்மை நன்றாக பார்த்து விட்டார் என்று அச்சமடைந்த ஹரிஹரன் வலது கையிலுள்ள சிகரெட்டை தன் இடது கையில் வாங்கி தன் முதுகு புறமாக மறைத்துக் கொண்டு எழுந்தான்.

'கழுதை, இடது கையில் என்னடா அது'

இடது கையிலுள்ளதை பின்புறமாகவே வலது கையில் வாங்கி இடது கையைக் காட்டி 'ஒன்றுமில்லை யப்பா' என்றான் நடுக்கத்துடன் ஹரிஹரன்.

'தடிக் கட்டாலே போக வலது கையில் என்னடா?'

வலது கையிலுள்ளதை இடது கையில் பின்புறமாகவே வாங்கி, 'வலது கையில் ஒன்றுமில்லை யப்பா'

கோபம் அதிகம் அடைந்த கனபாடிகளின் கண்கள் சிவந்தன; புருவங்கள் துடித்தன.

'டேய் ஹரிஹரா, இரண்டு கைகளையும் காண்பியடா'

பார்த்தான் ஹரிஹரன், 'இவர் பெரிய கட்டுப் பொட்டியாக இருக்கிறார். இந்தக் காலத்து மாணவர்களின் சமாச்சாரம் இன்னும் தெரியவில்லை. நான் இவருக்கு கொஞ்சம் கௌரவமும் மதிப்பும் கொடுப்போமென்றால் அவைகளை அவரே குறைத்துக் கொள்ளுகிறாரே. சரி இனிமேலென்ன. 'தலைக்கு மேல் வெள்ளம். அங்குலம் வந்தாலென்ன அடி வந்தாலென்ன' இதுதான் தக்க சமயம்; அவருக்குத் தகுந்த புத்தி கற்பிக்க நான் சிகரெட்டை மரியாதைக்கு மறைத்துக் கொண்டால் அவரே அதை அம்பலத்தில் கொண்டுவரச் செய்கிறாரே என்று சிகரெட்டை வாயில் வைத்து புகை உண்டாக்கி இரண்டு கைகளையும் நன்றாக காண்பித்து 'ஒன்றுமில்லை யப்பா, இப்பொழுது சந்தேகம் நிவர்த்தியாச் சொன்னேன்' என்றான்.

அதைக் கண்ட மற்ற சாஸ்திரிகள், காலத்திற்கு தகுந்த கோலம் என்று சொல்லிக் கொண்டே இங்கிருந்தால் இனிமேல் ஹரிஹரன் நம்மையும் அடித்தாலும் அடிப்பான் என்று அக்கிரகாரத்தை நோக்கி ஓட்டமும் நடையுமாகச் சென்றார்.

கனபாடிகளின் நிலைமை அப்பொழுது எவ்வாறிருக்கும். அந்தோ பரிதாபம்!

'அடே குலத்தைக் கெடுக்க வந்த கோடாரிக் காம்பே; இக்காலத்து படிப்பின் பலனோ இது' என்று அவனைத் திட்டி, தன் சொந்த குழந்தையாதலால் சாபங்கள் கொடுக்காமலும் அக்கிரகாரத்தார் அனைவரும் நம்மை ஏளனஞ் செய்யவும் தம் தூய்மையான வைதீகத்திற்கு, வாழைப் பழத்தில் ஊசியை ஏற்றுவது போல், சிகரெட்டினால் கொள்ளிவைத்த ஹரிஹரனை எவ்வாறு கண்டிப்பது என்று நினைத்துக் கொண்டே வீட்டை நோக்கினார். கதிரவனும் கனபாடிகளின் நிலைமையைக் கண்டு வருந்தி துக்க சாகரத்தில் வீழ்வது போல் மேற்குக் கடலில் ஆழ்ந்தான்.

# அறப்பளீசுர சதகம்

(K. V. சிவசுப்பிரமணியன் B. A.)

சதகமாவது தமிழிலக்கியங்களிலுள்ள தொண்ணூற்றாறு பிரபந்தங்களுள் ஒன்று. அகப்பொருள் ஒன்றன் மேலாவது, புறப்பொருள் ஒன்றன் மேலாவது நூறு செய்யுள் கற்பித்துக் கூறுதல் இதன் இலக்கணம். அகப்பொருளாவது உருவும் திருவும் குணமும் குலமும் நலமும் ஒத்த தலைவனும் தலைவியும் அனுபவிக்கும் காமவின்பம். ஏனைய புறப்பொருளின் பாற்படும். பெரும்பாலும் சதகங்களில் பலவகை நீதிகளும் மற்றும் பலவகை இயல்புகளும் கூறப்படும். ஆகையால் அவற்றை புறப்பொருளின் மேற் கூறியதாகக் கொள்ளவேண்டும்.

> விளையு மொரு பொருண் மேலொரு நூறு
> தழைய வுரைத்தல் சதக மென்ப.

என்பது இலக்கண விளக்கச் சூத்திரம். சதம் என்பது நூறு என்னுந் தொகையை யுணர்த்தும் ஓர் வடசொல். அது கப் பிரத்யயம் பெற்று சதகம் என்றாயிற்று.

இத்தகைய சதகங்களை பண்டைக்காலத்திலிருந்த திண்ணைப் பள்ளிக்கூடங்களில் வாசித்து வந்த இளஞ்சிறார்க்கு சொல்லிக் கொடுத்து மனனஞ் செய்யுமாறு செய்தனர். பல்லாண்டுகளுக்கு முன்னர் நம் நாட்டிலிருந்த தமிழ்க்கழகங்களில் வாசித்து வந்த மாணவர்களுக்கு எழுத்துக் கூட்டிப் படிக்கத் தெரிந்தவுடன் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், அம்பிகைமாலை, சூடாமணி நிகண்டு, குமரேசர் சதகம், அறப்பளீசுர சதகம், கைலாச நாதர் சதகம், எம்பிரான் சதகம் முதலிய நூல்களை கற்பித்து வந்தனர். இவற்றை ஒரு மாணவன் 12-வயதுக்குள் கற்றுக் கொண்டுவிடுவான். பின்னர், அருணாசலபுராணம், அரிச்சந்திரபுராணம், நளவெண்பா, நன்னூல், நாலடியார், திருக்குறள் முதலியவற்றை ஓதியுணர்வான். எனவே பண்டைக் காலத் தமிழ்க் கழகத்தார் பின்பற்றிய கல்வி முறையின் சிறப்பை உன்னிப் பாருங்கள். அதற்கு மாறாக இக்காலத்தில் ஆங்கிலக் கல்வியபிவிருத்தியின் பயனாக புது புது போதனா முறைகள் கண்டு பிடிக்கப்பட்டு ட. டப்பி ப. படம் என்று ஆரம்பித்து கற்பிக்கின்றனர். எனவே பொருட் செறிவற்ற பாடங்களே இக்காலத்துப் புத்தகங்களுள் காணப்படுகின்றன. மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்கு அவை ஒரு சிறிதும் பயன்படுவன அல்ல. ஆரம்பப் பாடசாலைகளில் சதகங்கள் கற்பிக்கப்படுமாயின் அவை மாணவர்களின் மனதில் பசுமரத்தாணி போல் வேரூன்றி அவர்தம் வாணாளில் பெருந்துணையாய் நின்று நல்வழியிற் செலுத்தும். தாம் தாம் உலகில் அனுபவித்துக்



கண்டறிந்த உண்மைகளையே சதகங்களில் கூறிப் போந்தனர் பெரியோர். ஆகலின் சதகங்களைக் கற்றல் மிக்க அவசியம்.

இனி அறப்பளீசுர சதகத்தைப் பற்றி கவனிப்போம். இது சதுரகிரி யென்னும் தலத்தில் அறப்பளீசுரம் என்னும் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானது திரு நாமத்தைச் செய்யுள் தோறும் அமைத்துப் பாடப் பெற்ற நூறு செய்யுள் கொண்ட ஒரு பிரபந்தம். இந்நூலின் செய்யு ளொவ்வொன்றிலும் இறுதியில் "அருமை மதவேள் அனுதினமு மனதினினைதரு சதுரகிரிவளர் அறப்பளீசுர தேவனே." என்பது மகுடமாக அமைத்திருத்தல் காண்க. அறப்பளீசுரரைப் புகழ்கின்ற சதகம் என இரண்டனுருபும் பயனுந் தொக்கத் தொகை யென்றாவது அறப்பளீசுரரது சம்பந்தமான சதகம் என ஆறாம் வேற்றுமைத் தொகை யென்றாவது விரித்துரைத்துக் கொள்க. அறப்பள்ளி என்பதை கோயிற் பெயரெனக் கொண்டால் அங்கு எழுந்தருளி யிருக்கிற ஈசுரர் மேற்பாடிய சதகம் ஒன்றாகும். அறப்பளீசுர மலை என்று திரிசிராப்பள்ளி ஜில்லாவில் ஒரு மலை யுளதெனக் கூறுவாரு முளர்.

இந்நூல், முதலிற் காப்புச் செய்யுளாயுள்ள வெண்பா வொன்று தவிர நூறு ஆசிரிய விருத்தங்களை யுடையது.

> "அம்பலவாண கவிராயனுறுமென் புன் கவியையுஞ்
> சூடியே மனமகிழ்ந்திடுவதுன் கடனாகும்."

என்று இந் நூலாசிரியரே இந்நூலின் ஈற்றில் தற்சிறப்புப் பாயிரமாகக் கூறியிருத்தலின், இந்நூலாசிரியர் பெயர் அம்பலவாண கவிராயர் என்பது இனிது விளங்கும். இவர் சோழ நாட்டில் தில்லையாடியில் வேளாளர் குலத்தில் சற்றேறக் குறைய இரு நூறு ஆண்டுகளுக்கு முன் பிறந்து பின் காழியம் பதியில் தங்கி அறுபத்தேழு வயது வரையில் வாழ்ந்து இராம நாடகம், சீகாழிப்புராணம், அனுமார் பிள்ளைத் தமிழ் முதலிய நூல்களைச் செய்து புகழ் பெற்ற சீகாழி அருணாசலக் கவிராயரது மூத்த புதல்வர். ஆகவே இந்நூலாசிரியர் காலம் இற்றைக்கு சற்றேறக் குறைய நூற்றைம்பதாண்டுகளுக்கு முன் என்பது விளங்குகின்றது. அம்பலவாணரது புதல்வர் சுப்பராயக் கவிராயர் என்பவர் இந்நூல் செய்யுட்களின் மகுடந்தோறும் "அருமை மதவேள் அனுதினமு மனதினினை" என்ற அடைமொழியை கொன்றை வேனியண்ணலுக்குக் கொடுத்துக் கூறியுள்ளமையின், இவர் மதவேள் என்னும் வேறு பெயருள்ள ஒரு பிரபுவினால் ஆதரிக்கப்பட்டவரென்று அறியலாம். அந்தப் பிரபுவானவர் வேளாள குலத்தில் தோன்றினவரென்றும், கங்கா குலத்தவரென்றும் மோழை பூபதி என்னும் வள்ளலது புதல்வரென்றும், ஈகை; அழகு, அறிவு கீர்த்தி முதலியவற்றில் நலை சிறந்தவரென்றும் இந்நூலால் விளங்கும். அறப்பள்ளி என்பது வைப்புத்தலங்களாகிய சிவதலங்களுள் ஒன்றென்றும் அது கொல்லி மலையைச் சார்ந்துளதென்றும் அதற்குச் சதுரகிரி யென்னும் பெயருண்டென்றும் இந்நூலைப் பாடுவித்தவர் கொல்லிமலையிலுள்ள குண்டுணி நாட்டுத் தலைவராகிய கருமக் கவுண்டர் என்றும், இவர் தான் மதவேள்

எனப்படுபவ ரென்றும் மோழைக் கவுண்டர் என்பது இவரது தந்தையென்றும் சில முதியோர் கூறுகின்றனர். இந்நூலின் நயத்தை அறிவான் வேண்டி ஒரு செய்யுளை கீழே தருகிறேன்.

**தத்துவத்திரயம்**

பூதமோரைந்துடன் புலனைந்து ஞானம்
பொருந்து மிந்திரிய மைந்து
பொருவில்கன் மேந்திரிய மைந்துமன மாதியாம்
புகலரிய கரணம் நான்கே
ஓதினே ரிவையான்ம தத்துவமெனச் சொல்வ
ருயர் கால நியதி கலையோ
டோங்கிவரு வித்தைரா கம்புருடன் மாயை யென்
றுரை செய்யுமோ ரேழுமே
தீதில் வித்யாதத்வ மென்றிடுவ ரிவையலாற்
றிகழ் சுத்த வித்தை யீசன்
சீர் கொள்சா தாக்கியஞ் சத்திசிவ மைந்துமே
சிவ தத்துவ மென்றறை குவார்
ஆதிவட நீழலிற் சனகாதி யர்க்கருள் செய்
அண்ணலே யருமை மிதவே
எனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீசுர தேவனே.

---

# ஆனந்தபோதினி
## அச்சுக்கூடத்தில்

போஸ்ட் கார்டுகள் முதல் போஸ்டர்கள் வரை புஸ்தக வேலைகள் உள்பட எல்லாவித அச்சு வேலைகளும் சுத்தமாகவும், அழகாகவும், கால தாமதமின்றியும் செய்து கொடுக்கப்படும்.

விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ், மதராஸ்.

# ஹிந்துமத பாடசாலை

———:0:———

("மைவண்ணன்")

ஒரு நாட்டின் முன்னேற்றத்துக்கு முக்கியமானது அந் நாட்டு மக்கள் கல்விச் செல்வத்தால் சிறந்து விளங்குவதாகும். அறியாமை யிருளில் அழுந்திக் கிடக்கும் மக்கள் நிறைந்தநாடு எத் துறையிலும் முன்னேற்ற மடையாது என்பது உலகறிந்த உண்மையாகும்.

ஐரோப்பிய நாடுகளும், கீழ்த்திசையிலுள்ள ஜப்பான்போன்ற நாடுகளும் இன்று சகல துறைகளிலும் தீவிரமாக முன்னேறிச் சிறந்து விளங்குகின்றன வென்றால், அங்குள்ள மக்கள் பெரும்பாலார் கல்வியறிவு பெற்றுத் திகழ்வதே காரணமாகும். மக்கள் கல்வியிலும், கைத் தொழிலும் சிறந்து விளங்குவதற்கு, மேற்படி நாடுகளின் அரசாங்கத்தார் தக்க ஏற்பாடுகளைச் செய்து ஆங்காங்கு கல்வி நிலையங்களை நிறுவி யிருக்கிறார்கள். வயது வந்தவர்களும் கல்வி பயில்வதற்கு அந் நாடுகளில் வசதி யிருக்கிறது.

நம் இந்தியாவை எடுத்துக் கொண்டால் கல்வி யறிவு வாய்க்கப் பெற்றவர்களை விரல் விட்டு எண்ணி விடலாம். சர்க்கார் கல்வி சம்பந்தமாகச் செய்திருக்கும் ஏற்பாடுகள் நம் மக்களுக்குப் போதியனவாக இல்லை. அத்துடன் சர்க்காரால் அநுஷ்டிக்கப் பட்டுவரும் தற்காலக் கல்வி முறையும் மக்கள் வாழ்வுக்கு நன்மை புரிவதாயில்லை.

இந்தியாவிலும் வடநாட்டைப் பொறுத்த மட்டில், அங்குள்ள பெரியார்கள் மக்களின் கல்வி வளர்ச்சிக்கு வெகுவாகப் பாடுபட்டு வருகின்றனர். வெறும் சர்க்கார் உதவியையே நம்பி நில்லாது, அவர்கள் தங்கள் சொந்த முயற்சியால் ஆங்காங்கு பல கல்விச் சாலைகளையும், வித்தியா பீடங்களையும் ஏற்படுத்தி நடத்தி வருகின்றனர். அவைகளில் பல வித்தியாலயங்கள் பண்டைய குருகுல முறையில் நடைபெற்று வருகின்றன. கவியரசர் ரவீந்திர நாத தாகூர் நடத்திவரும் சாந்தி நிகேதனமும், பண்டித மதன மோகன மாளவியாவால் துவக்கப் பெற்று இன்னமும் அவரது மேற்பார்வையில் நடந்தப்பெறும் காசி ஹிந்து சர்வகலாசாலையும் மேற்குறித்த வித்தியா பீடங்களில் குறிப்பிடத் தக்கனவாகும். ஆர்யசமாஜகுரு தயானந்த சரஸ்வதி, சிரத்தானந்தர் ஆகியோரால் ஏற்படுத்தப்பட்ட வித்தியா பீடமும் பிரபலமானதே.

ஆனால், நம் தமிழ் நாடோ! கல்வித் துறையில் நம் நாட்டின் நிலை என்ன! அதன் பரிதாப நிலையை நினைந்து பார்க்கும்போது, தமிழ் மகன் என்று தன்னைக் கூறிக் கொள்ளும் எவனும் கண்ணீர் விட்டுக் கதறாமலிருக்க முடியாது. இங்கு சர்க்கார் நிர்வாகத்தில் நடக்கும் கலாசாலைகள் தவிர, தனிப்பட்டவர்களால் நடத்தப்படும் கல்வி நிலையங்கள் மிகச் சொற்பம். நம் நாட்டில் செல்வந்தர்க ளில்லையா? அறிஞர்க ளில்லையா? தேசபக்தர்களில்லையா? எல்லாரும் இருக்கிறார்கள். பணக்காரர்களில் பலர் எத்தனையோ தீய வழிகளில் தாங்கள் பொருளைத் தண்ணீராய்ச் செலவு செய்கிறார்களே யொழிய, கல்வி வளர்ச்சிக்கென்று பொருளுதவி புரிய

முன் வருவதில்லை. ராஜா—ஸர். அண்ணாமலை செட்டியார் ஒருவர் தான் தமிழ் மக்களின் அறியாமையைப் போக்கும் புண்ணிய கைங்கரியத்தில் ஈடுபட்டுப் பெரும் புகழைத் தேடிக் கொண்டவர். இவரை ஆதர்சமாகக் கொண்டு மற்ற செல்வந்தர்களும் கல்வி வளர்ச்சிக்குப் பாடுபடுவார்களாயின் நம் நாடு உன்னத நிலையை யடையு மென்பது நிச்சயம்.

குருகுலங்களுக்குப் பேர்போன நம் நாட்டில் அப் பழைய முறையில் ஏதேனும் நடை பெறுகிறதா எனில், என் கண்களுக்குச் சென்னை ராமகிருஷ்ண மாணவர் இல்லம் தான் முன்னே காட்சியளிக்கிறது. அதை நான் நேரில் பல முறை பார்த்திருக்கிறேன்; சீரிய முறையில் நடைபெற்று வருகிறது. சிதம்பரம் நந்தனார் கல்விக் கழகமும் இம் முறையில் நடைபெற்று வருவதாகக் கேள்விப் பட்டிருக்கிறேன். பேரறிஞர் வ. வே. சு. ஐயரால் நடத்தப்பட்டு வந்த சேரமா தேவி குருகுலம் துரதிர்ஷ்ட வசமாகக் குறுகிய காலத்தில் மறைந்து விட்டது.


இந் நிலையில், நான் வாலாஜாபாத்தில் நடைபெறும் இந்துமத பாடசாலையைக் கண்டபோது, எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியை என்னென்பேன்! இங்கு பண்டைய குருகுல முறையே புத்துயிர் பெற்று விளங்குவதைக் கண்டதும், நம் தமிழ்நாட்டுக்கும் நற்காலம் ஏற்பட்டிருக்கிறது என்ற உணர்ச்சி எனக்கு உண்டாயிற்று. வெறும் ஏட்டுக் கல்வியோ டல்லாது, பிற்கால வாழ்வுக்கு இன்றியமையாததான கைத் தொழில் கல்வியும் எட்டாவது வகுப்புவரை கற்றுக் கொடுக்கப்பட்டு வருவது குறிப்பிடத் தக்கதாகும். இத்துடன், நல்லொழுக்கமும், தெய்வ நம்பிக்கையும் மாணவர்களுக்கு ஊட்டப்பட்டு வருவது பாராட்டற் பாலது. எனறிந்த மட்டில் இம் முறையில் தமிழ்நாட்டில் வேறெந்த கல்வி நிலையமும் நடை பெறவில்லை. சுமார் 22-வருடங்களுக்கு முன் எளிய நிலையில் 4-சிறுவர்களை வைத்து துவக்கப்பட்ட இக்கல்வி நிலையம் இன்று 700-மாணவர்கள் கொண்டதாய், விடுதி, நூல் நிலையம் முதலியவைகளோடு விளங்குகிறதென்றால், அதற்குக் காரணகர்த்தர்களான திருவாளர்கள் பஞ்சாட்சர முதலியார், மாசிலாமணி முதலியார் ஆகிய இரு சகோதரர்களின் பெரு முயற்சியைப் போற்றாதிருக்க முடியுமா! காசி இந்து சர்வகலாசாலையைப் போன்றும், சாந்தி நிகேதனத்தைப் போன்றும்இவ் இந்துமத பாடசாலை பல வகையிலும் வளர்ச்சியுற்று உயர்நிலை யடையவேண்டுமென்பது என்பேரவா. பெருஞ் செல்வர்களும், பேரறிஞர்களும் மனம் வைத்தால் இன்றே இந்துமத பாடசாலையை உன்னத நிலைக்குக்கொண்டு வந்து விடலாம். சைவ சமயத்தையும், தமிழ் மொழியையும் வளர்ப்பதற்கென்றே இருக்கும் சைவ மடாதிபதிகள் இவ் விஷயத்தில் கவனஞ் செலுத்துவார்களானால் மிகவும் நன்றாக இருக்கும். இப் பாடசாலை நிர்வாகிகள், இது தங்கள் தனிப்பட்ட சொத்தல்ல; பொது ஸ்தாபனம் என்று பிரகடனஞ் செய்வார்களானால், கொடையாளிகள், பொது நலத்தில் கருத்துடைய பெரியார்கள் முதலியவர்களுடைய கவனத்தையும், ஆதரவையும் இப்போ திருப்பதைவிட இன்னும் அதிகமாகப் பெறுவதற்கு ஏதுவாக இருக்கும் என்பது அடியேனது தாழ்மையான கருத்து. தமிழ்நா டெங்கணும் இதுபோன்ற கல்வி நிலையங்கள் ஏற்பட இறைவன் திருவருள் புரிவாராக.

* * * *

## பத்திராதிபர் விஜயம்.

செங்கற்பட்டு ஜில்லா வாலாஜாபாத் என்னுமிடத்தில் ஹிந்துமத பாடசாலை என்னும் பெயரோடு ஒரு கல்வி நிலையம் பண்டைய குருகுல முறையில் ஏற்பட்டு, சென்ற 22 வருஷங்களாக நடை பெற்று வருகிறது. மேற்படி கல்வி நிலைய நிர்வாகிகளான ஸ்ரீமான்கள் வா. தி. பஞ்சாட்சர முதலியார் அவர்களும், வா. தி. மாசிலாமணி முதலியார் அவர்களும் நீண்ட காலமாக விரும்பி வந்ததன் காரணமாக 'ஆனந்த போதினி' 'பிரசண்ட விகடன்' முதலிய பத்திரிகைகளின் சொந்தக்காரரும் வேலூர் ஜில்லா போர்டில் காங்கிரஸ் கட்சி அங்கத்தினராக இருப்பவருமான ஸ்ரீ. நா. முனிசாமி முதலியாரவர்கள் தமது உதவி ஆசிரியர்களான ஸ்ரீமான்கள். நா. துரைக்கண்ணன், ஆர். சீனிவாஸ ராவ் ஆகியோருடன் நவம்பர் மாதம் 21-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-மணிக்கு மேற்படி பாடசாலைக்கு விஜயம் செய்தார்கள். அப் பாடசாலையின் நிர்வாகிகளான ஸ்ரீ. மாசிலாமணி முதலியாரும் மற்றவர்களும் மேற்படி மூவரையும் அவர்களுடன் விஜயம் செய்த சென்னை சுத்த சமரச சன்மார்க்க சபையின் தலைவரான ஸ்ரீ. ராஜமாணிக்கம் பிள்ளையையும் வரவேற்றனர். முதலில் புகைப்படம் பிடிக்கப்பட்டது. பின்னர் பாடசாலை மாணவர்கள் தினசரி அதிகாலையில் வழக்கமாகச் செய்யும் சில தேகாப்பியாச விளையாட்டுகளை நடத்திக் காண்பித்தனர். மாணவர்களுக்குக் கற்பிக்கப்படும் தச்சு வேலை, நெசவு வேலை, அச்சுக் கோத்தல், கயிறு திரித்தல், கலாய் பூசுதல் முதலியவைகளைக் கண்டபின் வள்ளலார் மாணவர் விடுதி மண்டபத்தில் நமது ஆனந்தபோதினி பத்திராதிபர் ஸ்ரீ. நா. முனிசாமி முதலியார் அவர்கள் தலைமையில் மாணவர்கள், ஆசிரியர்கள், மற்றும் விஜயம் செய்திருந்த பெரியார்கள் ஆகியோர் அடங்கிய ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. பாடசாலை மாணவர்கள் ஆங்கிலத்திலும் தமிழிலுமாகப் பல முக்கியமான விஷயங்களைப்பற்றிச் சொற் பொழிவு நிகழ்த்தினர். தாய் நாட்டின் முன்னேற்றம், புது அமைச்சர்கள், தேகாப்பியாசம் முதலியவை பற்றி செய்த பிரசங்கங்களும், ஆங்கிலத்தில் நடத்திய மாடல் வகுப்பும், தேசத்துக்கு நன்மை பயப்பவர் செலவாளியா? சிக்கனக்காரரா? என்பது பற்றி நடத்திய விவாதமும் கண்கட்டு வித்தையும் மெச்சத் தக்கனவாக இருந்தன. பின்னர், விஜயம் செய்தவர்க ளனைவருக்கும் விமரிசையான விருந்து அளிக்கப்பட்டது.

திருக்கழுக்குன்றம் திரு எதிராஜலு நாயகர், ஆனந்தபோதினி துணையாசிரியர்கள் திரு சீனிவாஸ ராவ், திரு துரைக்கண்ணன், சென்னை சமரச சன்மார்க்க சங்கத் தலைவர் திரு இராஜமாணிக்கம் பிள்ளை ஆகியோர்கள் இப் பள்ளியின் சிறப்புகளைக் கண்டது தங்கள் நற்பேறேயென்றும் இப் பள்ளி புகழ்மிகு காந்தியடிகள் விரும்புகின்ற நன் முறையில் நடைபெறுகின்றது எனவும், இதனை நாட்டுத் தலைவர்கள் கண்டு இதற்குத் தக்க உதவி புரிதல் முதன்மையானது என்றும் பாராட்டிப் பேசி இப்பள்ளி எல்லாவித நன்மைகளையும் பெற்று ஏற்றமுற வேண்டுமெனவும் இறைவனை வாழ்த்தினர். இறுதியில் செயலாளர்கள் திருவாளர்கள் வா. தி. மாசிலாமணி முதலியார், வா. தி. பஞ்சாட்சர முதலியார் ஆகிய இருவரும் வந்தனம் கூறினர்.




மிகவும் பருமனான ஒரு மனிதனும் மிகவும் இளைத்த ஒரு மனிதனும் கடுமையாக விவாதம் நடத்திக் கொண்டிருந்தனர். முடிவில் இருவரும் திட்டிக்கொள்ள ஆரம்பித்தனர்.

பருத்தவன்:—உன்னைப் பார்த்தால், இந்த ஊரிலேயே பஞ்சம் வந்து விட்டதாகத் தோன்றுமே?

இளைத்தவன்:—உன்னைப் பார்த்தால் நீ தான் அதற்கு காரணமென்று தோன்றும்,

***



டாக்டர்:— (கோபமாக வெளியே வந்து) "என்ன இது! கதவை ஏன் பலமாகத் தட்டினாய்?"

பையன்:— (வேதனையோடு) என்னை நாய் கடித்து விட்டது ஸார்!

டாக்டர்:—நான் நோயாளிகளைக் காலை ஏழு மணியிலிருந்து பத்து மணி வரை தான் பார்ப்பதென்று உனக்குத் தெரியாதா?

பையன்:—எனக்குத் தெரியும்; ஆனால் அந்த நாய்க்குத் தெரியவில்லையே ஸார்"

***

தகப்பனார்:— (ஞாயிறன்று மறதியாக) ராமா! பள்ளிக்கூடம் இல்லையோடா!

ராமன்:— இருக்கிறது. அப்பா?

தக:—பின் ஏன் போக வில்லை?

ரா:—பூட்டியிருக்கிறது அப்பா.

***

ராமன்:—ஏண்டா சுப்பா, மாதப்பிறப்பு என்றைக்குடா?

சுப்பன்:—'முதல் தேதிடா.'



வழிப்போக்கன்:—தாங்கள் தானே சற்று முன் பிறர் மனத்திலுள்ளதை அறிந்து அவர்கள் வைத்திருந்த சிறு சாமான்களைக் கண்டு பிடித்து கொடுத்தது?

வித்தைக்காரன்:—ஆம்.

வழிப்போக்கன்:—இங்கு ஏன் இவ்வளவு நாழிகை தங்கி விட்டீர்கள்?

வித்தைக்காரன்:—என் செருப்பைக் காணோம்; தேடுகிறேன்.

***

ராமன்:—நேற்று என்னுடன் ஒரு முரடன் சண்டைக்கு வந்தான். நான் அவனை நன்றாகத் தாக்கினேன், அவனும் நன்றாகத் தாக்கினான்.

சுப்பன்:—அதை நான் பார்த்துக் கொண்டிருந்தேன்.

ராமன்:—அப்படியானால் நீ யேன் எனக்கு உதவி புரியவில்லை.

சுப்பன்:—உன்னுடைய சாமர்த்தியம் அவனுக்குத் தெரிய வேண்டாமா!

***

ஒருவன் தன் வீட்டிற்கு வந்த விருந்தாளியை நோக்கி "தையல் இலையில் சாப்பிடுவீரா" என்றார்.

விருந்தாளி:—தையல் (மனைவி) என் இலையில் சாப்பிடுவாளே யன்றி அவள் இலையில் நான் சாப்பிட மாட்டேன் என்றார்.

***

பியூன் சாயபு:—சார், என்ன பக்ஷீஸ் ஒன்னும் குடுக்கிறான் இல்லை. இந்த ஊரில் இருக்கிறான் படாலோபி லோகசுந்தரம்; அவன் கூட எனக்கு 4 பைசா குடுத்திருக்கிறான் சாமி!

பாங்கிக்கு வந்தவர்:—இன்னொருதரம் அவனைப் பார்த்தா அவனுக்கு அண்ணன் நானிருக்கிறேன் என்று சொல்லு.

***

மனைவி:—தாங்கள் முன்போல் என் மீது ஆசையாக இல்லை. இல்லாவிட்டால் நான் அழுது கொண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருப்பீர்களா?

புருஷன்:—சரி, உன்னை விசாரிக்க ஆரம்பித்தால் தான் செலவு வைத்து விடுகிறாயே?

***

நோயாளியான மூன்று வயது ஸரஸா பவுனை விழுங்கி விட்டாள். அவள் தகப்பனார் டாக்டரிடம்:—குழந்தை பவுனை விழுங்கி விட்டது.

டாக்டர்:—மிகவும் நல்லது. நான் குழந்தைக்குத் தங்க பஸ்பம் கொடுக்க வேண்டும் என்று நினைத்தேன்.

***

உபாத்தியாயர்:—(கோபத்தோடு) அடே! நீ படிக்க வந்து மூன்று மாதங்களாகின்றனவே, கணக்கு ஒரு இழவும் தெரிகிற தில்லையே?

மாணவன்:—(விரலை மடக்கிக்கொண்டு) ஆவணி, புரட்டாசி, அற்பசி, கார்த்திகை ஸார், நாலு மாதங்களாச்சே.

# ஆசிரியர் குறிப்புக்கள்

## அருணோதயம் சூர்யோதயமாகுக!

சென்னை காங்கிரஸ் சர்க்கார் செய்துள்ள காரியங்களில் தலை சிறந்தது சேலத்தில் அனுஷ்டிக்கும் மதுவிலக்குத் திட்டமேயாகும். குடிப் பழக்கம் நீண்ட காலமாக மக்களிடையே ஊன்றிப் போயிருப்பதால் அந்தத் திட்டத்தை வெற்றிபெற நிறைவேற்றுவது மிகக் கஷ்டமென்று பலர் கருதியிருந்தனர். இன்னமும் அதே எண்ணத்துடன் சிலரேனும் இருந்துவருகின்றனர். ஆனால் சேலம் சம்பந்தப்பட்ட வரையில் மதுவிலக்குத்திட்டம் அமுலுக்கு வந்தபின் அது வெற்றிகரமாகவே நடைபெற்று வருகிறதென்றுதான் கூறவேண்டும். திருட்டுச் சாக்குகள் காய்ச்சுதல், திருட்டுத்தனமாக மரத்தைக் கள்ளுக்கு விடுதல் முதலியன அபரிமிதமாக நடக்குமென்று சிலர் நினைத்தது வெறும் கனவாய்விட்டது. ஏதோ உபாயமாகச் சிற்சில குற்றங்கள் நடைபெற்றாலும் பொதுவாக ஜில்லா பூராவின் நிலைமையையும் கவனித்தால் மதுவிலக்கு இயக்கம் வெற்றி யடைந்துகொண்டே வருகிறது என்றுதான் கூறவேண்டும். இதனால் எவ்வளவோ ஏழைகள் பலவித நன்மைகளை யடைந்திருக்கிறார்கள். ஏழைக் குடும்பங்கள் சுபீட்சமாகவும் சண்டை சச்சரவின்றியும் இன்பம் அனுபவிக்கின்றன. சமீபத்தில் சேலம் ஜில்லாவில் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டுத் திரும்பிய பார்லிமெண்டரி காரியதரிசி ஸ்ரீ. பாபி நீடு, 'முன்பு குடியில் மூழ்கிக்கிடந்து இப்பால் அதை விட்ட பலரை நான் சந்தித்து அவர்களது நிலைமையைப்பற்றி விசாரித்தேன். கூலிகள், பெயர்பெற்ற குடிக்காரர்கள் மனைவியர், சில்லரைக் கடைக்காரர்கள் ஆகியோரை நேரில் சந்தித்துப் பேசினேன். இதிலிருந்து மதுவிலக்கு மிகுந்த வெற்றிகரமாக நடந்து வருகிறதென்பதே எனது அபிப்பிராயம்' என்று கூறி யிருப்பது கவனிக்கத்தக்கது. இவ்வளவு நல்ல நிலைமை அங்கு ஏற்பட்டுக் கொண்டிருந்தாலும் அந்த ஜில்லா வாசியும், நமது மாகாண சர்க்காரின் பிரதம மந்திரியும், மதுவிலக்கு இயக்கத்தில் அளவிலா ஆர்வமும் அனுபவமுங் கொண்டவருமான கனம். ராஜாஜி மட்டும் பூரண திருப்தி யடையவில்லை யென்று பிரசார இலாகா மந்திரி ஒரு அறிக்கையின் மூலம் தெரிவித்துள்ளார். இப்போதுள்ள நிலைமையை காங்கிரஸ் சர்க்கார் அருணோதயமாகவே கொள்கின்றனர். இந்த அருணோதயம் விரைவில் சூரியோதயமாக' மாறி அதிக ஒளி எங்கும் வீசவேண்டும் என்பதே அவர்கள் ஆவல். இதற்குப் பொது ஜனங்களும் சர்க்காருடன் ஒத்துழைக்க வேண்டியது அவசியம். சேலம் ஜில்லா இன்று நன்மை அடைந்து வருவதுபோலவே விரைவில் இம்மாகாணமும் பிறகு இந்தியா பூராவுமே மது அரக்கன் கொடுமையினின்றும் விடுபட்டு இன்பமாகவும் பரிசுத்தமாகவும் வாழக்கூடிய நிலைமை ஏற்படவேண்டும். குடியை விட்டவர்கள் தங்கள் பணத்தை சேவிங்ஸ் பாங்கில் போட்டு வைத்தும், அதைக்கொண்டு சிறு தொழில்களை ஆரம்பித்தும் தாங்களும் தேசமும் முன்னேற்ற மடையும்படி செய்யவேண்டும். எல்லாரும் தங்கள் தங்கள் பொறுப்பை உணர்ந்து வேலை செய்தால் இன்று அருணோதய நிலையில் இருக்கும் மதுவிலக்கு இயக்கம் விரைவில் சூரியோதய நிலையைப் பெற்று இன்ப ஒளியை எங்கும் வீசும் என்பது நிச்சயம்.

---



## உலக அமைதிக்கு மார்க்கம்

உலகம் போற்றும் உத்தமரான மகாத்மா காந்தியடிகள் அரசியல் உலகில் இருந்துகொண்டு சேவை செய்துவருவதன் காரணமே உலகில் உள்ள மிருகபலத்தையும் பலாத்கார உணர்ச்சியையும் ஒழித்து எங்கும் சாத்வீகமும் சமத்துவமும் அன்பும் நிலவும்படி செய்வதற்கே யாகும். மகாத்மா தமது சத்தியாக்கிரக இயக்கத்தின் மூலம் மக்களிடையே சத்தியம், சாத்வீகம், அன்பு ஆகியவற்றை நிலைநிறுத்தி வருகிறார். ஆன்ம உணர்ச்சியும் ஆத்மீக பலமும் நாளுக்குநாள் உலகில் மறைந்து எங்கும் மிருகபலம் தோன்றுவதற்கு பேராசை, அடக்கியாளும் சுபாவம், ஏகாதிபத்ய உணர்ச்சி இவைகள்தான் காரணம். சமீபத்தில் ரீடிங் சர்வ கலாசாலையில் பேசிய போது சர். சாமுஹேல் ஹோர் எங்கும் மிருகபலமே ஓங்கி யிருக்கிறதென்றும், பல நாடுகளில் சுதந்தரமும் நீதியும் குலைக்கப்பட்டு விட்டனவென்றும் சகிப்புத் தன்மையின்றிச் சீறுவதே ஒரு உன்னத குணமாக மதிக்கப்படுகிறதென்றும் கூறி வருத்தப்பட்டார். வாஸ்தவம்தான்; உலகத்தின் நிலைமை அப்படித்தான் இருக்கிறது. ஆனால் சர். சாமுவேல் ஹோரைப்போன்ற பொறுப்பு வாய்ந்த ஐரோப்பியர் வாயினால்மட்டும் இவ்வாறு கூறிக்கொண்டிருப்பதில் பயனில்லை. மிருகபலம் ஓங்கி நிற்பதற்கு என்ன மூல காரணமோ அதை ஒழிக்க முற்படவேண்டும். ஏகாதிபத்ய ஆசையும், அடக்கியாளும் சுபாவமும் ஒழியவேண்டும். பல நாடுகளில் நீதியும் சுதந்தரமும் இல்லை என்கிறார். உலகில் பண்டைச் சிறப்பு வாய்ந்த இந்தியா எந்த நிலையில் இருக்கிறது? உலகத்துக்கு ஆன்மார்த்த தத்துவத்தை போதிக்கக் கூடிய சக்தி வாய்ந்தது இந்தியா ஒன்றுதான். ஆகவே இந்தியா விடுதலை யடைந்து சுதந்தரம்பெற்று உலக மதிப்பைப் பெற்றால்தான் உலகில் சாந்தியும் சமாதானமும் நிலவும். ஆதலின் பொறுப்புள்ளவர்கள் எதை எதையோ வாயினால் பேசிக்கொண்டிருப்பதைவிட இந்திய சுதந்தரம் பெறும் வழியில் உதவி புரிவதுதான் உலக அமைதிக்குச் சரியான மார்க்கமாகும் என்பதை உணரவேண்டும் என்பது எமது அவா. சர். சாமுவேல் ஹோர் தாம் உணர்வது உண்மையானால் இந்திய விடுதலைக்குத் துணை புரிவாரா?

---

## விவசாயிகளுக்கு சர்க்கார் உதவி

நமது மாகாணத்தில் இப்போது அதிகாரத்தில் இருப்பது காங்கிரஸ் கட்சி. ஆகவே பொதுஜன ஆட்சி நடக்கிறதென்றுதான் கூறவேண்டும். ஏனெனின், இன்னமும் பிரிட்டிஷ் ஆதிக்கமும் இருந்துகொண்டே இருப்பதால் அதிகாரத்திலுள்ள காங்கிரஸ் மந்திரிகளும் தாராளமாக ஒன்றும் செய்துவிட முடியாது; என்றாலும் மாகாண சுயஆட்சி என்று சொல்லப்படுகிற ஒருவித அரசியலைப் பிரிட்டிஷார் ஏற்படுத்தி யிருப்பதால் தைர்யமும் ஆர்வமும் உடையவர்கள் சட்ட வரம்புக் குட்பட்டே ஏதேனும் நன்மையைச் செய்யக்கூடும். இந்த உண்மையை இப்போது நமது சென்னை காங்கிரஸ் மந்திரி சபையினர் காண்பித்து வருகின்றனர். அவர்கள் பதவி ஏற்றுச் சொற்ப காலத்துக்குள் பலவித நன்மைகளைச் செய்திருக்கிறார்கள். சேலத்தில் மதுவிலக்கு இயக்கம் ஆரம்பித்ததும், நீல்சிலையை அப்புறப்படுத்தியதும், கதர் தொழிலுக்குப் பாதுகாப்பு அளித்ததும் அவற்றில் முக்கியமானவை யாகும். இப்போது விவசாயிகளுக்கு உதவி செய்யும் பொருட்டு

அவர்களுடைய கடன் பளுவைக் குறைப்பதற்காக ஒருவித சட்டம் கொண்டு வரப் போகிறார்கள். அதற்கு சென்னை விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம் என்று பெயர். அம் மசோதாவின் நோக்கத்தையும் ஷரத்தையும் இப்போது வெளியிட்டிருக்கிறார்கள். காங்கிரஸ் மந்திரிகளின் நோக்கம் சரியானது என்பதில் ஆக்ஷேபமில்லை. இம் மாகாணத்தின் மூலாதாரமாக விளங்கும் விவசாயத் தொழிலுக்குப் புத்துயிர் ஊட்ட வேண்டியது அவசியம் தான். மகாஜனங்களுக்கு வேண்டிய உணவைத் தயாரித்துக் கொடுக்கும் விவசாயிகள் நல்லநிலையில் இருந்தால் தான் பொதுவாகவே எல்லா வகுப்பினரும் சுபீட்சமாக இருக்க முடியும். விவசாயிகளின் தற்போதைய நிலைமை அரசாங்கத்தார் தங்கள் நோக்கத்தில் தெரிவித் திருக்கிறபடி மிக்க பரிதாபகரமானதாக இருக்கிறதென்பதில் சந்தேகமில்லை. இப்போது விவசாயிகள் படும் துயரத்திற்கு முக்கிய காரணம் கடன் சுமைதான். இந்த நிலைமையில் தனது பொறுப்புகள் பூராவையும் உணர்ந்துள்ள எந்த அரசாங்கமும் இந்த விவசாயிகளுக்கு உதவி செய்யாமல் இருக்க முடியாது. ஏழைகளின் நன்மைக்காகவே பாடுபடும் காங்கிரஸ் மந்திரிகள் விவசாயிகளின் துயரத்தைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்க முடியுமா? ஆகவே தக்க ஆராய்ச்சியின் மீதுதான் இந்த மசோதாவைக் கொண்டுவந் திருக்கிறார்கள். ஆதலின் இம் மசோதாவைக் கொண்டுவந்ததன் நோக்கத்தை அனைவரும் பாராட்டவேண்டியதென்பதில் சந்தேகமில்லை.

---

## கஷ்ட நிவாரணச் சட்டத்தின் பலன்

சர்க்கார் கொண்டு வரப்போகும் இச் சட்டத்தால் ஏற்படும் பலாபலன்களையும் அனைவரும் அறிய வேண்டியது அவசியம். இச் சட்டத்தால் சிலருக்கு கஷ்ட நஷ்டங்கள் ஏற்படலாம். ஆனால் பொதுவான சமூக நன்மையை உத்தேசித்து அந்த ஒரு சிலரும் இந்த நிவாரண மார்க்கங்களை வரவேற்பதே நியாயமாகும். சர்க்கார் அறிவித்துள்ள இந்த மசோதாவினால் கடன் பட்டுள்ள விவசாயிகளுக்குச் சில நன்மைகள் ஏற்படுகிறதென்பது திண்ணம். கடனாளி கொடுக்கவேண்டிய அசல் பாக்கியைக் கொடுத்து விட்டால் கடன் தீர்ந்து போகிறது. கொடுபடாமல் பாக்கி இருக்கும் வட்டித்தொகை அடிபட்டு விடுகிறது. இரண்டாவதாக கடன் பாக்கிக்காகச் செலுத்தி யிருக்கும் தொகையானது அசலுக்கு இரண்டு மடங்குக்கு அதிகமாகி விட்டிருக்கும் பக்ஷத்தில் அக்கடன் தீர்ந்து போன மாதிரியே கருதப்படும். மூன்றாவது, கடன் வாங்கியவர்கள் திருப்பிக் கொடுத்துள்ள தொகை அசலின் இரண்டு மடங்குக்குக் குறைவானதாக இருக்குமாயின் அந்த எல்லைக்குள் பாக்கியுள்ள தொகையைக் கொடுத்து விட்டால் அக்கடன் தீர்ந்து போகிறது. இனி 100-க்கு வருஷத்துக்கு 6 ரூபாய்க்கு அதிகமாக வட்டி வாங்கக் கூடாது. 1345-ஆம் பசலிக்கும் அதற்கு முந்தியும் பாக்கி இருக்கும் வார பாக்கியும் ரத்து செய்யப்படுகிறது. இவைதான் கடன் பட்டவர்களுக்கு ஏற்படும் அனுகூலம். கடன் ரொக்கமாகவோ, இனமாகவோ, ஜாமீன் பேரிலோ, ஜாமீன் இல்லாமலோ இருக்கலாம். ஆனால் வட்டியில்லாத அனுபவ ஒத்திகளை இச்சட்டத்தில் கண்ட எதுவும் பாதிக்காது. ஏழை விவசாயிகளுக்கு ஏற்படும் இந்த நன்மைகளைக் கடன் கொடுத்தவர்களிலும் பெரும்பாலோர் ஆக்ஷேபிப்பதற்கில்லை. ஏனெனின் பல சந்தர்ப்பங்களில் இப்போதும் கிராமங்களில் நடந்து வருவது இந்த முறையே தான். கடன் வாங்கியவர்கள் பலர் வட்டியும் கொடுக்க முடியாமல் கஷ்டப்படும்போது வட்டியில்லாமல் அசல்மட்டும் கொடுத்தால் போதுமென்று தான் கேட்க வேண்டியதாக இருக்கிறது. ஆதலின் அசல் கிடைத்து விட்டால் போதும். இரண்டாவதாக கடன் பாக்கிக்காகச் செலுத்தி யிருக்கும் தொகை அசலுக்கு இரண்டு மடங்குக்கு அதிகமாகி விட்ட பின்னரும் விவசாயியைக் கசக்கிக் கொண்டிருப்பதில் பயனில்லை தான். இனி நூற்றுக்கு வருஷவாரி ஆறு வட்டியே வாங்க வேண்டுமென்பதும் தர்ம நியாயமானதே. ஆயினும் இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயம் யாதெனின், இச்சட்டப்படி ஏற்படும் அசல் தொகையையேனும் உடனே தீர்த்துவிடக் கூடிய நிலைமையில் விவசாயிகள் இருக்கிறார்களா என்பது தான். அசல் கடனையேனும் விவசாயிகள் தீர்க்க அரசாங்கத்தார் இச்சட்டத்தில் எந்த வகையும் செய்திருப்பதாகத் தெரியவில்லை. விவசாயிகளின் அக் கடனை அரசாங்கத்தாரே ஏற்றுக் கொண்டு தீர்த்து விடுவார்களா? வட்டியெல்லாம் போன பிறகு அசல் தொகையேனும் விரைவில் கிடைத்தால் தானே கடன் கொடுத்தவர்களும் திருப்தியுடன் இருக்க முடியும்? மற்றொரு முக்கிய விஷயம் யாதெனின், இனி கிராமங்களில் விவசாயிகளுக்கு எளிதில் கடன் கிடைக்காது. ஆதலின் அதற்கும் அரசாங்கத்தார் ஏதேனும் வகை செய்ய வேண்டும். இந்த இரண்டு முறைகளையும் பரிகரித்து விட்டாலொழிய அரசாங்கம் கருதும் லக்ஷியம் இம் மசோதாவினால் நிறைவேறி விடாது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.



---

## தொழிலாளரும் வேலை நிறுத்தமும்

இந்தியா சட்டசபையில் அங்கத்தினராக இருக்கும் ஸ்ரீ. என். எம். ஜோஷி இந்தியத் தொழிலாளர் முன்னேற்ற விஷயத்தில் அதிக ஆர்வமுடையவராக இருப்பதுடன் தொழிலாளர் இயக்கம் சம்பந்தமான எல்லா விஷயங்களையும் நன்கு அறிந்தவராகவும் இருக்கிறார். இன்று தொழிலாளர் தலைவர்களாகவும், தீவிர வாதிகளாகவும், தொழில் இலாகா மந்திரிகளாகவும் இருப்பவர்களுக்கெல்லாம் அவர் ஒரு தலைவர் என்று கூறுவது மிகையாகாது. அதைக் கனம். கிரி அவர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார். அவர் அரசியல் விஷயங்களில் மிதவாதியே யானாலும் தொழிலாளர் நன்மை விஷயத்தில் எந்த தீவிர வாதிக்கும் பின் தங்கியவரல்ல. இந்தியா சட்டசபையில் அவர் நியமன மெம்பராக இருந்தாலும் தொழிலாளர் பிரச்னைகளில் தைரியமாகச் சர்க்காரை எதிர்த்தே ஓட் செய்வார். இப்படிப்பட்ட தலைவர் சென்ற வாரம் சென்னைக்கு விஜயம் செய்து, இப்போது இங்கு அதிகாரத்தில் இருக்கும் காங்கிரஸ் சர்க்கார் தொழிலாளர்களுக்கு அளிக்க வேண்டிய வசதிகளைப் பற்றி மந்திரிமாரிடம் பேசினார். தொழிலாளர் முன்னேற்ற விஷயத்தில் கருத்துடைய நமது மாகாண சர்க்காரும், முக்கியமாக கனம். கிரி அவர்களும் ஸ்ரீ. ஜோஷியின் யோசனையை ஏற்று அதன்படி தொழிலாளர்களுக்கு வசதிகளைச் செய்து தருவார்களென்று நம்புகிறோம். பழுத்த அனுபவமும், பரிசுத்தமான நல்லெண்ணமுமுடைய தொழிலாளர் தலைவரான அவர் வேலைநிறுத்தம் சம்பந்தமாகத் தெரிவித்துள்ள அபிப்பிராயத்தைத் தொழிலாளர்கள் கவனிக்கவேண்டியது அவசியம். வேலை




## அறிவு விளக்க வினா 3.

—:0:—

வேலூரில் ஒரு அழகிய சிங்காரத் தோட்டம் இருக்கிறது. அதில் பல வகைப்பட்ட பழச் செடிகளும் புஷ்பச் செடிகளும் உண்டு. சமீபத்தில் நேர்ந்த காற்று மழையின் காரணமாக அத்தோட்டத்தில் அனேக செடிகள் விழுந்துவிட்டன. மறுநாள் காலை அத் தோட்டக்காரன் மானேஜருக்கு சங்கதி தெரிவித்தான். அவர் நேரில் வந்து பார்த்து மிக்க விசனமுற்றார். நேராகத் தபாலாபீசுக்குப் போய் உடனே 2 டஜன் செடிகளை அனுப்பும்படி பெங்களூரில் உள்ள செடிகளை வளர்த்து விற்கும் ஒரு கம்பெனிக்குத் தந்தி கொடுத்தார். மறுநாளே செடிகளும் வந்து சேர்ந்தன. உடனே மானேஜர் தன் தோட்டக்காரனை யழைத்து "ஐயா! இந்த 2 டஜன் செடிகளை ஒவ்வொரு வரிசையில் 4 செடிகள் வீதம் 28 வரிசைகளாக நடவேண்டும் தெரியுமா. எடுத்துப் போ" என்றார்.

தோட்டக்காரனுக்கு ஆச்சரியம் உண்டாயிற்று. மானேஜர் தவறாகப் பேசுகிறார் என்று அவன் நினைத்தான்.

தோட்ட:—எஜமானே! நீங்கள் எதையோ நினைத்துக் கொண்டு எதையோ பேசுகிறீர்கள் போலிருக்கிறது. இருப்பது மொத்தம் 24 செடிகள் தானே; இவைகளை வரிசைக்கு 4 வீதம் 28 வரிசைகளாக எப்படி நடமுடியும்?

மானே:—நான் ஒன்றும் தவறாகச் சொல்லவில்லை. என்ன சொல்கிறேன் என்பதைத் தெரிந்து தான் பேசுகிறேன். இந்த 24 செடிகளை நான் சொன்னபடி ஒவ்வொரு வரிசைக்கும் 4 செடிகள் வீதம் 28 வரிசைகளாக நடமுடியாதா?

தோட்ட:—அது எப்படி முடியும் சாமி!

மானே:—ஏன் முடியாது? நான் சொல்கிறபடி செய். செடிகளை எடுத்துக் கொள்.

இருவரும் தோட்டத்திற்குச் சென்றனர். மானேஜர் தாம் சொன்னபடியே அவற்றை நடச் செய்தார். தோட்டக்காரன் அதைப் பார்த்து ஆச்சரியப் பட்டான்.

அந்த மானேஜர் அவற்றை எப்படி நட்டிருப்பார்?

---

நிறுத்த உரிமை தொழிலாளர்களுக்கு உண்டு. ஆனால் அது கடைசி பாணமாக இருக்கவேண்டும் என்பதுதான் மகாத்மாஜி, ஜவஹர்லால், கிரி போன்றவர்களுடைய அபிப்பிராய மாகும். இந்தக் கருத்தைத்தான் ஸ்ரீ. ஜோஷியும் வற்புறுத்தி யிருக்கிறார். அவர் பெரம்பூர் வாடியா பார்க்கில் செய்த பிரசங்க மொன்றில், உங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ளவும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ளவும் வேலை நிறுத்தம் செய்ய உங்களுக்குச் சகல உரிமையும் உண்டு. ஆனால் வேலை நிறுத்தங்களின் காரணமாக முதலாளிகளை விடத் தொழிலாளர்தான் அதிக கஷ்டப்படுகின்றனர். இதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு நீங்கள் வேலை நிறுத்தத்தைக் கடைசி ஆயுதமாகவே அனுஷ்டிக்கவேண்டும்' என்று வற்புறுத்தி யிருப்பதை எல்லாத் தொழிலாளர்களும் கவனிக்கவேண்டும். அவசரப்பட்டு வேலை நிறுத்தம் செய்வதால் வீண் தொல்லையே யொழிய எவ்வித லாபமும் இல்லை என்பது உணரத் தக்கது.



## அறிவு விளக்க வினா 2.

### சரியான விடை.

அப்பாதுரை தன் தம்பிக்கு அந்தக் கணக்கை.

```
215) 3 7 1 9 5 (173
     2 1 5
     -----
     1 5 6 9
     1 5 0 5
     -------
         6 4 5
         6 4 5
         -----
```

இவ்வாறு போட்டுக் கொடுத்தான்.

இதன்படி, கீழ்க்கண்டவர்கள் சரியான விடைகளை அனுப்பியிருக்கிறார்கள்:—

7046. சி. கிருஷ்ணன், கரூர்.
13534. ஏ. கருப்பண்ண உடையார், பேரூர்.
4909. T. N. R. கிருஷ்ணசாமி படையாச்சி, செம்மங்காடு, சீகாழி.
சி. தம்பிராசா. திருகோணமலை, சிலோன்.
121. K. பாலசுப்பிரமணியம், ஆத்தூர், திருவாங்கூர்.
அ. சொக்கலிங்கம் பிள்ளை, செவ்வாப்பேட்டை, சேலம்.
17675. ஆ. ராமலிங்கம், மதுரை.
48. அ. சங்கர், பட்டதெபாழை, சிலோன்.
V. வடிவேலு, குஞ்சிகுலாமா, சிலோன்.
உ. அலிமலுக்கு, வெள்ளவத்தை, கொழும்பு.
2154. ஆர். சத்தியபாமா, கும்பகோணம்.

17405. P. வீரப்பன் செட்டி, பெரியகுளம்.
16163. S. V. லக்ஷ்மி வெங்கடாரமணன், சத்தியமங்கலம்.
தி. சிதம்பரநாதன், வட்டுக்கோட்டை, சிலோன்.
ப. முனிரத்தினம், வந்தவாசி.
வெங்கடேசன், திருப்பள்ளித் தெரு, சென்னை.
க. தியாகராசா, வட்டுக்கோட்டை, சிலோன்.
16183. A. V. ராமநாதன், மைலாப்பூர், சென்னை.
225. கொ. மு. தங்கவேலன், பெண்ணாகடம்.
சு. சுருதி, வட்டுக்கோட்டை, சிலோன்,
5128. நந்தகோபால் பிள்ளை, பொன்விளைந்த களத்தூர்.
17226. சி. கார்த்திகேசு, சாவகச்சேரி, சிலோன்.
S. A. கனகசபை, யாழ்ப்பாணம்.
S. கமலம், திருவனந்தபுரம்.
5463. S. ஆறுமுகம், முன்னூர்.
ஏ. வரதன், வளவனூர்.
15952. T. M. வேலாயுதம், திருவல்லிக்கேணி, சென்னை.
6675. அ. ராமசாமி, விழுதியூர்.

குறிப்பு:—மேற் குறிக்கப்பட்டுள்ளவர்களில் பெரியவர்களும் இருப்பதாக அறிகிறோம். நாம் இவ் "அறிவு விளக்க வினா" பகுதியை ஏற்படுத்தியதன் நோக்கமே, இவ்வினாக்களுக்கு விடையளிக்க முயல்வதன் வாயிலாக மாணவர்கள் அறிவு விளக்கம் பெற வேண்டுமென்பது. ஆதலால் நமது சந்தா நேயர்கள் தங்கள் குமாரர்களையும், குமாரத்திகளையும் மாதந்தோறும் வரும் வினாக்களுக்கு விடை கண்டுபிடித்து அனுப்பும்படி செய்ய வேண்டுமேயொழிய, தாங்களே கண்டுபிடித்து அனுப்பக்கூடாதென்று கேட்டுக் கொள்ளுகிறோம். அத்துடன், விடையனுப்பிய சில மாணவர்கள் தங்கள் சந்தா எண்ணைக் குறித்தனுப்ப மறந்து விடுகின்றனர். இனியேனும் விடையனுப்புவோர் தங்கள் சந்தா எண்ணையும் தவறாது குறித்து அனுப்புவார்களாக.

---

## பிழை திருத்தம்.

கடந்த (கார்த்திகை மாத) இதழில், 335-ம் பக்கம் "அறிவுவிளக்க வினா சரியான விடை"யில், "$\frac{1}{4}$ பாகத்திற்கு $\frac{4392}{17567}$ ஆகவும்; 1/5 பாகத்திற்கு $\frac{2769}{15845}$ ஆகவும்" என்றிருப்பதை "$\frac{1}{4}$ பாகத்திற்கு $\frac{4392}{17568}$ ஆகவும்; 1/5 பாகத்திற்கு $\frac{2769}{13845}$ ஆகவும்" என்று திருத்திக் கொள்ளக் கோருகிறோம்.

தொடர் கதை.

# மாயா விரோதி

(ஸி. எஸ். இராமன், எம். ஏ., எல். டி.)

(Rights Reserved)

(398-வது பக்கத் தொடர்ச்சி.)

"நீ எப்படி வேண்டுமானாலும் சொல்லிக்கொள். நாம் இருவரும் ஒருவரையொருவர் நன்றாக அறிந்து கொண்டிருப்பதால் நீ என்னை வைதாலும் எனக்கு லட்சியமில்லை. நான் உண்மையை உடைத்துச் சொல்கிறேன். இந்திரா, நீ கற்புள்ள ஸ்திரீயல்ல," என்று வக்கீல் மோகனரங்கம் கூறினார்.

இந்திரா தன் ஆசனத்தி லிருந்தும் எழுந்து, "நீ பெரிய அயோக்கியன்!" என்றாள். அதை மோகனரங்கம் பொருட்படுத்தவில்லை.

"நீ கற்பிழந்தவள் என்பதை மறுபடியும் சொல்கிறேன். ஜெமீந்தாருக்கு நீ தவறு செய்துவிட்டாய்."

"கோழை!.........கோழை!.........நீ சொல்வது சுத்த முழுப்பொய் என்று உனக்குத் தெரியும். நான் உதவியின்றித் தனிமையில் இருப்பதை ஒரு காரணமாகக்கொண்டு என்னை எப்படி வேண்டுமானாலும் பேசலாம் என்று நினைத்தாயோ?......இதைவிட்டுப் போ.........போ......"

"நான் போகமாட்டேன்."

"தூர்த்தனே, போய்விடு, சீக்கிரம்!" என்று இந்திரா சொல்லிக்கொண்டே வேலைக்காரனைக் கூப்பிடுவதற்கு மேஜைமீது இருந்த மணியையடிக்கப் போனாள்.

"ஆளைக் கூப்பிடு......எல்லோரும் இங்கேவந்து உண்மையை அறிந்து கொள்ளட்டும். உனது புதல்வன் சொந்த புருஷனுக்குப் பிறந்தவனல்ல என்பதைத் தெரிந்து கொள்ளட்டும்," என்று சிரித்துக்கொண்டே மோகனரங்கம் மொழிந்தார்.

அதைக் கேட்டதும் இந்திரா தைரியத்தை இழந்து, சோபாவில் உட்கார்ந்து விட்டாள். பார்ப்பதற்கு இறந்தவள்போல் காணப்பட்டாள்.

"பார்த்தாயா, நான் சொல்வதை நீ மறுக்கமுடியாது," என்று நகைத்துக்கொண்டே வக்கீல் சொன்னார். தாம் அப்பெண்மணியின் மீது ஜயம் பெறுவதாக நினைத்துப் பெருமகிழ்வு பெற்றார்.

"நீ கண்டவாறு பிதற்றினால் அபலை நான் என்ன சொல்லக்கூடும்?" என்று வாய் குழறிக்கொண்டே இந்திரா பேசினாள்.

"நீ கடுமையான சொற்களைக் கொண்டு என்னைத் தாக்கினை. மரியாதையாகப் பேசு. நான் சொல்வதை ஒரு நல்ல பெண்போல் கேள். தைரியம் கொள். யாராவது நாம் பேசுவதைக் கேட்கப் போகிறார்கள்?" என்று முதலியார் மொழிந்தார்.

பின்பு அவர் அவ்வறையில் இருந்த நிலைக்கண்ணாடி முன்பு நின்று கொண்டு, தமது தலையைச் சரிப்படுத்திக் கொண்டார். "டை"யின் முடிச்சை சரியாகப் பண்ணிக்கொண்டார். மறுபடியும் கன்னத்தில் கொஞ்சம் உதிரம் வருதலைக் கண்டு, அதைக் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டார். பின்பு அவள் அருகில் அமர்ந்து; அதிக மரியாதையான அன்பு ததும்பும் குரலில் பேசினார்.

"என்னைக் கொன்றுவிட முதலில் யோசித்தாய்!"

அதைச் சொல்லியதும் அவளைப் பார்த்தார். அவள் பயத்தால் நடுங்குவதைக்கண்டு, வருத்தமடைந்தார்.

"இந்திரா, நான்கு வருஷங்களுக்கு முன் இந்திய ராணுவத்தில் காப்டன் பதவியில் இருந்த **மார்க்கபந்து** இறந்துபோனதை நீ அறிவாய். அவர் உனக்கு அத்தான் ஆகவேண்டும். நான் சொல்வதைக் கேள். நான் உன்மீது வஞ்சம் தீர்த்துக்கொள்ள அதைச் சொல்லுகிறேன் என்று நினைக்காதே. மார்க்கபந்து எட்டு ஒன்பது வருஷங்களுக்கு முன்பு இங்கே வந்தார். அப்பொழுது உன் புருஷனும் நானும் அமெரிக்காவிற்குப் போயிருந்தோம். மார்க்கபந்து ஜெமீந்தாரினியைக் கண்டு சந்தோஷமும் காதலும் கொண்டார். பிறகு வளர்ப்பானேன். நீ அவரைக் காதலித்தாய்." என்றார் மோகனரங்கம்.

கற்சிலைபோல் அசைவற்று இருந்தாள் இந்திரா. அவளுடைய கண்கள் இமை அசையாமல் மோகனரங்க முதலியாரைப் பார்த்தன. உயிர் இருப்பதாக அவை தோன்றவில்லை. வக்கீல் ஏதோ சொல்வதைக் கேட்க வேண்டுமே என்ற கருத்தைக் கொண்டவள்போல் தோன்றினாள். தன்னை உயிருடன் கொல்வதற்கு அவர் அப்படிப் பேசுகிறார் எனக்கொண்டாள்,

மேலும் மோகனரங்கம் சொல்லுவதாயினார் :—"மார்க்கபந்து உனது புருஷன் வரும்வரையில் இருந்தார் இம்மாளிகையில். பிரபு வந்த இரண்டு மாதங்களுக்குப் பின் நீ கர்ப்பமாய் இருப்பதாகச் செய்தி வந்தது. உன் புருஷன் அதை நம்பினான். தனக்கு ஒரு குழந்தை பிறக்கப் போவதாக எண்ணினான். உன் குழந்தையைத் தன் குழந்தையென்று எண்ணி ஏமாந்து போனான். உன்னை அவன் நேசிக்கவே இல்லை. பாலகிருஷ்ணனைத் தனது வாரசு என்று கொண்டு மகிழ்வு பெற்றான். நான் சொல்வது உண்மைதானே?"

"என்ன உண்மை?" என்று கற்சிலை வாய் திறந்து பேசுவதாயிற்று.

"நான் சொல்வது முழு உண்மை. ஜெமீந்தார் உனக்கும் மார்க்கபந்துவிற்கும் ஜனித்த பாலகிருஷ்ணனைத் தனக்குப் பிறந்தவன் என்று நினைத்துக் கொண்டிருக்கிறான். உண்மையை எனது சிநேகிதன் அறிவானேயானால் அவன் உன்னை உயிரோடு வைக்க மாட்டான். நீ அவனுக்கு பெருத்த துரோகம் செய்து விட்டாய். உன்னைக் கொல்லாவிட்டால் நீதிபதி முன்பு கலியாண விடுதலை பெறலாம்; உன்னையும் பாலகிருஷ்ணனையும் வீதிகளில் ஓட்டைசட்டிகள் எடுத்துச் செல்லுமாறு செய்யலாம்; வேறு பெண்ணை மணம் புரிந்து குட்டி குழந்தைகளைப் பெறலாம். இந்திரா, உனனுடைய இரகசியத்தை நான் மட்டும் நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறேன். நாம் இருவரும் மனம் ஒருமித்த நண்பர்களாய் இருப்போம்;



அப்பொழுதுதான் இந்த இரகசியம் அந்தரங்கமாகவே இருக்கும்," என்று மோகனரங்கம் கூறிவிட்டு, அவளுக்கு வந்தனம் செய்து, கதவருகே சென்றார். இந்திரா பதில் வார்த்தைகள் பேசுவது தெரிந்தமையால் அவர் போகாமல் நின்றார்; அவள் மொழியைக் கேட்டார்.

"ஐயா, மரியாதையாகக் கூப்பிடுவது பிசகு. நீ ஒரு பெரிய சைத்தான். உன்னுடைய துர்குணம் என்ன வேணுமானாலும் சொல்லும். நீ கூறும் கதையை யாராவது நம்புவார்களா?" என்று கேட்டாள் இந்திரா.

"எனது நண்பன் ஜெமீந்தார் கூட நான் சொல்லுவதை நம்பமாட்டானா?" என்று மோகனரங்கம் கேட்டார்.

"மாட்டார். தக்க ருஜு வேண்டாமா?"

"நீ கெட்டிக்காரி என்று எனக்குத் தெரியும். நான் மூடன் அல்ல. என்னிடம் ருஜுக்கள் இருக்கின்றன. காப்டன் மார்க்கபந்துவின் கடிதங்கள் உள."

"கடிதங்களா!" என்று ஆச்சரியத்தோடு இந்திரா கூறினாள். கீழே விழாபடி ஒரு நாற்காலியின் முதுகைப் பிடித்துக் கொண்டாள்.

"ஆம். உன்னுடைய ரகசியப் பெட்டியில் கடிதங்கள் இருப்பதாக நீ நினைத்துக் கொண்டிருக்கிறாய்."

"அயோக்கியனே!"

"வைவதால் உனக்குப் பலன் ஒன்றும் ஏற்படாது. சரி. நீ என்னிடம் சிநேகமாகத்தான் இருக்க வேண்டும். நான் ஒரு புதிய பங்களாவை விலைக்கு வாங்கி யிருக்கிறேன். நாளைக்கு எட்டாவது நாள் மத்தியானம் மூன்று மணிக்கு நீ அங்கு வந்து என்னைக் காண வேண்டும். இந்த மாளிகையின் மேற்குப் புறத்தில் கால் மைல் தூரத்தில் என் வீடு."

"நான் அயோக்கியர்களைக் காணச் செல்லும் வழக்கம் கொண்டிருக்கவில்லை."

"நீ எதற்கும் யோசனை செய்வாய்."

"ஒருகாலும் முடியாது..............பாவி! உன்னை நான் வெறுக்கிறேன்...........உன்னைக் காண்பதை விட இறந்து போவதே மேல்."

"அப்படிச் செய்தாலும் அது பாலகிருஷ்ணனைக் காப்பாற்றாது. இளைய ஜெமீந்தாரன் ஆன பாலகிருஷ்ணனுடைய கதியை யோசிக்க வேண்டும் நீ."

"உனக்கு என்மீது இரக்கம் கிடையாதா?"

"நான் உன்னை நேசிக்கிறேன். அதுதான் நான் சொல்ல முடியும்."

"ஐயோ!...........நான் என்னையும் என் மகனையும் கொன்று விடத்................"

"நீ அதை செய்ய மாட்டாய். நீ வருவதாக உறுதி மொழி கொடு; இல்லாவிட்டால் கடிதங்களை ஜெமீந்தாருக்கு அனுப்பி விடுவேன்."

"பாவி! அயோக்கியா!"

(தொடரும்)

# " ஆனந்தபோதினி " பஞ்சாங்கம்.

ஈசுவர௵ மார்கழிமீ—கலியுகாதி 5039, சாலிவாகனம் 1860,
பசலி 1347, கொல்லமாண்டு 1113, ஹிஜரா 1356,
இங்கிலீஷ் 1937௵ டிசம்பர்மீ—1938௵ ஜனவரிமீ


| மார்கழிமீ | டிசம்பர்மீ | வாரம். | திதி. | நக்ஷத்திரம் | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 15 | புதன் | து11-20 | ப✻22-10 | சி22-10அ | கி✻, பிரதோஷம், மூலா கார்த்திகை நா-12-23 |
| 2 | 16 | வியா | திர8-8 சது54-5 | திரு15-33 | மா60 | பாஷாண சதுர்த்தசி, மாச சிவராத்திரி, அவமாகம் |
| 3 | 17 | வெள் | ○44-45 | ரோ8-20 | மா8-20சி | ○, நடராஜாபிஷேகம்(இரா |
| 4 | 18 | சனி | பிர35-23 | மிரு0-48 திரு53-23 | சித்60 | மார்க்கசிரபகுளம், [வில்) அருந்திரா தரிசனம் |
| 5 | 19 | ஞா | துதி26-38 | புன46-43 | சித்60 | |
| 6 | 20 | திங் | திரி18-43 | பூச41-8 | சித்60 | |
| 7 | 21 | செவ் | சது12-0 | ஆயி36-58 | சித்60 | |
| 8 | 22 | புதன் | பஞ்6-55 | மக34-30 | சி34-30அ | |
| 9 | 23 | வியா | சஷ்3-55 | பூர34-3 | சி34-3மா | |
| 10 | 24 | வெள் | சப்2-55 | உத்35-38 | சி35-38அ | |
| 11 | 25 | சனி | அஷ்4-8 | அஸ்39-43 | மா60 | |
| 12 | 26 | ஞா | நவ7-13 | சித்44-23 | சித்60 | |
| 13 | 27 | திங் | தச11-58 | சு50-58 | அ50-58ம | |
| 14 | 28 | செவ் | ஏகா17-53 | வி58-25 | ம58-25சி | |
| 15 | 29 | புதன் | த்24-33 | அனு60 | சித்60 | கதிரறுக்க, களஞ்சியம் வை |
| 16 | 30 | வியா | திர31-28 | அனு6-15 | சித்6-15பி | மாசசிவராத்திரி [க்க |
| 17 | 31 | வெள் | சது38-10 | கே14-8 | மா14-8அ | குளம், கிணறு வெட்ட |
| 18 | 1938௵ ஜனவரிமீ 1 | சனி | ●44-43 | மூல21-43 | சித்60 | சர்வந்திர அமாவாசை |
| 19 | 2 | ஞா | பிர50-25 | பூரா28-43 | சி28-43அ | புஷ்யசுத்தம், கடன்தீர்க்க |
| 20 | 3 | திங் | துதி55-23 | உத்35-3 | மா35-3அ | சந்திரதெரிசனம் |
| 21 | 4 | செவ் | திரி59-25 | திரு40-30 | சித்60 | ஏருவிட, விதை விதைக்க |
| 22 | 5 | புதன் | சது60 | அவி45-5 | பிர45-5சி | மாச சதுர்த்தி விரதம் |
| 23 | 6 | வியா | சது2-18 | சத48-30 | ம48-30சி | மருந்துண்ண மாடுவாங்க |
| 24 | 7 | வெள் | பஞ்4-8 | பூர50-45 | சித்60 | சஷ்டி, எற்றம் ஸ்தாபிக்க |
| 25 | 8 | சனி | சஷ்4-35 | உத்51-38 | சி51-38ம | யாத்ரை, பிராணம் செய்ய |
| 26 | 9 | ஞா | சப்3-40 | ரே51-0 | அ51-0சித் | உழவு செய்ய, கதிரறுக்க |
| 27 | 10 | திங் | அஷ்1-13 நவ57-25 | அஸ்49-0 | சித்60 | அவமாகம், கெற்போட்டம் நிவர்த்தி நா-21-45 |
| 28 | 11 | செவ் | தச52-0 | பர45-38 | சித்60 | வியாதியஸ்தர் குளிக்க |
| 29 | 12 | புதன் | ஏகா45-18 | கி✻40-45 | அ40-45சி | வைகுண்ட ஏகாதசி, முக்கோட்டி ஏகாதசி, கி✻ |
| 30 | 13 | வியா | து37-43 | ரோ35-0 | மா60 | போகி பண்டிகை |

| | | | |
|---|---|---|---|
| சனி | | கே | |
| செ | 10-தனு-சுக் | | |
| குரு | | | |
| சூ-பு | சுக் ராகு | | |

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMY MUDALIAR,
AT THE " ANANDA BODHINI " PRESS,
No. 6, LAWYER CHINNATHAMBI MUDALI STREET, MADRAS.


## பூவுலக வாழ்க்கைக்கு இன்றியமையாத சிங்கபலத்தைத் தருவதேது?

முறையாய்ச் செய்த அயக்காந்த செந்தூரக்கலைக்காட்டிலும்
தேகபலத்தைத் தரும் ஔடதம் வேறொன்றுமில்லை.




**விளம்பரம்.** இதைக் கண்ணுறும் கனவான்களே! இந்த லேகிய செந்தூரங்கள் சாமான்யமானவைகளல்ல. அபாரமான பலத்தைத் தாக்கூடிய சக்தி அமைந்துள்ளவை. உறுதியாய் இவற்றை நம்பி வாங்கிச் சாப்பிட்டால் ஒரு தடவையிலேயே இவற்றின் குணம் நன்கு விளங்கும்.

இந்த லேகிய செந்தூரங்களால் நிவர்த்தியாகும் முக்கிய வியாதிகளாவன :—

தற்காலத்தில் மனிதரின் பால்ய சேஷ்டையாலும், இரத்தப் போக்காலும் அவருக்கு உண்டான 20 வகை மேகரோகங்கள், சூலைரோகம், குன்மரோகம், பித்தபாண்டு, கை கால் முடக்கு, ஓடுவாய்வு, பித்த எப்பம், நெஞ்சு தொண்டை எரிச்சல், வயிற்றுப்பிசம் அஜீரணம், பசியில்லாமை, தாது ஹீனம், தேக உளைச்சல், கண்ணில் நீர்வடிதல், சோம்பல், நித்திரையில்லாமை, தலை சுழற்றல், நீர் இறங்கும்போது பொறுக்கமுடியாத பாதையைத் தரும் தந்திமேகம் முதலியவைகள் ஆச்சரியப்படத்தக்க விதமாய் நீங்கிவிடும். பயங்கரமான மேக சம்பந்த வியாதிகளைப் பத்தே வேளையில் போக்கி சப்த நாம்புகளுக்கும் முறுக்கேற்றி அபரிமிதமான இரத்த விருத்தியைப் பெருக்கி பலத்தைத் தருவதில் இதற்குமிஞ்சின இலேகிய பஸ்பம் வேறெங்குமில்லை என்று நாம் உறுதியாகச் சொல்லுவோம். இதல்லாமல் தேகத்தைப் புஷ்டியாக்கித் தேகத்தடிப்பு நகக்கண் வெளுத்திருத்தல் முதலிய வியாதி

களைக் கண்டித்து தினந்தோறும் மலத்தை தாராளமாய்ப் போக்குவதில் இந்தலேகிய செந்தூரங்களே முதன்மையானதுயென்பதை நாம் எமது அனுபவத்தில் கண்டிருக்கிறோம். நிற்க இந்த லேகிய செந்தூரங்கள், மேற்கண்ட வியாதிகளைக் கண்டிப்பாய் நிவர்த்திக்குமா என்னும் சந்தேகமுடையோர் பரீக்ஷார்த்தமாக முதலில் 48-நாளாவது வாங்கி யுண்டால் இவற்றின் அபார குணம் தெரியவரும். தவிர யாங்கள் இம்மகத்துவம் பொருந்திய லேகிய செந்தூரங்களை எவ்வளவு சிறப்பித்துக் கூறியபோதிலும் அது தகும். மேலும் இவற்றை நோய் உள்ளவரே தான் சாப்பிடவேண்டும் என்ற அவசியமில்லை; யாவரும் சாப்பிடலாம். நோய் உள்ளவர்களைவிட நோய் இல்லாதவர்கள் எண்ணிக்கையாக 48-நாள் இந்த லேகிய செந்தூரங்களை யாதும் பத்தியமின்றிச் சாப்பிட அவர்க்கு நல்ல பலம் ஏற்படும். இது தவறாது. இவற்றைத் தருவித்து நண்பர் எண்ணிக்கையாகச் சாப்பிட்டு 10-நாளைக்குள் குணம் இல்லாவிடில் உடனே தெரியப்படுத்தினால் கட்டாயம் இவற்றிற்கு வாங்கிய பணம் வாப்ஸ் செய்யப்படும். தவிர மேற்காட்டிய நோய்கள் உடையோர் 48-நாட்கள் சாப்பிடுவார்களேயானால் அவை முழுதும் நீங்கிவிடும். அப்படி நீங்கிக் குணம் ஏற்படாவிடில் நாங்கள் அதற்கு உத்தரவாதிகளாவோம். யாங்கள் இவ்வளவு அருமையான லேகிய செந்தூரங்களை எவ்வளவோ சிரத்தையுடன் கஷ்டப்பட்டு முடித்துப் பரோபகார்த்தமாக வெளியிட்டோம். இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரங்களுக்குப் பொன்மெடல், வெள்ளிமெடல், பெற்றதல்லாமல் ஆயிரக்கணக்கான யோக்கியதாம்ச பத்திரங்களும் பெற்றிருக்கின்றோம். ஆதலின் நமது லேகிய செந்தூரங்கள் நாம் சொன்னபடி குணத்தைக் கொடுக்கும் என்பதைப்பற்றி ஜவாப்தாரியாக யிருக்கக் காத்துக் கொண்டிருக்கிறோம்; இது உண்மை. இவற்றை ஒரேதரம் தருவித்துப் பாருங்கள்; எமது உண்மை விளங்கும்.

வாதாதிக்க தோஷத்தினாலாவது, தூரப்பியாசத்தினாலாவது, அதிக மனக்கவலையினாலாவது, அடிக்கடி உண்டாகும் நோயினாலாவது, மற்றெந்த காரணத்தினாலாவது பலமிழந்தவர்கள் எண்ணிக்கையாக ஷை லேகிய செந்தூரங்களைப் புசிப்பார்களானால் இவை தேகாரோக்கியம், வலிமை, அழகு முதலியவற்றை அவர்க்குக் கொடுத்து அவர்களைச் சந்தோஷிக்கச் செய்யுமென்பதில் தடையில்லை. வெளியூர்க் கனவான்கள் இந்த லேகிய செந்தூரங்களில் முழு நம்பிக்கை வைத்து ஒரே ஒருதரம் இவற்றைப் பரீக்ஷிப்பார்களானால், அவர்கள் அவசியம் ஆனந்தமடைவார்கள்.

இந்த லேகிய செந்தூரங்களுக்குப் பத்தியமே கிடையாது. எந்தப் பலகாரங்களையும் நீக்குதலின்றி சாப்பிடலாம். மருந்து சாப்பிடும்போது பசி அதிகமாய் எடுக்கும் ஆதலால் பச்சைப்பயற்றுக் குழம்பு, கறி, மார்க்கண்ட சூப்பு, இவைகளை அதிகமாகப் பசியைத் தணிக்கக்கூடிய விதமாகத் தாமதம் செய்யாமல் சாப்பிடல் வேண்டியது. இவற்றைப் புசிக்கும்போதெல்லாம் பலகாராதிகள் சாப்பிடல் வேண்டும். தயிர், பால் முதலியவைகள் எவைகளாயிருந்தாலும் சந்தேகமின்றி சாப்பிட்டு வரலாம்.

இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரங்களை மட்டும் ஒருவர் தருவித்து எண்ணிக்கையாக 48-நாள் சாப்பிடுவாரே யானால் இவை தேகத்தில் ஊற ஊற, மேகமெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கி அவர் தேகமானது வலுத்துப் புதிய ரத்தம் பரவி தன் வாழ்நாள் பரியந்தம் இளைக்காமலிருக்கும். இவ்வண்ணமாய்ப் புருஷன் பெண்சாதி இருவரும் ஏககாலததில் ஒற்றுமையாய்ச் சாப்பிட்டு வந்தார்களேயானால், அவர்க்கு உதிக்கும் மக்கள் மிகுந்த தேஜஸோடு தோன்றுவார்கள். இது உண்மை. இதை அதிகம் எழுதுதல் அனாவசியம். இந்தியா, ஸிலோன் ஆகிய உள் நாடுகளுக்கு 24-நாள் சாப்பிடக்கூடிய லேகியமும் செந்தூரமும் விலை ரூ. 1-12-0. போஸ்டேஜ் அணு 8. ஒரே தடவை 48-நாள் மருந்து வாங்குவோர்க்கு போஸ்டேஜ் உள்பட ரூ.4.

பர்மா, பினாங்கு, சிங்கப்பூர், செட்டால் முதலிய அயல்நாடுகளுக்கு 24 நாள் சாப்பிடக்கூடிய மருந்து விலை ரூ. 1-12-0. தபாற்கூலி ரூ. 1-4-0.

48-நாள் மருந்து வாங்குவோருக்கு போஸ்டேஜ் உள்பட ரூபா 5-8-0 சிங்கப்பூர், பினாங்கு, மலாக்கா முதலிய வெளிநாடுகளுக்கு வி. பி. ஆர்டர் இருந்தாலும் முன்பணம் அனுப்பாதவர்களுக்கு மருந்து அனுப்பப்படமாட்டாது.

**விலாசம்:—லேகியம் டிபோ,**
**44, நம்புலையர் தெரு, மதராஸ்.**

---

## நரை மயிர் கருக்குந் தைலம்



தற்காலத்தில் பலவிதமாகச் செய்து விற்கப்பட்டு வருகிற கப்புகள் மயிரைச் செம்பட்டையாகவும், பசுமை நிறமாகவும், சாம்பல் வர்ணமாகவும் ஆக்கி விகாரப்படுத்தி விடுகின்றன. நமது தைலமோ நரைத்த மயிருக்குப் பூசிய 3 நிமிஷத்திற்குள்ளாக நரைப்பதற்கு முன்பிருந்த கருமை நிறத்தையும் பளபளப்பையும் உண்டுபண்ணும். மேலே கூறியுள்ள விகார குணங்கள் இதில் உண்டாகமாட்டா. இதைப் பூசிய பிறகு முகலட்சணமும் வசீகரமு முண்டாகிறபடியால் வயோதிகரும் வாலிபரைப்போல் தோற்றப்படுவார்கள். இதை உபயோகிக்கும் விதம் பார்சலோடு தெரிவிக்கப்படும். இதன் விலை ரூபா 1.

## கர்ண பிந்து



காதில் சீழ் வடிதல், காது குத்தல், காது கேளாதிருத்தல், காதில் நமைச்சல் முதலிய வியாதிகளுக்கு இந்த மருந்தில் 2-துளி காலை மாலைகளில் காதில் விட்டுவர, காதிலுள்ள நோய்களெல்லாம் நீங்கிவிடும். புட்டி 1-க்கு அணு 4. வி. பி. தபால்கூலி வேறு.

## (காட்லிவர் ஆயில்) மீன் எண்ணெய்

இது பலத்தை உண்டாக்குகிறது. தவிர இரும்பலினால் உண்டாகும் இளைப்பையும் அடக்கும். இளைத்தவர்கள் உபயோகித்தால் தேகம் புஷ்டியாகும், இரத்தத்தைச் சுத்தி செய்யும், சுவாசகாசங்களின் ரோகத்தை குணப்படுத்தும், சரீரத்தினுடைய ஒவ்வொரு பாகத்துக்கும் பலத்தைக் கொடுக்கும். இதைக் குழந்தைகளுக்கும் கொடுக்கலாம். புட்டி 1-க்கு விலை ரூபா 1—8—0.

---

தனலட்சுமி கம்பெனி, நெ. 1/6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்

# சர்வதேள் விஷ சஞ்சீவினி.

(ரிஜிஸ்டர் டிரேட் மார்க்)

பட்டவுடனே விஷம் பறக்கும்! அழுதவன் சிரிப்பான்!!

இதில் குணமில்லையென்று நிரூபிப்பவர்களுக்கு 100-ரூபாய் இனாம்.




நமது நாட்டிற்கு இது அவசியமாய் ஒவ்வொரு குடும்பத்திலும் சதா கையிருப்பாய் இருக்கவேண்டிய ஓர் ஔஷதமாகும். இது ஆங்கில யூனானி தமிழ் வைத்திய நிபுணர்களால் நன்கு மதிக்கப்பட்டுள்ளது. இதை நாள்பட வைத்திருப்பதால் இதன்குணம் சற்றும் குறையாது. தேள், நட்டுவாய்க்காலி, செய்யான், பாம்பு, எலி முதலியவற்றின் விஷங்களை இரண்டொரு நிமிஷங்களில் இது அடியோடு நீக்கக்கூடியது. எண்ணிறந்தோர் இதனால் சுகமடைந்திருப்பது பிரத்தியக்ஷ அனுபவமானதால் இதைப்பற்றி நாம் அதிகம் கூறவேண்டியதில்லை. இது இரண்டுவித மருந்துகள் அடங்கியது. இதை உபயோகிக்கும் முறை மருந்தோடு அனுப்பப்படும். விலை:—இரண்டுவித மருந்தும் அடங்கிய பாக்கெட் 1-க்கு அணா 8. தபாற் கூலி அணா 4. டஜன் 1-க்கு விலை ரூபா 5.

ஏககாலத்தில் 3-பாக்கெட் வாங்குவோருக்குத் தபாற்கூலி இனாம், வியாபாரிகளுக்கு 100-க்கு 25 கமிஷன் கொடுக்கப்படும்.

# மேஹ ராஜ சஞ்சீவி எண்ணெய்

இந்த எண்ணெயை ஒருமுறை மூன்றுநாள் சாப்பிட்ட மாத்திரத்திலேயே, கிரந்தி, மேக தாமரை, மேக நமைச்சல், மேக இரணம், மேகப் புண், கால் கைகளிலே சேரும் மேக நீர், மேக வெடிப்பு, எல்லாவகைகளான வெள்ளை, மூத்திரக் கருவியிலே தோன்றும் பலவித வியாதிகள் தீரும். அநேக காலமாக இருக்கும் வியாதிகளுக்கு ஒருமுறை சாப்பிட்டு, 15 நாள் பொறுத்து, மற்றொரு முறை சாப்பிடவேண்டும்.



3-நாள் எண்ணெய், புட்டி 1-க்கு ரூபா 1—8—0; மருந்து ஆர்டர் செய்யும்போது வியாதியின் பூரண நிலவரத்தை தெரியப்படுத்தவும்.

# சுகபேதி மாத்திரை

இந்த மாத்திரையில் 2-முதல் 5-வரை நிரோக நிடமறிந்து மாத்திரையைச் சாப்பிட்டு கொஞ்சம் ஜலம் சாப்பிடவும். இவ்விதம் சாப்பிட்டால் சுகமாய் பேதியாகிவிடும். மாத்திரையை அனுப்பும்பொழுது உபயோகிக்கும் முறை தெரிந்துகொள்ளலாம்.

25-மாத்திரை அடங்கிய புட்டி 1-க்கு விலை அணா 6.

---


தனலட்சுமி கம்பெனி, நெ. 1/6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்

# சர்வமேக நிவாரணத் தைலம்




இந்தப் பிரசித்திபெற்ற இராஜ சஞ்சீவி திராவகத்தை, காலை மாலை இரண்டு வேளைகளிலும் 10-நாட்கள் வரை உட்கொண்டால் வெகு நாட்களாகத் தேகத்தில் ஊறிய மேக ரோகங்கள், மேக வாய்வு, தனுர்வாதம், முழங்கால் வாதம், குதிகால் வாதம், சகலமான தடிப்புகள், மேகரோகத்தால் உண்டான வெடிப்பு இரணங்கள், குழிப் புண்கள், புரையோடுகிற புண்கள், திமிர் வாய்வு, கைகால் விரல்களில் மேகநீர் தங்கிய நோய்கள், கிரந்தி முதலிய கிரந்திப் புண்கள், தொடைவாழை, படைகள், நகக்கணுநோய், சகல மூலங்கள் முதலிய ரோகங்கள், நெருப்பிலிட்ட பஞ்சு போல் போகும். இது அநேக ஜனங்களின் துன்பத்தை நீக்கிச் சௌக்கியத்தை உண்டு பண்ணி அதிக அனுபவத்திற்கு வந்தது. கடின பத்தியமின்றி, பால், நெய், கறி முதலியவைகளுடன் சாப்பிடக்கூடியதும், பேதி, இளைப்பு, ஆயாசம் முதலியவைகளை உண்டாக்காமல் சுகமாக்கி வியாதிகளைக் கண்டித்துச் சுகப்படுத்தக்கூடியதுமாகிய உண்மையான மருந்து. இதன் விலை ரூபா 1—8—0. தபாற்கூலி வேறு.

# சர்வபடை சம்மாரன்



சரீரத்தின் இடுக்கான இடங்களாகிய தொடையின் இடுக்கு, அக்குள், இடுப்பு முதலிய இடங்களில் சிறிது சிறிதாகப் படர்ந்து இரவில் ஓயாத நமைச்சலைத் தந்து நித்திரையைப் பங்கப்படுத்திச் சரீரத்துக்கு அதிக கஷ்டத்தை உண்டுபண்ணும் படைகள், ஒரே தடவையில் இந்தச் சர்வபடை சம்மாரன் என்னும் தைலத்தை உபயோகித்த மாத்திரத்தில் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். புட்டி 1-க்கு விலை அணா 4. தபாற்கூலி வேறு.

# கண்நோய் மருந்து



இது கண்நோய், கண்குத்தல், கூசல், நீர் வடிதல், மங்கல், அந்திமாலை, பீளை கட்டல், சதை வளர்ந்திருத்தல், கண் சிவப்பு, எரிச்சல், கண் இமை புருவம் இவைகளில் வலி, கண் புகைச்சல் இவைகளைக் குணப்படுத்தும். மாணாக்கர்களுக்கும் ஆழ்ந்த பார்வையோடு வேலை செய்பவர்களுக்கும் இது மிகச்சிறந்த ஔஷதம். இதை உபயோகிப்பவர் கண்ணாடி போடவேண்டியதில்லை.

புட்டி 1-க்கு அணா 8. தபாற்கூலி வேறு.

---

தனலட்சுமி கம்பெனி, நெ. 1/6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்

# நாராயண சஞ்சீவித் தைலம்

இத்தைலம் முழுவதும் பச்சிலைகளாலும், பசும்பால் முதலிய சிரேஷ்டமான வஸ்துக்களாலும் ஆயுர்வேத முறைப்படி மிகப் பரிசுத்தமாகத் தயார் செய்யப்பட்டது. இத்தைலத்தில் ஸ்நானம் செய்வதினால் தலைவலி, ஒற்றைத் தலைவலி, மண்டையிடி, மண்டைக்குத்தல், கண் எரிச்சல், கண்களில் நீர் வடிதல், சாலேஸ்வரம், காதுநோய், தலைபாரம், அதிக வெய்யிலினால் உண்டாகும் சிரரோகங்கள், சரீரதாபம், மூளைக்கொதிப்பு முதலியவைகள் ஆச்சரியப்படும் விதமாய்த்தீரும். தொடர்ச்சியாய்ச் செய்துவரும் இதன் ஸ்நானங்களினால் நரைத்த மயிர் கருத்துவிடும். மூளையைக் குளிரப்பண்ணி அறிவையும் திடச் சித்தத்தையும் உற்சாகத்தையும் உண்டு பண்ணுவதில் இது நிகரற்றது. சாராய சத்து முதலிய ஆங்கில வாசனைகள் இதில் சேர்க்கப்படவில்லை. சுத்தமான பச்சிலை, கிழங்கு புல் முதலிய இந்திய வாசனைகளே சேர்க்கப்பட்டிருக்கின்றன. தினம், இதனைத் தலையில் தடவி வாரி வருவதினால் மயிர் கருப்புப் பட்டைபோல் பளபளப்பாகக் கருத்து ஆலம் விழுதுபோல் நீண்டு வளரும். இன்னும் இது, உஷ்ணத்தைத் தணித்து ஞாபக சக்தியையும், முகவசீகரத்தையும் உண்டாக்கும். கஷ்டப்பட்டு வேலை செய்தவர்களும் வெகுதூரம் நடந்தவர்களும் படுக்கும்போது சிறிது தைலத்தை உள்ளங்கை உள்ளங்கால்களில் தேய்த்துக்கொண்டால் காலையில் எழுந்திருக்கும்போது திரேகம் ஆரோக்கியமாய் இருக்கும். 5 பலம் டின் 1-க்கு ரூபா 1. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.



# கூந்தல் வளரும் தூளி



இதை நல்லெண்ணெய் அல்லது தேங்காய்யெண்ணெயில் கலந்து பிரதிதினம் மயிருக்குப் பூசிவந்தால் கூந்தலானது ஆலம் விழுதுபோல் உண்மையாய் வளரும். அதில் பேன் சேராது; சுண்டு உண்டாகாது; மயிர் உதிராது. வழுக்கை விழுந்த இடத்திலும் மயிர் முளைக்கும். புட்டி 1-க்கு அணா 12. தபாற்கூலி வேறு.

# சூதக நிவாரணி மாத்திரை




ஸ்திரீகளுக்கு மாதாந்திர பஹிஷ்டை (சூது) கிரமமாக வெளிப்படாமல் காலந் தவறி வெளிப்படுதல், சிலகாலம் வெளிப்படாமலேயிருத்தல், வயிற்றுவலி, ஜுரம், மார்பு நோய், மயக்கம், கழுத்திசிவு, ஜன்னி தோஷங்கள், மஞ்சட் காமாலை, உணர்ச்சியின்றி சிறுநீர் பெருக்கெடுத்தல், மூர்ச்சையாகுதல், மார்பு படபடவென்று அடித்துக்கொள்ளுதல், மேல்மூச்சு வாங்குதல், மர்மஸ்தானத்தில் பொறுக்கமுடியாத வேதனை உண்டாகுதல் இன்னும் மாதர்களுக்குக் காணும் சூது சம்பந்தமான எல்லா வியாதிகளையும் கண்டித்து கருப்பகோசத்தைச் சரிப்படுத்திச் சந்தான விருத்தியை உண்டாக்கும், ஒரு டப்பி மாத்திரை விலை ரூபா 1.

தனலட்சுமி கம்பெனி, நெ. 1/6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்

# அயத்தங்கத் திராவகம்

மித்திரர்களே! இந்த அபூர்வ மருந்தானது அநேக கொடிய வியாதிகளை ஆச்சரியமாகக் கண்டிக்கக் கூடியது. இதை அநேக ஆயிரக் கணக்கான ஜனங்கள் உபயோகித்துச் சந்தோஷிக்கின்றனர். வியாதியினாலாவது வேறு எந்தக் காரணத்தினாலாவது இளைத்துப்போயிருக்கும் தேகத்தைப் புஷ்டியாக்கி பலவிருத்தி தருவதில் இது நிகரற்ற மருந்தாகும். ஆங்கிலேய முறைப்படி தயாரிக்கப்பட்ட அருமையான மருந்து. சாப்பிடுவதற்கு மிக இன்பமாயிருக்கும். இருமல் நோய்கண்டு அவஸ்தைப்படுபவர்கள் இதை உட்கொண்டால் இரண்டே வேளையில் ஆச்சரியமான சுகத்தை யடைவார்கள். இதனால் உண்டாகக்கூடிய அநேக குணங்களில் முக்கியமான சிலவற்றை இங்கே குறிக்கிறோம்.




இது, நரைத்த மயிரைக் கருப்பாக்கும், உஷ்ணத்தினாலாவது, புழு வெட்டினாலாவது மயிர் உதிர்வதை நிறுத்தும்; இதனால் நீர் வியாதிகள் தீரும். கண்ணெரிச்சல், கைகால் காந்தல் இவை தீரும். இன்னும் இது முக வசீகரத்தை உண்டாக்கும். தேக அசதியை யோட்டும். ஜீரண சக்தியையும், நல்ல பசியையும் உண்டாக்கும். மனதை அதிக உற்சாகப்படுத்தும், நரம்புகளுக்கு அதிக வலுவைத் தரும், தேகத்தில் நல்ல இரத்தத்தைச் சுரப்பிக்கும், க்ஷயரோகத்தை க்ஷணத்தில் தீர்க்கும், சத்த தாதுக்களுக்கும் நல்ல பலத்தைத் தரும், மூலச்சூடு, மூலவாய்வு, மலச்சிக்கல் ஆகியவை தீரும்.

இந்தச் சஞ்சீவியை நல்ல போஜனத்துடன் 15 நாள் சாப்பிட்டால் இணையில்லாத ஆனந்தத்தைத் தரும். மனிதர் தாம் இழந்துபோன தேகதிடத்தைப் பழையபடி யடைவதற்கு இதைவிட வேறு மருந்தே கிடையாது. ஒருவர் 40-நாள் மருந்தை உட்கொள்ளும்பக்ஷத்தில் அவனுடைய தேகம் வஜ்ஜிரமேயாகும். இதற்கு யாதொரு பத்தியமும் கிடையாது.

20-நாள் மருந்து விலை ரூபா 1. 40-நாள் மருந்து விலை ரூபா 1-12-0.

# கருவைத் தடுக்கும் ஔஷதம்

இந்த இரகசிய கருவைத்தடுக்கும் ஔஷதம் ஜர்மன் தேசத்தில் செய்யப்பட்டு அநேக பண்டித மேதாவிகளால் பரிசோதிக்கப்பட்டு நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்றிருக்கிறபடியாலும் நமது தேசத்தில் வரவுக்கு மிஞ்சிய குழந்தைகளைப் பெற்று குடும்பங்கள் கஷ்டப்படுவதை யோசித்தும், சில பலஹீனப்பட்ட தாய்மார்கள் அடிக்கடி கர்ப்பம் தரித்து தனது சரீரம் நொந்து ஹீனதிசை யடைவதைக் கண்ணுற்றும் தற்சமயம் எம்மால் ஷை ஔஷதம் தருவிக்கப்பட்டு விற்பனை செய்து வருகிறோம். உபயோகிக்கும் முறை ஔஷதத்துடன் அனுப்பிவைக்கப்படும்.



இதன் விலை ரூபா 2.

தனலட்சுமி கம்பெனி, நெ. 1/6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்

187535 187535

# புத்திர சந்தான எண்ணெய்



ஆண்மலடு சொன்னாலும் சொல்லலாகும்
அப்பனே பெண்மலடு யாரு மில்லை
என்மலடாய்ப் போவதென்று கேட்பா யாகில்
இயம்புவேன் கருக்குழியில் சோரிசேர்ந்தால்
ஊன்மிகுந்தால் புழுதரித்தால் உதிரங் கெட்டா
ஓங்கார பிரணவத்தில் வாயு சேர்ந்தால் [ல்
தான்மதத்து விபரீதச் சேர்க்கை செய்தால்
தலையாட்டுப் பேய்பிணியால் தரியாதென்னே.

ஸ்திரீகளின் கருக்குழியினிடத்தில் புழுக்கள் உண்டாகி அவ்வப்போது வித்தைப் புசித்துவிடுவதனாலும், விபரீதச் சேர்க்கையாலும், கருக்குழியினிடத்தில் சதை வளர்ந்து சோறி பற்றி இரத்தங் கட்டியிருப்பதாலும், கருக்குழி மதத்துக் கொழுத்திருப்பதாலும், மூலச் சுழியில் வாயு பித்தம் தங்கியிருப்பதனாலும் கருதரிக்காது.

இந்த எண்ணெயைக் காலை மாலை இருவேளையும் 1 அல்லது 2 காசு அளவு உள்ளங்கையில் விட்டுச் சாப்பிடவேண்டியது. இப்படி 15-நாள் சாப்பிட்டால் இது கருக்குழியிலிருக்கும் ஷை குற்றங்களை நீக்கி, கருக்குழியைச் சுத்தப்படுத்தி, மறு மாதத்திலேயே கரு தரிக்கும்படி செய்யும். இது அனுபவமான எண்ணெய். இதற்குக் கடுமையான பத்தியம் கிடையாது.

சிலருக்கு கருதரித்து 2, 3, 4-மாதங்கள் வரையில் தங்கியிருந்து திடீரென்று உடைந்துபோவதுண்டு. இவ்வகைத் தோஷமும் இந்த எண்ணெயில் நிவர்த்தியாகித் தீர்க்காயுளான கரு தரிக்கும். இதன் விலை ரூபா 2.

# யூகலிப்டஸ் ஆயில்

## (சுத்தமான நீலகிரித் தைலம்)



வைத்தியத்தில் கைதேர்ந்த ஒரு அனுபோக வைத்தியரால் செய்யப்பட்ட இந்தத் தைலம் வாந்திபேதி, பிளேக் வியாதி, தேள் முதலிய விஷ ஜந்துக்களின் கடி, கத்தி வகையறு, வெட்டுக் காயங்கள், நரம்புச் சுளுக்குகள், தீப் புண்கள், வெந்நீர்பட்டு வெந்த புண்கள், பிளவைகள், புரைபோன இரணங்கள், இருமல், கக்குவாய் இருமல், வாய் பிடிப்பு, குடைச்சல், வாய்வினால் உண்டாகும் கொடூரமான பல்வலி, தலைவலி, ஒற்றைத் தலைவலி, கண் எரிச்சல், கண் கட்டி முதலிய நோய்களுக்குக் கைகண்ட ஔஷதம். 1 அவுன்ஸ் புட்டி 1-க்கு விலை அணா 4.
1 ,, 1-டஜன் (12)-க்கு ரூ. 2—8—0

# கஸ்தூரி மாத்திரை.

குழந்தைகள் முதல் கிழவர்கள் [illegible] ர்க்கும் உண்டாகும் ஈளை, இருமல், சுரம், தலைப்பாரம், நெஞ்சில் [illegible] ப்பு, ஜல தோஷம் முதலியவைகள் தீரும். [illegible] விலை புட்டி 1-க்கு [illegible] 12.

---

தனலட்சுமி கம்பெனி, நெ. 1/6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்